உ

கணபதி துணை.

கொலைமறுத்தல்.

திருத்துறையூர்

சாந்தலிங்கசுவாமிகள்

அருளிச்செய்தது.

இது

திருப்போரூர்

சிதம்பரசுவாமிகள்

அருளிச்செய்த உரையுடன்

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஆறுமுகநாவலரவர்கள்

சிதம்பரசைவப்பிரகாசவித்தியாசாலைத் தருமபரிபாலகர்

விசுவநாதபிள்ளையால்

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

ஆறாம் பதிப்பு.

இரௌத்திரிஹு ஐப்பசிமீ.

உ

கணபதி துணை.

கொலை மறுத்தல்

மூலமும் உரையும்.

இன்ப மாய தறுதிடை யோங்கவுந்
துன்ப மாயது தூரத்து ணீங்கவு
முன்ப ராபரன் மொய்குழ லோடணைந்
தன்பி னீன்றவோ ரானையைப் போற்றுவாம்.

இன்பமாயது இடையறுது ஓங்கவும் - என்பது. மனோரதமான நன்மைகள் மேன்மேலும் உண்டாகவும்,—துன்பமாயது தூரத்துள் நீங்கவும். எ-து: தாபத்திரயங்களினாலே வரும் இடையூறுகள் தூரத்தின்கண்ணே நீங்கவும்,—முன் பராபரன் மொய்குழலோடு அணைந்து அன்பின் ஈன்ற ஓரானையைப் போற்றுவாம். எ-து. ஆதிகாலத்திலே பரமசிவன் பராசத்தியோடு கூடி அன்புடனே பெற்றருளிய ஒப்பில்லாத விக்கினேசுரனாகிய யானையைத் துதிப்பாம். என்றவாறு.

துன்பந் தூரத்துணீங்க என்றதனால், தம்முடைய மனோவாக்குக் காயத்துத் தோன்றாமல் நீங்க என்றாரெனக் கொள்க. இன்பமாயதோங்கவும் துன்பமாயது நீங்கவும் என்றதனால் ஆனந்தப்பேறும் அஞ்ஞானத்திழப்பு மென்றுமாம்.

இதன்கருத்து. இந்நூல் செய்துமுடியுமளவும் விக்கினநிவிர்த்தியுண்டாகவும், அதன்மேலும் உலகத்தின்கண்ணே குற்றந்தீர்ந்து விளங்கவும், வேண்டி விக்கினகர்த்தாவை வழிபட்டது.

திருமலிபூ மகனாதி யைவருமா
மொருபரமிச் சிறிய னேற்குந்
தருமிருதா டலைமிசைக்கொண் டஞ்சினர்தீக்
கறங்கொலைமை தள்ளிச் சார்தற்
கருமறையாகம நெறிச்சொற் பொருளமைத்திக்
கொலைமறுத்த லறஞ்சொன் மாண்பா
னிருமுணர்வி லேனுரையு நலந்தருமென்
றுளந்துணிந்தீண் டியம்பா நின்றேன்.

திருமலி பூமகனாதி ஐவருமாம் ஒருபரம் இச்சிறியனேற்கும் தரும் இருதாள் தலைமிசைக்கொண்டு. எ-து. அழகுநிறைந்த செந்தாமரை மலரினிடத்தே தோன்றிய பிரமாமுதலாகிய பஞ்சகர்த்தாக்களுந் தானேயாய் அவர்களையுங் கடந்து சர்வவியாபியாய் வாக்குமனாதீதமாயிருக்கும் பரமசிவம் தன்னுடைய கருணையினாலே கரசரணாதி அவயவங்களையுடைய ஆசாரியமூர்த்தியாய் இப்பூமியின்கண்ணே எழுந்தருளிவந்து ஒன்றுக்கும் பற்றாத சிறுமையுடையேற்கும் பிறவியாகிய கடலை நீந்தும்படி தெப்பமாகத் தந்தருளிய இரண்டு திருவடிகளையும் என் புன்றலைமேல் வைத்துக்கொண்டு அவைகளினது அருளினால்;—தீக்கு அஞ்சினர் கொலைமை தள்ளி அறஞ்சார்தற்கு. எ-து. நரகத்தில் வீழ்வதற்கு அஞ்சினவர்கள் கொலைத்தன்மையாகிய இழிக்கணை அப்பாற்படுத்தித் தருமத்தை அடையும்பொருட்டு,—அருமறை ஆகம நெறிச் சொற்பொருள் அமைத்து. எ-து. அருமையாகிய வேதாகமங்களிற் கொல்லாமைக்கு ஓதிய சத்தார்த்தங்கள் பொருந்தச்செய்து,—இக்கொலைமறுத்தல். எ-து. இந்தக்கொலைமறுத்தலாகிய நூலை,—அறஞ்சொல் மாண்பான் இரும் உணர்வு இலேன் உரையும் நலந்தரும் என்று உளந்துணிந்து ஈண்டு இயம்பா நின்றேன். எ-து. அறத்தின் பகுதியைக் கூறிய மாட்சிமையினாலே மிகுந்த அறிவின்மையனாகிய என்னுடைய புன்மொழியும் பெரியோரது சபையின்கண் நன்மையைத் தருமென்று மனசிலே துணிந்து இவ்விடத்து யானறிந்தமாத்திரஞ் சொல்லுகின்றேன். எ-று.

இ-து. கடவுள் வணக்கமும் முதனூலும் இந்நூலின் பெயரும் விடயபிரயோசனதிகாரி சம்பந்தமும் அவையடக்கமுங் கூறியது.

தருமிருதாடலை மிசைக்கொண்டு என்பதனால், கடவுள் வணக்கமாயிற்று. அருமறையாகமநெறி என்பதனால், முதனூலாயிற்று. இக்கொலைமறுத்தல் என்பதனால், நூற்பெயராயிற்று. இந்நூற்கு விடயமாவது கொல்லாமை. அது கொலைமைதள்ளி என்பதனாற் பெறப்பட்டது. பிரயோசனம் தருமப்பிராப்தி. அது அறஞ்சார்தற்கு என்பதனாற் பெறப்பட்டது. அதிகாரி நரகத்துக்கு அஞ்சினேன். அது அஞ்சினர் தீக்கு என்பதனாற் பெறப்பட்டது. சம்பந்தமாவது சத்தார்த்தங்கள். அது சொற்பொருளமைத்து என்பதனாற் பெறப்பட்டது. அறஞ்சொன்மாண்பானென்னுரையு நலந்தரும் என்றவதனால், அவையடக்கம் பெறப்பட்டது. அஃது எங்ஙனமெனின், சத்தத்திலே எழுத்துச் சொற்பொருள் யாப்பணிக் குற்றங்கள் பொருந்தினும், அர்த்தத்தில் வேதாகம விருத்தமாயினும், முடிவின்கண் எவ்விதத்தாயினும் வேதாகம சித்தமாகிய கொல்லாமையைச் சாதித்தலின் பெரியோர் இகழாரென்று உரைத்தது. என்போலுமெனின்; திருவள்ளுவர் "பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த—நன்மை பயக்கு மெனின்." என்ற பிரமாணம் போலுமென்றறிக. (க)

மேல் இந்தச்சாத்திரம் விளங்குதற்கு ஒருபீடிகாத்தம்பனங் கூறுகின்றார்.

எடுத்துளவெச் சமயிகளு முலகருஞ்சா
 ரோரவையி னிடையிற் றேன்று
முடித்தனைச்சூழ் தரவிளங்கு மதியினுயர்
 சைவரைவந் தொருவன் றாழ்ந்தீண்
டடுத்தபல வுயிர்த்தோற்றத் துயர்வுதாழ்
 வருளுகென வவனைத் தேற்றித்

தடுத்தபுறச் சமயிகட்குத் தாமுறுத்தி
நிறுத்துகின்றார் தம்பா லூற்றம்.

எடுத்துள எச்சமயிகளும் உலகரும் சார் ஓரவையினிடையில் தோன்றும் உடுத்தனைச் சூழ்தர விளங்கும் மதியின் உயர் சைவரை வந்து ஒருவன் தாழ்ந்து. எ-து. வேதாகமங்களைக் கைக்கொள்ளும் சைவர் முதலாகிய உட்சமயிகளென்றும் அவைகளைக் கைக்கொள்ளாத உலோகாயதன் சமணன் பௌத்தன் முதலாகிய புறச்சமயிகளென்றும் எடுத்துச் சொல்லப்பட்ட பல சமயவாதிகளும் இக்காலங்களில் விரிவாகத் தோன்றிய கற்பனு சமயிகளும் இவர்களல்லாத லௌகிகருங் கூடியிருந்த ஒருபெரிய சபையின்கண்ணே, நட்சத்திரகணங்கள் தன்னைச் சூழ நடுவே விளங்கும் பூரணசந்திரனைப்போலத் தோன்றா நிற்கும் ஒரு சைவாசாரியரை ஒரு பக்குவியானவன் வந்து நமஸ்காரம் பண்ணி எழுந்துஅஞ்சலியஸ்தனாய் நின்று,—ஈண்டு அடுத்த பல உயிர்த்தோற்றத்து உயர்வுதாழ்வு அருளுகென. எ-து. இவ்வுலகின்கண்ணேயுள்ள நாலுபேதமாகிய ஜீவயோனிகளில் ஒன்றுக்கொன்று அதிகமுந்தாழ்வுமாயிருக்குமோ எல்லாஞ் சமமாயிருக்குமோ தேவரீர் திருவாய்மலர்ந்தருளவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய,—அவனைத்தேற்றி. எ-து. அவனிருதயஞ் சம்மதிக்கும்படிக்கு வேதாகமங்களி லுள்ளபடியே கூறித் தெளிவிக்குமளவில்,—தடுத்த புறச்சமயிகட்கு உத்தரமுறுத்தித் தம்பால் ஊற்றம் நிறுத்துகின்றார். எ-து. அப்படி நீர் சொல்லுகிறது கூடாதென்று தடுத்துக்கூறிய புறச்சமயிகளுக்கு எதிருத்தரமும் உதாரணங்களும் அச்சபையினிருந்துள்ள ஆபாலபண்டிதராகிய சர்வசனங்களுக்குஞ் சம்மதம் வரும்படியே யுத்தியுக்தமாக எடுத்துக் காட்டித் தம்மிடத்திலுண்டாகிய நிலைமையைத் தாபிக்கின்றார். எ-று.

இ-து. சகல சமயங்களுக்குள்ளும் சைவசித்தாந்தம் அதிகமென்றும், அதில் உண்டாகிய வாக்கியம் வேதாகமசாரமாகையால் அதுவே பிரமாணமென்றும், கூறியது. (௨)

இந்த உலகத்தின்கண்ணே யுண்டாகிய இருவகைத் தோற்றமும் அவற்றானுயர்வுதாழ்வுகளுங் கூறுகின்றார்.

ஊற்றமிகுஞ் சராசரத்து ளுயர்ச்சிசரஞ்
சரத்துணரர் நரர்தம் முள்ளு
மேற்றமுந்தாழ்ச் சியுமுளபல் லுயிர்செகுத்துண்
டுடலைவளர்த் திடுங்கீ ழும்மேல்
சாற்றுமுயிர்க் கொலைபுரித றுயர்நெடுநா
ளென்றுமுடன் றுன்பொய் யென்றுந்
தேற்றமிக்கேன் றுயிர்தமைவீட்டினு மவற்றி
னுயிர்புரக்குந் தீதி லோரே.

ஊற்றம் மிகும் சராசரத்துள் உயர்ச்சி சரம். எ-து. அறிவுடைமையை ஒன்றுக்கொன்று அதிகமாகவுடைய தாபரசங்கமங்களென்று சொல்லப்பட்ட இருவகைத்தோற்றத்தினுள் அறிவினுயர்ச்சியினாலே தாபரங்களினுஞ் சங்கமமே அதிகமென்று சொல்லப்படும்.—சரத்துள் நரர். எ-து. அச்சரங்களினுள்ளும் அறிவினுயர்ச்சியால் மனுஷரே அதிகமென்று சொல்லப்படுவர். ஆகாரம் நித்திரை மைதுனம் பயம் எல்லாச்சரங்களுக்குஞ் சமமாயிருக்க, மனுஷரை அதிகமென்றது எப்படியென்னில், அப்படி ஆகாராதி மிருகங்களுக்கு உண்டாயினும், அவற்றுள்ளும் மனுஷரிடத்தில் விசேடத் தன்மையுண்டு. அஃது எப்படியெனின், கார்த்தல்-புளித்தல்-துவர்த்தல் - உவர்த்தல் - கைத்தல்-தித்தித்தலாகிய அறுசுவைப்பதார்த்தங்களுந்திவ்யாமுதமுமாகிய போசனங்கள் அறிந்து புசித்தலும், சிறக்க ஒப்பனைசெய்த தூங்குமஞ்சத்தின் கண்ணே நுண்ணிய பஞ்சிபெய்த மெத்தையின்மேல் தலையணை முதலாகிய கொட்டைகளும் பரப்பிச் சிறந்த பட்டுவிதானத்தின்கீழ் நித்திரை செய்தலும், ஆலிங்கனமாதியாகிய அறுபத்துநாலு கரணங்களுடன் ஸ்திரீகிரீடை பண்ணுதலும், மனோவிசாரத்தின் மிகுதியால் அச்சமடைந்த காலையினும் தேறி அதற்கேற்ற உபாயஞ்செய்து துயரம் நீக்கிக்கொள்

ளுதலும், மிருகாதிகளுக்கு இன்மையால்; அவற்றுள்ளும் மனுஷர் அதிகமெனக் கொள்க.

இதற்குப் பிரமாணம் : அருட்பிரகாசம். "ஆறுசுவையோ டருந்துத லுண்பஞ் சணை துயிறல்—கூறு கரண விதங்களின் மாதரைக் கூடிடுத—றேறி விசாரத்தி னுனச்ச நீங்குத றேறின் மண்மேல்—வேறு முயிர்க ட மக்கின்மை யானரர் மேலென் பவே." என்றும், மற்றும் வருவனவற்றுற்காண்க. இதுவன்றி யும், மிருகாதிகளுக்கு இன்மையாகிய நாணுடைமையும் மனுஷ ருக்கு உளது. ஆதலினுலும் விசேடமெனக் கொள்க. இதற்குப் பிரமாணம்: திருவள்ளுவர். "ஊணுடை யெச்ச முயிர்க்கெல் லாம் வேறல்ல—நாணுடைமை மாந்தர் சிறப்பு." என்றும், மற் றும் வருவனவற்றுற் காண்க.

நரர் தம்முள்ளும் ஏற்றமும் தாழ்ச்சியும் உள. எ-து. இங் ஙனம் உயர்ச்சி யென்று கூறப்பட்ட மனுஷருள்ளும் உயர்ந் தோர்களுந் தாழ்ந்தோர்களும் உண்டு. அங்ஙனமாயின், உயர்ந் தோர் யாவர் தாழ்ந்தோர் யாவரெனின்;—பல்லுயிர் செகுத்து உண்டு உடலை வளர்த்திடும் கீழ். எ-து. விவேகத்தையுடைய மனுஷராகத் தோன்றியும் மற்றுமுண்டாகிய பலவுயிர்களையுங் கொன்று அவைகளின் மாமிசத்தைப் புசித்துத் தமது மலவுடலை வளர்க்கா நிற்பர்கள் கீழோர். அம்மேல் சாற்றும் உயிர்க்கொலை புரிதல் நெடுநாள் துயர் என்றும் உடல்தான் பொய்யென்றும் தேற்றம் மிக்கு ஏன்று உயிர் தமை வீட்டினும் அவற்றின் உயிர் புரக்கும் தீது இலோரே. எ-து. அழகிய மேலோராவார் உல கின்கண்ணே சொல்லப்பட்ட யாதொரு சீவகொலையைப் பண் ணுமிடத்து அக்கொலைமையானது ஆன்மா நித்தியனுதலால் அநேககாலந் தொடர்ந்து துக்கத்தை விளைக்குமென்றும் இச் சரீர வாழ்க்கை அநித்தியம் இதனை நாங்காப்பதற்கு எண்ணுதல் நீர்க்குமிழிக்குப் பூண்கட்ட நினைத்தலையொக்கும் ஆதலின் இத னைக்குறித்து நம்மை நெடுநாள் வருத்துவதொரு சீவகொலை

யைப் பண்ணவொண்ணாதென்றும் அறிவினை மிகப்பொருந்தி ஒருசீவனுமேல தமக்குச் சரீர ஆனிவருமிடத்தும் அதினுடைய சரீரத்துக்கு ஒரு ஆனிபண்ணுமதற்காக்குங் குற்றமற்ற நல்லோர்கள். எ - று.

இதற்குப் பிரமாணம்: திருவள்ளுவர். "தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறிது—இன்னுயிர் நீக்கும் வினை." என்றும், காசிகாண்டம். "பிறரிடை யின்னுயி யற்றிடிற் றமக்குப் பிழைப்பறவெய்து மென்பதனை—யறிகுந ரறிஞ ராதலா லுயிர்க ளனைத்தையுந் தம்முயிர்போல—நெறியினிற் கருத லினியவா மைந்து புலனையு நெறியலா வழியிற்—பொறியினிற் செலுத்தா தடக்கனன் குணர்ந்தோர் புலமையோ ரொழுக்கெனப் புகல்வார்." என்றும், மற்றும் வருவனவற்றுற் காண்க. இதன்கண் தேற்றமிக்கென்பதனால், உயர்ச்சி தாழ்ச்சி அறிவைப்பற்றி நின்றதெனக்கொள்க.

இ-து. சராசரபேதங்களின் மனுஷரே அதிகமென்றும், அவருள்ளுஞ் சீவகொலை பண்ணாதவர்களே உயர்ந்தோரென்றும் கூறியது. (அ)

மேற் சீவகொலை செய்தமையால் வருந் தாழ்வேதென்று கூறிய உலோகாயதனை நோக்கி உத்தரங் கூறுகின்றார்.

இங்ஙனம் வாதிகள்வினா பாட்டிலே கூறாமையின், கற்பனையேயெனின்; அப்படியன்று. இந்நூல் அவாய் நிலைப்பொருள். அஃதாவது வினாவினைக்காட்டுவதாகிய விடையம்மாத்திரம் கூறுவது. ஆதலின், விடையினுக்கு இசைந்த வினாவினை உரையின்கண் வருவித்ததெனக் கொள்க.

தீயவினைத் தலைகொலைமா துயர்தரும்பின்
புன்மைதொன் னூலெரித்து வாழ்நீ
டாயவொரோ வினைகளிகத் தினுமுறலாற்
புலமருந்தற் கங்கோ ரங்க

மேயுமிற் பாயுமிதி லறிவுருவே
றிவண்புகலு முளதி யாமுங்
காயமிது கிடப்பமற்றோ ருடல்கள்விற்
றினம்புகலோர் காதை யன்றே.

கொலை தீயவினைத்தலை. எ-து. கொலையானது ஒருவன் செய்யுந் தீவினையாகிய ஒருருவிற்குத் தலையென்னப்படும். அஃது எத்தாலென்னில்; உயிர்களுக்கு இதஞ்செய்தலே புண்ணியமும் அகிதஞ் செய்தலே பாவமும் என்று அறநூல்களெல்லாம் ஓதுதலின்; கொலைமைக்கு மேம்பட்டபாவம் அதிகமின்மையின், கொலைமையே பாவத்துக்கெல்லாம் முதன்மையெனப்படும். ஆதலிற் கொல்லாமையே புண்ணியத்துக்கெல்லாம் முதன்மை யென்பதும் ஆயிற்று.

இதற்குப் பிரமாணம்: திருவள்ளுவர். "அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்—பிறவினை யெல்லாந் தரும்." என்றும், சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம். "நல்ல நினைப்பொழிய நாள்களி லாருயிரைக்—கொல்ல நினைப்பனவுங் குற்றமு மற்றொழியச்—செல்வ வயற்கழனித் தென்றிருவாரூர்புக்—கெல்லை நினைத்தடியே னென்றுகொ லெய்துவதே." அன்றியும், "கொன்று செய்த கொடுமை யாற்பல சொல்லவே—நின்ற பாவ வினைக டாம்பல நீங்கவே--சென்று சென்று தொழுமின் றேவர்பிரானிடங்—கன்றி ளேடு பிடி சூழ் தண்கழுக் குன்றமே." என்றும், சிவஞானதீபம். "கொலையாதி நெறியகன்ற ஞானந் தானே கூறரிய மேலான ஞானமாகுங்—கொலையாதி யகன்றொழுகுந் தவங்க டாமே குற்றமில்லா நற்றவமென் றுரைக்கு நூலுங்—கொலையாதி யகற்றிய நல்லறங்க டாமே குவலயத்தி லொப்பரிய வறங்க ளாகுங்—கொலையாதி யகன்றுபெறுஞ் செல்வந் தானே கூறிலுயிர்க் கிதமானவாழ்வ தாமே." என்றும், சிதம்பரபுராணம். "வருணமெண்ணிலவுள் வேத மறையவ ருயர்ந்தோர் நீதி—யருளுமாச் சிரமந்தன்னிற் றுறந்தவ ரதிகரென்ப—பெருகிய வறத்திற் கொல்லாப் பேரறம் பெரிது

நன்கு—தருபவ ரவருட் டக்க தேசிகர்தலைவ ராவார்.'' என்றும், இதிகாசம். ''ஆனையடியி லடங்காவடியில்லை—தானதுபோ லிற்கின்ற தன்மைதா—னுனுயிரைக்—கொல்லா வறத்தின் கொழுநிழற்கே யுள்ளடங்கு—மெல்லா வறமு மிசைந்து.'' என்றும், மற்றும் வருவனவற்றுற் காண்க.

மேல்வினு. இங்ஙனம்—கொலைமையான் வரும்பாவமானது என்செய்யும்?

மேல்விடை. மாதுயர்தரும். எ-து. நெடுநாள் நீங்குதற்கு அரிதாகிய மகத்துவமுடைய துன்பத்தைத் தரும்.

மேல்வினு. இங்ஙனம் ஒருவன் கொலைசெய்தவுடனே அதனுல் வருந் துன்பத்தை அனுபவிக்கக் கண்டிலேம்.

மேல்விடை. பின்பு. எ-து. இம்மையிற் சிலகொலைகளைப் பண்ணினவன் இம்மையிலே துன்பங்களை அனுபவியாவிடினும், சரீராந்தத்தில் நரகத்தையடைந்து மகாதுயரங்களை அனுபவித்துப் பின்னும் நரகசேடத்தினுற் பூமியின்கண்ணே தோன்றி அந்தச்சேடபலமாகிய துக்கங்களையும் இவ்விடத்திலே அனுபவிப்பானென்பதே நிச்சயம். அது என்போலவெனின், ஒருவேளாண்மை செய்தவனுக்கு அதன் பலமானது காலாவதியிற் புசிப்புமாய் மேலைக்கு வித்துமானதுபோலவெனக் கொள்க.

இதற்குப் பிரமாணம்: சிவஞானசித்தி. ''மேலைக்குவித்துமாகிவிளைந்தவை யுணவுமாகி—ஞாலத்து வருமா போல நாஞ்செயும் வினைக ளெல்லா—மேலத்தான் பலமாச் செய்யு மிதமகிதங்கட் கெல்லா—மூலத்த தாகி யென்றும் வந்திடு முறைமையோடே.'' என்றும், மற்றும் வருவனவற்றுற்காண்க. இம்மையிற்செய்த கொலையானது சரீராந்தத்தில் வருத்துமென்பதற்குப் பிரமாணம்: திருவள்ளுவர். ''உயிருடம்பி னீக்கிய ரென்பர் செயிருடம்பிற்—செல்லாத்தீ வாழ்க்கையவர்.'' அன்றியும், ''கொல்லாமைமேற்கொண்டொழுகுவான் வாழ்நாண்மேற்—செல்லா துயிருண்ணுங் கூற்று.'' என்றும், திருமந்திரம். ''கொல்

விடுகுத்தென்று கூறியமாக்களை—வல்விடி காரர் வரிகயிற் றுற் கட்டிச்—செல்விடு நீரென்று தீவாய் நரகிடை—நில்விடு மென்று நிறுத்துவர் தாமே.'' என்றும், சிவதருமோத்தரம். ''உற்றிடுவ ருரைத்ததுய ரனைத்தினையு முயிர்க்கிரக்க—மற்றுவதைத் தவை தம்மையவலமெனு தவற்றானைத்—துற்றினரு மற்றுமுள கொலை புரிந்த துரிசினரும்—பற்றுமிலர் படுந்துயர்க்குக் கடுந்தூதர் வலைப்பட்டே.'' என்றும், சிவஞானதீபம். ''எவ்வுயிரும் பராபரன் சந்நிதிய தாகு மிவைக்குமுயி ருடலனைத்து மீசன்கோயி—லெவ்வுயிரு மெம்முயிர்போ லென்று நோக்கி யிரங்காது கொன்றருந்து மிழிவி னோரை—வவ்வியம தூதருந் தண்டஞ்செய்து வல்லிரும்பை யுருக்கியவர் வாயில் வார்த்து—வெவ்வியதீ யெழுநரகில் வீழ்த்தி மாறு வேதனை செய் திடுவரென வோது நூலே.'' என்றும், இதிகாசம். ''இந்நோய் நமக்குண்டென் றெண்ணாதே யெவ்வுயிரு—முன்னேவக் கொன்றுண்ணு மூர்க்கர்தா - மெந்நோவும்—பண்ணப் படுநரகிற் பாவிகளிற் பாவிகளென்--றெண்ணப் படுவா ரிசைந்து.'' என்றும், மற்றும் வருவனவற்றுற்காண்க. நரகசேடமானது மறுசென்மத்தினுந் துக்கந்தருமென்பதற்குப் பிரமாணம்: சிவதருமோத்தரம். ''கருவினுளழிவன் முற்றிக் கழிந்து—ணழிவன்காளைப்—பருவமுற் றழிவ னிகை பகர்ந்துபின் னுதவாப் பாவி—பெருவலை கண்ணி யாலும் பிடித்துயிர் வதைத்த பேதை—கருதிய பொருளைத் தக்கோர்க் குதவிடான் றினைத்தகையான்.'' அன்றியும், ''அவயவமனைத்துங் குன்றி யழிந்திடு மாக்கை யாருன்—சுவையினை விரும்பியுண்ட துட்டர்கள் சோலை தன்னைத்—திவலைய திரைநீர் தேங்குந் திண்ணிய தீரந் தன்னை—யவமதிபாலே சால வழித்திடு மற்பர் தாமும்.'' என்றும், நாலடியார். ''இரும்பார்க் குங்காலரா யேதிலார்க் காளாய்க்—கரும்பார் கழனியிற் சேர்வர் - சுரும்பார்க்கும்—காட்டுளாய் வாழுஞ் சிவலுங் குறும்பூழுங்—கூட்டுளாய்க் கொண்டுவைப்பார்.'' அன்றியும், ''அக்கே போலங்கை யொழிய விரலழுகித்—துக்கத் தொழுநோ யெழுபவே - யக்கா—லலவனைக்

சாதலித்துக் கான்முறித்துத் தின்ற—பழவினை வந் தடைந்தக் கால்.'' என்றும், மற்றும் வருவனவற்முற் காண்க.

மேல்வினு. அப்படிக் கொலைத்தீமைகளைப் பண்ணினவன் சென்மாந்தரத்தில் நரகத்தை அனுபவித்து நரகசேடத்தால் மறு சென்மத்தினுந் துன்பத்தை அனுபவிப்பனென்று துணிந்தது எதினுல்?

மேல்விடை. தொன்னூல் தெரித்தவாற்று ஈடாய ஒரோ வினைகள் இகத்தினும் உறலால் உண்மை. எ-து. ஒருவன் செய்த வலிய தீவினைகளானவை மறுமைக்கண் வந்து நரகத்தில் அழுத்துமாயினும் இம்மையிலும் வருத்துவதாகிய தம்முடைய வேகத்தைக் காட்டுமென்று மறைமொழி கூறுகையால் அவ்வுரையின்படியே மிகுத்த பாவத்தின் வேகமானது செய்தவுடனே ஒருத்தனை வருத்தக் காணுதலின் மறுமைக்கண் நரகத்தில் அழுத்துமென்பதே சத்தியம். வேகமாவது யாதெனில், விஷத்தை யுண்டானொருவனை அந்த விஷமானது வருத்திக்கொல்லுதலின்முன்பே நெடிவுதோன்றுதல் போலவும், நெருப்பினுற் சுடுண்டானொருவனுக்கு அது புண்ணுவதன்முன்பே எரிதல்போலவும், சிவத்துரோகாதி அதிபாதகமும் பிரமகத்தியாதி மகாபாதகமும் மறுமைக்கண் எரிவாய் நரகமாதிய நரகத்தில் அழுத்துதலின்முன்பே; இம்மையிற் செய்தவுடனே சித்தப்பிரமையாதி துக்கங்களும் பிரமகத்தியாதி துக்கங்களும் அடைதலெனக் கொள்க.

இதற்குப் பிரமாணம்: சுந்தரமூர்த்திநாயனூர்தேவாரம். ''குற்றொருவரைக் கூறைகொண்டு கொலைகள்சூழ்ந்த களவெலாஞ் — செற்றொருவரைச் செய்த தீமைக ளிம்மையேவருந் திண்ணமே—மற்றொருவரைப் பற்றிலேன் மறவாதொழி மடநெஞ்சமே—புற்றரவுடைப் பெற்றமேறி புறம்பயந் தொழப் போதுமே.'' என்றும், சசிவர்ணபோதம். ''மிகமேவிய புண்ணிய பாவமெனும் வினையின் பயன் வேறொரு காலமுறு—

திகமே வருமென் பதனுலுளரோ யெல்லா மிவனைச் செறவெய்தினவே.'' என்றும், மற்றும் வருவனவற்ருற் காண்க.

மேல்வினு. அப்படி இம்மைக்கண் ஒருபாவத்தைச் செய்தவன் சரீராந்தத்தில் நரகத்தை அனுபவிப்பானென்று நீர் சொல்லுகிறது கூடாது; அஃது எத்தாலென்னில், இவ்விடத்திற் பாவாதிகளைச் செய்தவன் இறந்துபோகவும் அவனைத் தகனம்பண்ணிப்போடவும் காண்கையால்?

மேல்விடை. பலமருந்தற்கு அங்கு ஓரங்கம் ஏயும். எ-து. புண்ணியபாவங்களைப் பண்ணினவன் அவற்றினது பலன்களைச் சுவர்க்க நரகத்தின் கண்ணே அனுபவித்தற்குச் சரீராந்தத்திற் பாவப்பருவமானுல் பூததேகமும் புண்ணியப்பருவமானுல் பூதசாரதேகமும் யமதூதர் ஒருகணத்திலே உண்டு பண்ணுவார்கள். அந்தச்சரீரஞ் சுகதுக்கானுபவத்தைப் பொருந்தும்.

இதற்குப் பிரமாணம்: சிவதருமோத்தரம். "அருந்துயர்க் குழியி னுழ்வாராகமே பாவத்தாகும்—பொருந்திய பூதத் தாலே யிமைத்திடும் போது தன்னுட்—புரிந்துவின் புகுவாராகம் புண்ணியத்தாலே யாகும்—பொருந்திய பூதசாரத் தொருகணப் பொழுது தன்னில்,'' என்றும், மற்றும் வருவனவற்ருற் காண்க.

மேல்வினு. ஒருவன் இம்மையிலே செய்த பாவத்துக்கு ஏதுவாய் மறுமையிலே ஒரு சரீரத்தை உண்டுபண்ணி நரகத்தில் வாதிப்பரென்பது எத்தினுக்கொக்குமென்னில்; குற்றஞ்செய்தவன் தப்பிப்போகக் குறுக்கே வந்தவனை வாய்மேல் அடித்தானென்பது போலும்; ஒருவன் பசிக்க மற்ருெருவன் உண்டானென்பது போலும்; இப்படி அனேகமாக உலகத்தின்கண்ணே சொல்லும் பரியாச வார்த்தைகளுக்கு ஒக்கும். இந்தச் சரீரஞ் செய்த பாவத்துக்கு அந்தச்சரீரம் வாதைப்படுமென்றீர். அதற்கும் இதற்குஞ் சம்பந்தம் ஏது?

மேல்விடை. அதிற்பாயும் இதில் அறிவு. எ-து. அந்தச் சரீரத்தின்கட் சென்று புகும் இந்தச்சரீரத்தினின்றும் புண்ணிய பாவங்களுக்கு ஏதுவாகிய இதாகிதங்களைப் பண்ணினவனுடைய அறிவு.

இதற்குப் பிரமாணம்: சிவதருமோத்தரம். "திரணுறுசெளு கைபோற் சீவன் நீண்டியே — வருமுரு வதனைமுன் னுடலை மாற்றிடுந் — தருமமே பருவமேற் சாரும் வானினைப் — பருவ மேற் றீவினை நிரயம்பற்றுமே." என்பதனாற் காண்க.

மேல்வினா. அப்படி ஒரு சரீரத்தின்கண்ணே மற்றொரு சரீரத்தின்கணுண்டாகிய அறிவுசென்று புகுமென்னுமிடத்துத் தருணபருவத்தை யிச்சித்துடைய ஒருவிருத்தன் ஒரு தருணபருவன் இறக்கக்கண்டவிடத்து அவனது சரீரத்திற் பாய்தல்வேண்டும். அஃதில்லாமையின், ஒருசரீரத்தின் அறிவு மற்றொரு சரீரத்திற் புகுமென்றல் கூடாது.

மேல்விடை. இவண் வேறு உருப்புகலும் உளது. எ-து. இவ்விடத்தும் பரகாயப்பிரவேசம் பண்ணுவாருமுண்டு.

மேல்வினா. அப்படிப் பரகாயப்பிரவேசம் பண்ணுதல் இவ்விடத்து நாங்கண்டேமில்லை. அதுவும் அம்மி பறக்கக்கண்டேன் என்பதுபோலும் உலககற்பனு கதை.

மேல்விடை. யாமும் காயம் இது கிடப்ப மற்றோருடல் கனவில் தினம்புகல் ஓர் காதையன்றே. எ-து. அப்படிப் பரகாயப்பிரவேசம் பண்ணுதல் இப்பொழுது இவ்விடத்திற் காணுமையால் கற்பனுகதை யென்றாயாயினும், நாடோறும் யாமெல்லோருஞ் சொப்பனத்தின் கண்ணே இந்தத் தேகத்தைவிட்டு வேறொரு தேகத்திற் பாய்ந்து எவ்விடத்துஞ் சஞ்சரித்தலால், ஒரு சரீரத்தின்கண் இருந்துள அறிவு மற்றொரு சரீரத்தின்கட் கன்மத்தாற் சென்று புகுமென்பதே உண்மையென் றறிவாயாக. எ-று.

இதற்குப் பிரமாணம்: சிவஞானசித்தி. "பன்னக மண்ட சங்கள் பரகாயந் தன்னிற் பாய்வோர்—துன்னுதோன் முட்டை யாக்கை துறந்து செல்வதுவே போல—வுன்னிய வுயிர்க லே வுடல்விட்டு வானினூடு—மன்னிடி நனவு மாறிக் கனவினை மருவுமாபோல்." என்றும், திருமந்திரம். "நாக முடலுயிர் போலுநல் லண்டசம்—போகு நனைவைக் கனவின் மறத்தல் போ—லாகு மரனரு ளாற்சென் றருவினைக்—கேகு மிடஞ் சென் றிருபய னுண்மையே." அன்றியும், "காயுங் கடும்பரி கால்வைத் தாங்கல்போற்—சேயுமிடஞ்சென் றலவவும் வல்லது—ஓயுந் துயிற்போல வொன்றைவிட் டங்கொன்றி—லேயு மவரென்ன வெய்திடுங் காயமே." என்றும், "சொப்பனத் திய ங்குகாயஞ் சூக்குமமதனுற் றுய்க்கு—நற்பயன் றுறக்கந் துன்ப நரகுபின் னவைச் சார்த—லுற்பவ மிவைகணிங்கி யொன் றையு முணரா யாகி—நிற்பன சுழுத்தி மேல்வை நிகழ்வசங் காரம்போலும்." என்றும், மற்றும் வருவனவற்றுற் காண்க.

இ-து. கொலைத்தீமையுடையார் நரகம் அனுபவிக்குமிடத் துத் தத்தம் பாவத்தளவிற்கேற்றாக அவ்விடத்துண்டாகிய ஒரு பூததேகத்தைப் பொருந்துவரென்று சாதித்தது. ()

இப்படிக் கூறிய சைவசித்தாந்தியை நோக்கிப் பின்னும் உலோகாயதன் கூறுகின்றுன்.

சொப்பனத்தின்கண் வேறொருசரீரம் வந்து பொருந்து மென்ற வார்த்தை பழுது. கனவிமல தோன்றுவதெல்லாம் நன வின்கட்கண்ட நினைவாகு மென்றவார்த்தைக்கு உத்தரங் கூறுகின்றார்.

காதறரு முருவிதுவான் பறத்தலின்றுங்
கதற்கியல்பாய்க் காண்ட லானும்
போதுறைவோ னுதியர்க்ண் முகமர்தி
கனவிலியாம் பொருந்தா தானு

மோதுநினை வலவுணர்வா றுயிர்க்குணமிவ்
வுடல்பிணத்தொன் றுணரக் காணேம்
வாதமுள திலையுறக்கத் துணர்வுணர்வ
துயிரெனக்கொண் மதித்தே சில்லோய்.

காதல் தரும் உரு இது வான்பறத்தல் இன்று ஆங்கு அதற்கு இயல்பாய்க் காண்டலானும் போதுறைவோன் ஆதியர்கள் முகமாதி கனவில் யாம் பொருந்தாதானும் ஓதும் நினைவு அல. எ-று. இவ்விடத்து நம்மால் இச்சிக்கப்பட்ட இந்தச் சரீரத்துக்கு ஒருகாலும் ஆகாயத்திற் பறக்குந்தன்மை யின்மையானும், கனவின்கண்ணே தோன்றிய சரீரத்துக்கு ஆகாயத்திற் பறக்குதல் இயல்பாய்ப் புதுமையும் அதிசயமுந்தோன்றக் காண்டலினுலும், பிரமாவாதியாகிய தேவதைகளுக்கு உண்டாகிய பலமுக முதலிய உறுப்புக்கள் நமக்குக் கனவின்கண் உண்டாகாமையானும், சொப்பனதேகத்தை இச்சரீரத்தின்கண் கண்டு கேட்டிருந்தமையால் அந்த நினைவென்குதல் கூடாது. அதெப்படியென்னில், சொப்பனதேகம் பறக்கக்காண்கையாலும், இத்தேகத்துக்கு அஃதில்லாமையாலும், கண்டநினைவல்ல. அல்லது தேவதைகள் ஆகாயகமனம் பண்ணுவார்களென்று கதைகளிற் கேட்ட நினைவென்னில், புராணகாவியங்களில் பிரமாவாதி தேவதைகளுக்கு அநேக முகங்களும் அநேகங்கண்களும் அநேகங் கைகளும் உண்டென்று கேட்டிருக்கின்றோம். ஆகையால், அவ்வடிவமும் நமக்குச் சொப்பனத்தின்கட் பொருந்தல் வேண்டுமே. அஃது இல்லாமையால், கேட்ட நினைவுமல்ல; ஆதலிற் சொப்பனத்தின்கண் வேறொரு தேகம் வருமென்பதே சத்தியம்.

இதற்குப் பிரமாணம். "இவ்வுடல் கனவூ டெங்கு மியங்குரு வலவன் றென்ப—ரவ்வுடல் பறத்த லாற்கண் டுளநினை வல்ல வாகு—மெவ்வமி லிமையோர் கேள்வி நினைவெனி லிந்திராதி—திவ்விய வுருக்கொளேமாற் றிகழ்ந்ததவ் வுருவே றென்னே." என்றும், மற்றும் வருவனவற்றுற் காண்க.

மேல்வினா. அப்படிச் சொப்பனத்தின்கண் இவ்விடத்திற் காணாதன கண்டேமாயினும், அதுவும் இத்தேகத்தின் குணமல்லது வேறொரு தேகமென்பது கூடாது. ஆதலின், ஒரு தேகத்தின் குணம் மற்றொரு தேகத்தின்கட் சென்று பொருந்துவதேயில்லை. உண்டென்னில், ஒரு ரத்நத்தினது காந்தி மற்றொரு ரத்நத்திற்சென்று பொருந்தவேண்டும். அஃதின்மையால், இச்சரீராந்தத்தில் இதனுடைய குணமாகிய அறிவு வேறொருதேகத்திற் சென்று புகுவதுமில்லை.

மேல்விடை. உணர்வார் உயிர்க்குணம். எ-து. நீ ஒன்றின் குணம் ஒன்றிற்சென்று புகாதென்பது ஒக்கும். இங்ஙன முண்டாகிய அறிவு இத்தேகத்தின் குணமன்று. இத்தேகத்தின்கட் கன்மவசத்தாற் பொருந்தியிருந்துள ஓரான்மாவினுடையகுணம்.

மேல்வினா. நீர் இங்ஙனம் இத்தேகத்தின்கண் இதற்கு அன்னியமாய் ஒரு சீவனுண்டென்பது கூடாது. அஃதேனெனில், இங்ஙனம் காணப்பட்டுள்ள பிருதிவி-அப்பு-தேயு-வாயு என்னும் இந்த நான்கு பூதமும் நித்தியமாயுள்ளன. அவற்றுள் வாயு சலனகுணத்தையுடையது ஆகையால் மற்றுள பூதங்கட்கு அதனோடு கலப்புண்டாகுதலின், இச்சரீராதிகள் தோன்றும். அப்படித்தோன்றினவென்பது எத்தாற்கண்டதென்னில்; மண் கடினமாயிருத்தல்போல, சரீரத்தில் என்புதோலாதிகள் கடினமாய் மலந்தடித்து வீழ்தலினாலும், சலம் நெகிழ்ந்து பதஞ்செய்தலின் இரத்தாதிகள் நெகிழ்ச்சியுடையனவாய்ச் சலம் வீழ்தலினாலும், நெருப்புச் சுட்டொன்றுவித்தலின் உதராக்கினி அன்னபானாதிகளைச்சுட்டொன்றுவித்துத் தொக்கின்கண் வெப்புத்தோற்றுதலினாலும், வாயுச் சலித்துத் திரட்டுதலின் இச்சரீரத்துக்கு ஓடுதலாதி சலனத்தைப் பண்ணி நாசியாதிகளின் இயங்கக் காணுதலினாலும், அந்தப் பூதக்கலப்பு இந்தச் சரீரமென்பது பிரத்தியட்சம். பாக்கு வெற்றிலை சுண்ணாம்பு மூன்றுங் கூடினவிடத்தில் ஒரு சிவப்புத் தோன்றுதல்போல, பூத சையோகத்தினால் முன்

பில்லாத மனமுந்தோன்றும். இதுவன்றி, நீர் இந்தச் சரீரத்தில் ஒரு ஆன்மா உண்டென்னில், இப்படிப் பிரத்தியட்சமாகக் காண வேண்டும். அப்படிக் காணப்படாமையின், ஆகாசத் தாமரைப் பூவும் முயற்கொம்பும் ஆமை மயிரும் மணலிற் றைலமும் உண் டென்பதையொக்கும். ஆதலின், ஆன்மா உண்டென்பதேயில்லை. இவ்விடத்துத் தோன்றும் உணர்வெல்லாம் தேககுணம்.

மேல்விடை. இவ்வுடல் பிணத்து ஒன்று உணரக்காணேம். எ-து. நீ இந்தத் தேகத்தின் குணம் அறிவென்னுமிடத்துப் பிணமான அவதரத்தில் தேகங் கிடக்கக் கண்டேம் - உணர்வு அங்ஙனங் கண்டிலேம். ஆதலின் உணர்வு தேகத்தின் குண மென்பது கூடாது.

மேல்வினு. பிணமான சரீரத்தில் வாயு நீங்குதலால், அக் கினி அவியும். அப்பொழுது அறிவுங்கெடும். அவைகள் நீங்கி யது எவ்விதத்தாற் கண்டதென்னில், பிணத்தினுசியிற் காற்றுங் கண்டிலேம். தொக்கில் வெப்பமுங் கண்டிலேம். ஆதலின், அவைகள் நீங்கியது உண்மை. நீங்குதலின், சரீரத்தின்கண் அறியாமை யடையும்.

மேல்விடை. வாதம் உறக்கத்துஉளதுஇலைஉணர்வுஉணர் வது உயிரெனக்கொள் மதித்தேசு இல்லோய். எ-து. நீ இங் ஙனம் பிணமான காலையில் நீங்குமென்ற வாயு உறக்கத்தின் கண் நீங்காமே யிருக்கவும், அப்பொழுது தேகத்தின் கண்ணே பாம்பு ஏறிவருதலுஞ் சத்துருவருதலுஞ் சரீரம் அறியாமே கிடத் தலால், வாயு நீங்க அறிவுகெடுமென்பது கூடாது. ஆதலிற கன்மவசத்தால் அவத்தைகடோறும் ஒடுங்கியும் உணர்ந்தும் வருவானெுர் ஆன்மா உளனென்று அறிவாய் ஞானப்பிரகாச மின்றி இருளடைந்த புத்தியினையுடையோய். எ - று.

இதற்குப் பிரமாணம்: சிவஞானசித்தி. "உடலின்வே றுயிரே னிந்த வுடலன்றோ வுணர்வ தென்னி—னுடல்சவ மான போது முடலினுக் குணர்வுண் டோதா—னுடலினின் வாயுப்

போறு லுணர்ச்சியின் றுடலுக் கென்னி—னுடலினில் வாயுப் போகா துறக்கத்து முணர்வ தின்றே.'' என்றும், சிவப்பிர காசவெண்பா. ''உடம்பு நீயல்லை யுறக்கத்தி லெல்லா—மடங் கப் பிணமாகையாலே - திடம்படவும் — வேறுதா னுண்டோ விடாதே யருந்துகின்ற—சோறுகாண் காயச்சுமை.'' என்றும், மற்றும் வருவனவற்ருற் காண்க.

இ-து. சொப்பனதேகம் இத்தேகத்துக்கு அன்னியமென் றும், இத்தேகங்களைக் கன்மவசத்தாற் பொருந்துவானோர் ஆன் மாவுளனென்றும், கூறியது.

இவ்வளவுஞ் சரீரமே ஆன்மாவென்னும் உலோகாயதனை மறுத்துச் சரீரத்துக்கு அன்னியமாய் ஒரு ஆன்மா உண்டென் றும், அவன் இம்மைக்கண் செய்த கொலைத்தோடத்தைச் சரீ ராந்தத்தில் வேறொரு தேகத்தைப் பொருந்தி நரகத்தில் அனுப விப்பது உண்டென்றும், சாதித்தது. (ரு)

இப்படிக்கூறிய சைவசித்தாந்தியை நோக்கி மேல் ஏசுமத வாதி கூறுகின்ருன்.

இங்ஙனம் உலோகாயதன் கூறிய உரைபழுது. நீர் கூறிய வற்றுள்ளும் சிறிது ஒக்கும் சிறிது ஒவ்வாது. யாதொக்கும் யாதொவ்வாதெனில், நீர் கொலையாற்பாவம் உண்டென்பது ஒக் கும். எல்லாக் கொலையாலும் பாவம் உண்டென்பது கூடாது. அஃது எங்ஙனமெனின், மனுஷரை மனுஷன் கொன்ருல், கொன்றவன் நரகத்தழுந்துவான். அஃது உண்மை. மிருகாதி களைக் கொன்றதனுல் பாவம் உண்டென்பதில்லை. அஃதேனெ னில், மிருகாதிகளை மனுஷருக்கு உபகாரமாகக் கர்த்தர் படை த்துக்கொடுத்தாரென்று எங்கள் சத்தியவேதத்தில் இருக்கின்ற தென்று கூறிய அவனுடைய உரையை மறுத்து மேலுத்தரங் கூறுகின்ருர்.

தேசிறைமா னுடர்க்கெவையு மருளினுண்டீக்
கேடமையென் செய்வாய் மாந்தர்க்

காசருள்வ தெனைவேங்கை யாதியச்சா
 திகளவர்சொற் கடங்கு மாறென்
காசடைந்திம் முறையுமோரோர் காற்றிரிவ
 தெனமுனஞ்செய் கருமந் தன்னாற்
பேசுமச் ராதியுரு வுயிர்க ளூற
 லுண்மையுன்சொற் பிழையா மன்றே.

தேசு இறை மானுடர்க்கு எவையும் அருளின் உண்டு ஈக்கிடம் ஐ என் செய்வாய். எ-து. ஞானரூபியாகிய ஈசுரன் மனுஷருக்கு உபகாரமாக மிருகாதிகளைப் படைத்தானாகில், மலத்தின்கண் ஈயால் உண்டாகிய நுண்ணிய புழுவும் மற்றும் பரமாணுவினும் நுண்ணிய செந்துக்களும் உனக்கென்ன பிரயோசனத்துக்கு வரும். அவைகள் அப்பிரயோசனமென்னில், கருத்தா ஞானமயனென்பது கூடாது.

இதற்குப் பிரமாணம்: ஏசுமத நிராகரணம். "அறிகிலை நரர்க்காய்வேண்டி யளித்தனன் மிருகமாதி—யிறையவ னென்றுயோரீ யீன்றிட மலமீ தூருஞ்—சிறுபுழு விரையு றுதென் செய்குவை யதனை நோக்க — வறிவரு நுணியதேகி யனந்தநீ யவையென் செய்வாய்." என்பதனூற்காண்க.

வாதியுத்தரம். சீவன்களிலே சிறியவைகளெல்லாம் பெரியவைக்கு இரையாய் ஒன்றுக்கொன்று வேண்டியிருத்தலின், எவையும் பாரம்பரியத்தில் மனுஷருக்கு உபகாரமாகப் படைத்ததே.

மேல்விடை. வேங்கையாதி மாந்தர்க்கு ஆசு அருள்வது எனை. எ-து. மனுஷருக்கு உபகாரமாகப் படைத்த மிருகவர்க்கத்துள் - சிங்கம் - புலி - யானை - கரடி - பாம்பு - தேள் முதலியவைகள் மனுஷருக்கு இதப்பிரயோசனத்துக்கு வாராமல் வருத்துதலுங் கொல்லுதலுஞ் செய்தலால் உபகாரமாகப் படைத்ததென்பது கூடாது.

மேல்வாதி யுத்தரம். கருத்தா ஆதியிலே ஒரு மனுஷனைப் படைத்து மிருகாதிகளும் அவனுக்கு அடங்குவனவாகப் பண்ணி இன்னபடி நடவென்று ஒரு புத்தியுங்கூற; அவன் அந்தப் புத்தியின் வழி நடவாமல் தவறுசெய்தலால், மிருகாதிகள் உனக்கு அடங்காமற் போகவென்று சபித்தலின், அவனுக்கும் அவனது சந்ததியாகிய மனுஷருக்கும் மிருகாதிகள் அடங்காமற்போயின.

மேல்விடை. அச்சாதிகள் அவர்சொற்கு அடங்குமாறு என். எ-து. அங்ஙனம் சாபத்தால் மிருகாதிகள் அடங்காவிடின் ஆடு மாடு எருமை பன்றி நாய் கோழி முதலிய சில சீவன்கள் மனுஷருக்கு அடங்குதலால் சபித்தது பொய்யாம். சாபந் தவறிற்றென்னில், கருத்தா அசத்தனும். ஆதலிற் சபித்ததேயில்லை.

இதற்குப்பிரமாணம்: ஏசுமத நிராகரணம். "வாய்திறந்தலறும் வேங்கை வல்லி— முமிழ்பாம்பாதி—நேயமற் றெவர் கூற்ருய நிகழ்வதெ னுலகத்தந்நாட்—டேயவ னுதிக் கோதுஞ் சொன்னெறி யடங்கா தென்னி—னுபகோ வாகிமாந்தர்க் கடங்கிய விதமென் கொல்லோ." என்பதனுற் காண்க.

மேல்வாதி யுத்தரம். அங்ஙனஞ் சாபந் தவறிற்றென்பதில்லை. மனுஷருக்குப் புலியாதிகள் அடங்காமலும் மாடு முதலிய அடங்கவுங் கருத்தாவினது சாபமே.

மேல்விடை. இம்முறையும் காசு அடைந்து ஓரோர் கால் திரிவது எனை. எ-து. நீ இங்ஙனங் கூறிய முறைமையும் பழுதுடைத்தாக, ஒருகாலத்திற் பாம்பு முதலியன ஒருவனுக்கு அடங்குதலினுலும் பசு முதலியன ஒருவனைக் கொல்லுதலினுலும் அதுவுங் கூடாது. ஆதலின், மனுஷருக்கு உபகாரமாக மிருகாதிகளைப் படைத்ததே யில்லை.

இதற்குப் பிரமாணம். ஏசுமத நிராகரணம். "சொல்லினனவர்க் கச்சாதி யடங்கவுந் துயரஞ் செய்தே—கொல்லமற்றையவு மீசனென் றிடிற் கொடுநா காதி — நல்லவாவோரோர்

காலத் தடங்கலா னவிலச் சாதி—யல்லல்செய் திடலாற் றியோ யறைந்த சொற் பழுதே யாகும்.'' என்பதனுற் காண்க.

மேல்வாதி யுத்தரம். அங்ஙனமாயில், கருத்தா பட்சவாதி யாம்; சர்வசீவன்களையும் ஒரு படித்தின்றி ஊர்த்த யோனியாக வுந் திரியக்குயோனியாகவும் படைத்தமையால்.

மேல்விடை. உயிர்கள் முனஞ்செய் கருமந்தன்னுல் பேசும் அசராதி உரு உறல் உண்மை உன்சொல் பிழையாம் அன்றே. எ-து. ஆன்மாக்க ளெல்லாம் ஒருவருக்கு ஒருவர் அநாதி சென்மாந்தரங்களிற் செய்த இதாகிதங்களினுண்டாகிய புண்ணிய பாவத்தினுலே இங்ஙனஞ் சொல்லப்பட்ட சராசர வடிவங்களைப் பொருந்துதல் சத்தியம். ஆதலின், உன்னுடைய வேதம் சத்தியவேதமாகாது அசத்தியவேதமாயிற்று. எ-று.

இதற்குப் பிரமாணம்: திருவாசகம். "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்-பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்-கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்—வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்—செல்லாஅ நின்றவித் தாவர சங்க மத்து—ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்.'' என்றும் மற்றும் வருவனவற்றுற் காண்க.

இ-து. ஈசுரன் மனுஷருக்கு உபகாரமாக மிருகாதிகளைப் படைத்தானென்பது அசத்தியமென்றும், ஆன்மாக்கள் கன்மத்தால் நாநாரூபம் பெற்றது சத்தியமென்றும், கூறியது. (சு)

இப்படிக் கூறிய சைவசித்தாந்தியை நோக்கி வாமி கூறு கின்றுன்.

இங்ஙனம் ஆன்மாக்களெல்லாம் கன்மவசத்தினுலே சராசரவடிவம் அடைந்தார்களென்றும், கொலையினுற் பாவம் உண்டென்றும், கூறியது ஒக்கும். ஏசுமதவாதி கூறிய உரைபழுது. கொலையினுலே பாவம் உண்டாயினும், சிறிதிடத்து உண்டு. சிறிதிடத்து இல்லை. அதுவும் மேலே உம்முடைய வசனத்தி

ஞாலே தானே அறிவிக்கின்றேன். நீர் இப்பொழுது இந்த ஒரு வினாவிற்கு உத்தரம் கூறல்வேண்டும். அஃது யாதெனில், சராசரங்களெல்லாம் சீவனென்றீர். அவற்றுள் அசரமாகிய மரமுதலிய சீவன்களை நீர் கொன்று அருந்துகின்றீர். அவற்றினால் உமக்குத் தோஷமில்லாதது என்னை. கூறும் என்ன, மேல் உத்தரங் கூறுகின்றார்.

பிழையுறுதல் சிறிதசரக் கொலையதனாற்
சரக்கொலையிற் பெருகா திங்ங
னிழிவுதரும் பருவமடை தலினாற்கி
ராதியைந்து மீயுந் தூய்
வழகியவா னூனயின்றோன் கிழைனமே
லாவர்குறைந் தடைபா வத்தான்
முழுமலப்பன் றியையருந்தும் புலையர்பன்றிக்
குறும்பருவ முறையி னுமால்.

அசரக்கொலையதனால் பிழையுறுதல் சரக்கொலையில் பெருகாது சிறிது. எ-து. சராசரமெல்லாம் சீவனுதலில் அசரக்கொலையினாலும் பாவம் உண்டென்பது நிச்சயம். பாவம் உண்டாயினும்; சரக்கொலையிற் பாவம்போல மிகுதியில்லை. கிஞ்சித் பாவம்.

மேல்வினா. சீவன்களெல்லாம் சமமாயிருக்க அசர சீவ கொலையிற் பாவங் குறைந்திருப்பானேன்?

மேல்விடை. இழிவுதரும் பருவம் அடைதலினால் இங்ஙன். எ-து. அந்த அசரசீவிகள் இங்ஙனங் கூறப்பட்ட எழுவகைத் தோற்றத்துள் தாழ்ந்த பருவத்தினையுடைய வாதலினால், பாவங் கொஞ்சமே.

மேல்வினா. அப்படிப் பருவத்தினது உயர்ச்சி தாழ்ச்சியாற் பாவம் ஏறிக் குறைந்திருப்பதற்குத் திட்டாந்தம் யாது?

மேல்விடை. கிர் ஆதிஐந்தும் ஈயும் தூய அழகிய ஆன் ஊன் அயின்றோன் கிழைன மேலாவர் குறைந்து அடை பாவத்தால் முழுமலப் பன்றியை அருந்தும் புலையர். எ-து. பால்-தயிர்-நெய்-

கோசலம்-கோமய மென்னும்பஞ்ச கவ்வியங்களையும் உலகின் கண் வழங்காநிற்கும் நிர்மலதேகியென்னுஞ் சிறப்பினையுடைய பசுவினது மாமிசத்தைப் புசித்தோன் தாழ்ந்தகுலமாக, அவனினும் உயர்ந்தகுலமென்று சொல்லப்படாநிற்பர்கள் முழுமலதேகியாகிய பன்றி மாமிசத்தைப் புசியாநிற்குஞ் சண்டாளர். பன்றிக்கொலையாற் பாவங்குறைதலின்.

மேல்வினா. பன்றியிற் பாவங்குறையவேண்டியதென்?

மேல்விடை. பன்றிக்கு உறும்பருவமுறையின் ஆமால். எ-து. பன்றி மிருகவர்க்கத்துள் தாழ்ந்த பருவத்தினை யுடையதாகையா லெனக் கொள்க. எ-று.

பசு பஞ்சகவ்வியங்களையும் வழங்கும் நிர்மலதேகி என்பதற்குப் பிரமாணம்: திருநாவுக்கரசு நாயனார் தேவாரம். "ஆவினி லைந்து மமர்ந்தாய் நீயே யளவில் பெருமை யுடையாய் நீயே—பூவினி னாற்றமாய் நின்றாய் நீயே போர்க்கோலங் கொண்டெயி லெய்தாய் நீயே—நாவி னடுவுரையாய் நின்றாய் நீயே நண்ணி யடியென்மேல் வைத்தாய் நீயே—தேவ ரறியாத தேவனீயே திருவையா றகலாத செம்பொற்சோதீ." என்றும், சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம். "மாவையு ரித்ததள்கொண் டங்க மணிந்தவனை வஞ்சம னத்திறையு நெஞ்சனு காதவனை —மூவரு ருத்தனதா மூலமுதற் கருவை மூசிடுமால் விடையின் பாகனை யாகமுறப்—பாவகமின்றி மெய்யே பற்றுமவர்க்கமுதைப் பானறு நெய்தயிரைந் தாடுப ரம்பரனைக்—காவலெ னக்கிறையென் றெய்துவ தென்றுகொலோ கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே." என்றும், சிவதருமோத்தரம். "இங்குமின்சுவையீயுமி றைஞ்சுவார்க் — கங்கு மின்ப மடைகைக்குங் காரணம்—பொங்கு தண்புன லுண்டுபுற் றின்றுநன்—மங்கலந்தருங் கோவெனும் வான்பொருள்." என்றும், சிவஞானதீபம். "பொற்பமரும் பாற்கடலி னுற்பவமாஞ் சுரபி புகலிலதன் கோமயத்திற் கூவிளந்தா னுளவா—மற்புதமாந் திருமகளவ் வில்

வமதிற் பொருந்து மகிலாரம் பளிதமத னலையதனி னுளவாங்—கற்பமருஞ் சுரரமுத நவநீதத் துதிக்குங் கதிருடனே செந்நெல தன் பாலதனிற் ரோன்றுஞ்—சொற்பயில்கும் குலியமறை யுற் பலநீ ரதனிற்ரோன்றியிடும் ரோசனையு மதனுதரத் துதிக்கும்.'' என்றும், காசிகாண்டம். ''ஆன்குளப் படியிற்ரோன்று மருந்துக டோயப் பெற்ற—வூன்பயி லியாக்கை கங்கை தோய்ந்ததா மருப்பினுச்சி—வான்புனற் கடவுட் பேரியா றிருக்கும்வா னிலவு காலுங் — கூன்பிறை முடித்த செல்வி கொம்பிடை வதியுமாதோ.'' என்றும், பெரியபுராணம். ''சீலமுடைய கோக்குலங்கள் சிறக்குந் தகைமைத் தேவருடன்—காலமுழுது முலகனைத்துங் காக்குமுதற் காரணராகு—நீலகண்டர் செய்யசடை நிருத்தர் சாத்து நீறுதரு—மூல மவதா ரஞ்செய்யு மூர்த்த மென்றான் முடிவென்னோ.'' என்றும், மற்றும் வருவனவற்றாற் காண்க.

பன்றி முழுமலதேகி என்பதற்குப் பிரமாணம்: ''ஏறுத மேட்டுக் கிரண்டு துலையிட்டாற்போற்—பேறுயே னங்கோழிப் பேரிட்டு - மாறுத—புன்மக்கள் வாயிற் புலையர் மலமிறைக்க—நன்மக்கள் கண்டு நகும்.'' என்றும், ''பன்றி தன்மல முண்டா லென்பரந்துற துடலமெங்கு—மென்றிருந் தனையோ பேதாயிலைத்தது பருக்குமாறே—னன்றியு நோய ருணல பத்திய மடையக் கண்டு — முன்றனு ளுணராய் நாளு முண்டனை மலமீதுண்மை.'' என்றும், ''அசுத்தமாமலத்தை யேதின் றவத்தினு லுடலந் தாங்கு—மசுத்தமாம் பன்றியாதி யருந்திமா நரகத்தாழு—மசுத்தருஞ் சுத்தர்போல வருவருப் புடையராகி—யசுத்தமா நிலத்திற் கிரையாதி நீதென்ப தென்னோ.'' என்றும், ''கூறுநாய் கழுதை பன்றி கோழியு மலத்தைத் தின்னும்—வீறுடன் கழுதை நாயை விரும்பியே தின்று தென்கொ—றேறியே தெளிந்து பார்க்கிற் றீதான மலமாமெல்லாம்—வேறுமோர் நரகத் தெல்லைவிதிக்கவு மிவர்க்கு வேண்டாம்.'' என்றும், ''தம்மினு முயர்ந்தோர் கீழோர் தமதிலத்தறலுண் டாரே—லம்மவங் கவருங் கிழென்றவர்மனைப் புனலுமுண்ணு—விம்மனி தர்க

டாஞ் சிச்சியினர்தம் மலத்தையுண்டு--விம்முடற் பன்றியாதி விரும்பியுண் டுவப்ப தென்னே.'' என்றும், வருவனவற் ருற்காண்க.

பன்றியாதிகளை உண்டோரும் புலையர் என்பதற்குப் பிரமாணம்: திருவள்ளுவர். ''கொலைவினையராகிய மாக்கள் புலைவினையர்—புன்மை தெரிவா ரகத்து.'' என்றும், சிவவாக்கியர். ''புலையரைப் புலையரென்னும் புத்தியற்ற மாந்தரே—புலையனார் மலம்புசிக்க நாடுமீது புத்தியோ—புலையருக்கு ளொக்குமும்மையென்று ரைத்த புல்லரும்—புலைய ராகிநரகி னுட்புகுவ ரையராணையே.'' என்றும், ''ஈவானே தெய்வ மிரப்பே யிழிவரவென் —ருய்வானே நூலின் பயனறிவான் - பேய்வாழுங் — காடே கரப்பவர்தம் மில்லங்க டும்புலையன்—வீடே விடக்குண்பான் வீடு.'' என்றும், ''பறையரைப் பறைய ரென்று பறைந்திடு மனிதர்கேளீர்—பறையர்தம் மலத்தைத் தின்ற பன்றியைப் புசிப்ப தென்னே—கறையதே யாகு மந்தக் கறிதனைக் கலத்தினிட்டு—மறையவே வைத்துத் தின்னுமனிதரே பறையர் கண்டீர்.'' என்றும், ''புலையென்னும் புலைதீரப் புனலென்னும் புனன்மூழ்கி—யலைகின்ற முழுமூட ரறிவென்ன வறிவென்ன--புலையன்றன் மலமுண்ணு மெமையுண்ணும் புலையர்க்குக்—குலமென்ன நலமென்ன கூகூவென் றனகோழி.'' என்றும், மற்றும் வருவனவற்ருற் காண்க. பன்றி மிருகவர்க்கத்துள் தாழ்ந்த பருவத்தினையுடையது என்பதற்குப் பிரமாணம்: திருவிளையாடல். ''அன்றியும் பெருமை மிக்க வலகில்யோ னிகளிற் ருேயா—தென்றுமே லாக வோங்குந் தலைவநீ யிழிந்த பொல்லாப்—பன்றியு நாற்கா லுள்ள பல்பெருஞ் சாதிக்கெல்லா—மொன்றிய கடைய தன்றே வுளத்திடை யோருங் காலே.'' என்றும், மற்றும் வருவனவற்ருற் காண்க.

இ-து. சராசரபேதம் உணர்த்துவான் பருவத்தாற் பசு உயர்ந்ததென்றும், பன்றி தாழ்ந்ததென்றும், கூறியது. (எ)

இப்படிக் கூறிய சைவசித்தாந்தியை நோக்கிப் பின்னும் வாமி கூறுகின்முன்.

பசுவும் பன்றியும் மிருகசாதியபேதமாயிருக்கப் பருவ பேதம் வருவானேனென்றவளவில் அவனைநோக்கி மேலுத்தரங் கூறுகின்முர்.

முறைமைதெரி யந்தணரும் புலையருமா
 னுடரெனலின் மொழிந்த வானுஞ்
செறிமலப்பன் றியுமிருக மெனப்படுமாங்
 கவர்கொலையிற் றிகழா நிற்கு
நிறைவினொடு குறைவெனவான் பன்றியிவற்
 றருங்கொலைக்க ணிகழும் பாவ
மறிஞரிவை யெனக்கொலைமை யசரமதிற்
 குறைதருமென் றறைவ ரன்றே.

முறைமைதெரி அந்தணரும் புலையரும் மானுடர் எனலின் மொழிந்த ஆனும் செறிமலப்பன்றியும் மிருகம் எனப்படும். எ-து. வேதாகமவிதிகளை அறிந்த பிராமணரும் அவைகளை அறியாத புலையரும் மனுஷசாதியென்று சொல்லப்படுதல்போல முற்கூறியதிருமலதேகியாகியபசுவும் சமலதேகியாகிய பன்றியும் மிருகசாதியென்று சொல்லப்படும்.—பாவம் ஆங்கு அவர் கொலையில் திகழா நிற்கும் நிறைவினொடு குறைவு என ஆன் பன்றி இவற்று அருங்கொலைக்கண் நிகழும். எ-து. இங்ஙனம் பாவமானது மனுஷக்கொலைகளுள் பிரமக்கொலையிலே ஏறியும் நீசக்கொலையிலே குறைந்தும் இருத்தல்போல, மிருகங்களுள் பசுக்கொலையிலேறியும் பன்றிக்கொலையிலே குறைந்தும் இருக்குமெனக்கொள்க. இவையென அசரமதில் கொலைமை குறைதரும் என்று அறிஞர் அறைவர். எ-து. இத்தன்மைபோலச் சரக்கொலையிலே பாவம் ஏறியும் அசரக்கொலையிலே குறைந்தும் இருக்குமென்று சொல்லுவர் அறிவுடையோர். எ-று.

பிராமணரும் பசுவும் உயர்ந்த பருவத்தினையுடைய என்பதற்குப் பிரமாணம்: சிவதருமோத்தரம். "அரனுதி யொருமூவ

ரமரேசர் மருமானு—மொருவாம லுறைவார்க ளுமையாதி மட வாரு—மரிதாய மறையோர்க ளுடலாவி னுடலார்வ—மொரு வாது வழிபாடு புரிவார்க ளுயர்வாரே.'' என்றும், காசிகாண்டம். ''உறுபுல னடக்கி வேத நெறிவழி யொழுகிநின்ற—வறுதொழி லோரு மானுங் குலமொன்று மவருளாய்ந்து—மறுவறு மறை யோர் தம்பான் மந்திர மனைத்தும் வைத்தேன்—ஞெறுவிடை யவிக ளியாவுந் தோமறத் தொகுத்து வைத்தேன்.'' என்றும், வருவனவற்றுற் காண்க.

இ-து. பிரமகத்தி கோகத்தியிற் பாவம் ஏறியும் நீசக்கொலை யிற் பன்றிக்கொலையிற் பாவங்குறைந்தும் இருத்தல் போலப், பருவபேதத்தாற் சரக்கொலையிற் பாவம் ஏறியும் அசரக்கொலை யிற் பாவங்குறைந்தும் இருக்குமென்று சாதித்தது. (அ)

பின்னும் வாமியைநோக்கி அசரக்கொலையிற் பாவங் குறை யுமென்பதற்கு மேலும் ஒருத்தரம் வலியுறுத்திக் கூறுகின்றார்.

அன்றியுந்தா வரவுருவஞ் சரமதுபோற்
குறைப்பினுயி ரகலா பாவங்
குன்றியுற லுண்மையவை குருவாதிக்
களித்துணவக் கொலைமை தன்னே
டொன்றியுழ வாதியிற்சார் பாவமுந்தேய்ந்
தழியுமன் னோர்க்கூட் டொனுதா
னன்றறிகண் ணப்பரினம் பனைச்செருப்பா
லுதைப்பதெவ னலமில் லோயே.

அன்றியும் தாவர உருவம் சரமதுபோல் குறைப்பின் உயிர் அகலா பாவம் குன்றி உறல் உண்மை. எ-து. தாழ்ந்த பருவத் தினுலே அசரக்கொலையிற் பாவங்குறைந்திருக்கு மென்ப தன் றியும், பின்னும் ஒருவிதத்தானும் அக்கொலையிற் பாவங்குறையு மென்று கூறப்படும். அது எதினுலென்னில், அசரவடிவங்களா னவை சரவடிவங்களைப் போலக் குறைக்கருவிகொண்டு குறைக் குமிடத்து நாசத்தையடையாது பின்னுங் கிளைத்தெழுதலானும்,

தறித்த கோட்டினை மற்றோரிடத்தில் வைக்க அதுவுந் தளிர்த்த லானும், அக்கொலையால் வரும் பாவஞ் சரக்கொலையிற்போலாது குறையுமென்பதே சத்தியம்.

இதற்குப் பிரமாணம்: புலான்மறுத்தல். "மரக்கோட்டைக் காதிவந்து வைத்தான் மரமு—மரக்கோடுந் தானிரண்டாய் வாழுஞ் - சரிக்கின்ற—வோருயிரின் கால்வாங்கி யோரிடத்தே வைத்தான் மற்—றீருயிர்தா னாமோ வியம்பு." என்றும், மற்றும் வருவனவற்றாற் காண்க.

மேல்வினா. அப்படி அசரக்கொலையாற் பாவம் அற்பமாய் வரினும் நாடோறும் வந்து கூடுதலாற் சரீராந்தத்தில் அநேகமாகச் சுமக்கும். அஃதன்றியும், அசரமுபற்சியா லுண்டாகுஞ் சரக்கொலைகளும் அனந்தமாதலின், அவற்றினது பலத்தினை நீர் அனுபவியாது நீங்குமாறெங்ஙனம்?

மேல்விடை. அவை குருவாதிக்கு அளித்து உண அக்கொலைமை தன்றோடு ஒன்றி உழவு ஆதியில் சார் பாவமும் தேய்ந்து அழியும். எ-து. ஒரு விவேகியானவன் அசரபதார்த்தங்களை வேதாகமங்களில் இல்லறத்திற் கோதிய தருமம் வழுவாமல் தேவர் அதிதி அனல் தேசிகர் என்னும் நால்வகையோர்க்கும் முன்னூட்டிப் பின்னுண்பானாகில், அன்னங் காய் தழை முதலிய அசரக்கொலையால் வருந்தோஷமுமற்று, உழுதல் கூலிவேலைசெய்தல் வாணிகஞ் செய்தல் சினமிகுத்தல் அசத்தியங் கூறல் வீடுதூர்த்தல் மெழுகுதல் நெருப்புமூட்டல் தண்ணீர் கவர்தல் நெற்குத்துதல் என்பன கூடப் பத்துவிதத்தான் வரும் பாவமும் அவ்வக்காலத்தில் நட்டமாதலின், அவனுக்குச் சரீராந்தத்திற் சுமக்கும் பாவமேயில்லை.

இதற்குப்பிரமாணம்: சைவசமயநெறி. "தேவாதிதியனறேசிகர்க்கென் றட்டவனந்—தேவருல கத்திலமிர்தென்." என்றும், சிவதருமோத்தரம். "தலத்துழல் கூலிவேலை சந்தையிற் கொண்டு விற்கை—குலைத்தசொற் கூட்டுங் கோப மசத்தியங்

கூறனுள்ளு—மலக்கிடன் மெழுகலங்கி யாக்கனீ ரரிசி யென்றே—யிலக்கணத்தியம்பும் பத்துந் தமக்கெனிற் பாவ மீட்டும்.'' அன்றியும், ''தேசுறு சிவாதிபூசைக் கெனவிவை தம்மைச் செய்யி—னுசமாம் பாவபேதந் தம்மையே நாடிச்செய்யிற்—பாசமா நரகபேதப் படுகுழிப் படுத்தி யென்று—மூசல்போலு மூல்வித்தாக்குந் துயரினுக் களவுமுண்டோ.'' அன்றியும், ''அட்டவை தம்மைச் சொன்ன நால்வரு மருந்த வன்பா—லிட்டுமிக் கதனை யுண்கை யமுதமீயாதே யுண்கை—கட்டமுங் கடுவுமாவி கழிந்தவூன் காயந்தானு—மொட்டியே யுடலிற்றோன்றும் புழுவு மென்றொழிக வோர்ந்தே.'' அன்றியும்,''இறவா திருக்கச் செய்யு மருந்தியாதே யெனினு மில்லகத்துத்—துறவா திருந்தார் மூவரொடுந் துய்த்தல் கடனே துயக்குற்றுப்—பிறர்சொல் பழியும் பேணுதே பெரியோர் தமக்கு நாணுதே—சிறிது மிரக்கஞ் செய்யாதே தானே யருந்துஞ் சிதடனுமே.'' என்றும், காசிகாண்டம். ''தேவர்தென் புலத்தோர் துறந்தவர்க் களித்த சேடநல் லமிர்தினு மினிதா—மியாவரே யெனினு மதிதிய ரிறந்தோ ரிமையவ ரிங்கிவர்க் கின்றிக்—கூவல்போ லாழ்ந்த பாழ்வயி றதனிற் கொட்டுதற் கமைத்த வெண்சோறு—நாவுறை புழுவா மென மறை யனைத்து நவின்றிடு மென்பர்நன் குணர்ந்தோர்.'' அன்றியும், ''உம்பர்வேதியர் விருந்தினரை யூட்டி நுகரார்—தம்பசிக்கன றணிப்ப நனிதுய்த்த விவரை—வெம்பு கண்டக ருளத்தின் மிக வெம்மை புரியுங்—கும்பிபாகநர கத்திடை குளிப்ப வெறிவாய்.'' என்றும், மற்றும் வருவனவற்றுற் காண்க.

மேல்வினு. இம்முறைமை மாமிசத்தை நிவேதித்தால், குருவாதிக்கு அர்ப்பிதமாகாதோ?

மேல்விடை. அன்னோர்க்கு ஊன் ஊட்டொணுது. எ-து. குருவாதி நால்வர்க்கும் மாமிசத்தை நிவேதிக்க வொண்ணுமையின், அது செய்தலிற் சரக்கொலைமை நீங்குதல் கூடாது. அஃதென்போலவெனில், ஒருவன் ஒரு குற்றஞ்செய்து அக்குற்றத்தை

நீக்கும்பொருட்டு இராசாவைப் பிரார்த்திக்கச் செல்லுமளவில் அந்த அரசனுக்குப் பிரீதியில்லாத காரியத்தைச் செய்துகொண்டு போனனேயாகில்; முன்பு அவன் செய்த குற்றமும் தீராது பின் புந் தண்டிக்கப்படுவான். அதுபோலப் பிரீதியில்லாத மாமிசத் தை ஈசுராதி தேவதைகளுக்கு நிவேதித்தால், சரக்கொலைமையுந் தீராமல் அநார்ப்பிதமாதலின் அதிபாதகமும் வரும்.

மேல்வினா. மாமிசம் ஈசுரப்பிரீதியன்றென்பது கூடாது. முன்பு கண்ணப்பர் நிவேதித்திருத்தலின்.

மேல்விடை. நன்று அறி கண்ணப்பரின் நம்பனைச் செரு ப்பால் உதைப்பது எவன் நலம் இல்லோயே. எ-து. கண்ணப் பர் மாமிசமிட்டு முத்திபெற்றாரென்பது சத்தியம். அதுபோலப் பிறரும் மாமிசத்தை நிவேதித்தல் கூடாது. அதேனெனில், கண்ணப்பர் பூர்வசன்மத்திற் செய்த தபோபலத்தினாலே ஒரு காலத்திற் காளத்தியீசுரரைக் கண்டமாத்திரத்திலே பேயின் கட் பிடியுண்டானொருவனுக்கு அவனது சரித்திரம் பேயின் சரித்திரமாகி நின்றதுபோலக் கண்ணப்பருடைய சரித்திரமெல் லாங் காளத்தியீசுரருடைய சரித்திரமாக நிற்றலால்; அவர்க்கு மோக்ஷங் கைகூடிற்று. அவர் உன்னைப்போல ஒரு ஆசாரியனை அடைந்து இது பாவம் இதுபுண்ணியம் இது செய்யலாம் இது செய்யலாகாது என்று ஒருகாலுங் கேட்டறிந்தவரு மல்லர். அவர் முன்பு பழகியிருந்த பழக்கத்தைப் பின்னும் பத்திமிகுதி யினாற் செய்தனர். அவர்போல ஒருவன் ஈசுரனுக்கு மாமிசம் நிவேதிப்பானாகில், வாய் நீரால் அபிஷேகம்பண்ணிச் செருப்புக் காலால் உதைப்பதுஞ் செய்யவேண்டும். அப்படியுஞ் செய்யலா மென்று ஒருவன் நினைத்தானாகில், அவன்போய் விழும் நரகத் திலே பின் வீழ்வார் ஒருவருமில்லை. ஆதலின் கண்ணப்பருடைய பத்தியை நீ விதியென்று பிரமாணித்தல் கூடாது. மிகுதி யும் நல்லறிவடையாத தீயோனே. எ - று.

இ-து. எவ்விதத்தானும் அசரக்கொலையிற் பாவங்குறையு மென்றும், அக்கொலைமையும் ஈசுராதி பூசையாலே கெடுமென் றும், மாமிசம் நிவேதித்தல் அவர்களுக்கு ஆகாதென்றும், கண் ணப்பர்செயல் பத்தியென்றும், கூறியது. (௬)

பின்னும் வாமியைநோக்கிப் பத்திமார்க்கத்தை விதிபோ லப் பிரமாணித்தல் கூடாதென்று மேலும் வலியுறுத்திக் கூறு கின்றார்.

நலந்தருதா தையைவதைத்து முத்திபெற்றோ
 ருளரெனிலிஞ் ஞாலத் தூடே
கலந்துமுத்தி யடையு நர்க்கெல் லாமதுவோ
 கதியுலகங் கடந்த பத்தி
வலந்தனைநீ விதியெனக் கூறுதல் பழுதூன்
 நனையிமய வரைமா துக்கிந்
நிலந்தனிற்பத் திரைமுதலாஞ் சத்திகட்கும்
 வரைவெனினீ நிகழ்த்த நீதே.

நலந்தரு தாதையை வதைத்து முத்திபெற்றோர் உளரெ னில் இஞ்ஞாலத்தூடே கலந்துமுத்தி அடையுநர்க்கு எல்லாம் அதுவோ கதி உலகங்கடந்த பத்திவலந்தனை நீ விதி எனக்கூறு தல் பழுது. எ-து. உலகத்தின்கண் ஒரொருவர் பத்திமிகுதி யாற் செய்த சரித்திரங்களை நீ விதியென்று ஒருகாலும் பிரமா ணித்தல் கூடாது. அதேனென்னில், சண்டேசுரநாயனர் பிதா வைக்கொன்று முத்தியடைந்தாரென்றும், சிறுத்தொண்டநாய னர் பிள்ளையை அறுத்து முத்தியடைந்தாரென்றும், அதுவே வழியாகப் பிறரும் பிதாவைக்கொன்றும் பிள்ளையைக்கொன் றும் முத்தியடைவாரில்லை. அப்படிப்போல இப்பொழுதும் ஒரு வனுக்கு மிகுந்த பத்திவந்ததாயினும், விசேடித்து ஒருகருமத் தைச் செய்வதொழிந்து முன் ஒருவர் பத்திமையாற் செய்தபடி தானுஞ் செய்யவேண்டுமென்பதில்லை. பின்னொருவன் முன் னோர் சரித்திரத்தைப் பிரமாணித்தல் கூடாது. மேலும், விதி மார்க்கத்தையொழித்து பத்திமார்க்கத்தை ஒருகாலும் பிரமா

ணிக்கவொண்ணாது. அதெப்படியென்னில், ஒரேரியின்கண்ணே மிகுந்த வெள்ளமானது ஒருகாலையில் நடுவே முறித்துக்கொண்டு சென்றதாயின், அதுவே ஏரிக்குக் கலிங்கென்று விடுவாரில்லை. ஏரியின் கடையிற் கலிங்கு விடுவதே உண்மை. அதுபோலக் கண்ணப்பநாயனார் முதலாயினோர் செய்த உலகாதீதமாய சிவானுக்கிரக வலியினையுடைய மிகுந்த பத்தியை நாளும் விதியென்று கொண்டு ஈசுரனுக்கு நீ மாமிசம் நிவேதிப்பலென்பது மிகுந்த குற்றமென்று அறிவாயாக.

இதற்குப் பிரமாணம்: "வெள்ளமிகுத் தேரிநடு வுடைத்தோடி னதுகலிங்காய்விடுகி லாரப்—பள்ளமடைத் திருபுறத்துங் கடைவிடுவ ருலகோரப் பரிசு போல—வுள்ளமிகுத் தறிவெழலாற் பத்திமிகுத் தமையானோன் றொருவர்செய்யிற்—றெள்ளுணர்வோ ரதனைவிதி யென்றுபின்னும் புரிகுவரோ தெளிவி லோயே." என்றும், மற்றும் வருவனவற்றாற் காண்க.

மேல்வினா. ஈசுரனுக்கு மாமிசம் நிவேதித்தற்கு விதியில்லையென்பது கூடாது. ஈசுராபின்னமாகிய உமாபரமேசுவரிக்குப் பிரீதியாகையால்.

மேல்விடை. இங்கிலந்தனில் பத்திரைமுதலாம் சத்திகட்கும் வரைவெனின் இமயவரைமாதுக்கு நீ ஊன்றனை நிகழ்த்தல் தீதே. எ-து. தம்பனம் மோகனம் உச்சாடனம் வசியம் ஆகருஷம் வித்துவேஷணம் பந்தனம் மாரணம் என்று சொல்லப்பட்ட அட்ட கன்மங்களையும் குறித்து இங்கிலத்தின்கண் பத்திரையாதிய அனந்தசத்திகளில் ஒவ்வொரு சத்திகளை அர்ச்சிப்போரும் அச்சத்திகட்கு மாமிசம் நிவேதித்தல் அயோக்கியமாதலின் அவர்கட்குச் செய்யும் முறைமையே சுத்தோபசாரஞ்செய்து அச்சத்திகளது பரிசாரக பேதமாகிய பைசாசங்கட்கு மதுமாமிசத்தை நிவேதிப்பார்களாதலின், எல்லாச் சத்திகட்குங் காரணமாய் உலகத்தின்கண் உயிர்களையெல்லாம் வளர்ப்பனவாகிய முப்பத்திரண்டறங்களையும் வளர்க்கும் பேரருளினை

யுடைய உமாபரமேசுவரிக்கு நீ மாமிசம் நிவேதிக்கலாமென்று சொன்னவார்த்தையே அதிபாதகம். எ-று.

இதற்குப் பிரமாணம்: "மண்டலத்துங் காளிமுதற் சத்திக டேவர்களெவர்க்கும் வழங்குமுரு—னண்டியிருந் துள பூதபிசாசங்கட் களித்திடுவரதனை நீயும்—கண்டிருந்து முமைக்குரைத் தாயதிபாவ மெண்கருமங் கருதினோருன் — கொண்டவண்சூழ் பூதாதிக் கிடுவரன்றிச் சத்திகள்பாற் குறுகாரன்றே." என்றும், மற்றும் வருவனவற்றாற் காண்க.

இ-து. பத்திமார்க்கத்தை விதிமார்க்கம்போல நெறியாகக் கொள்ளொணாதென்றும், சத்திபூசைக்கு மாமிச நிவேதனம் அயோக்கியமென்றும், கூறியது. (௧௦)

இப்படிக்கூறிய சைவசித்தாந்தியை நோக்கிப் பின்னும் வாமி கூறுகின்றான்.

மாமிச நிவேதனம் சத்திகட்கு அர்ப்பிதமாகாவிடினும்; அச்சத்திகளது பரிசாரக பைசாசங்கட்கு இடுதலினாலும், சரக் கொலைமை நீங்கும். எந்தக்குயவன் சுடுகினும் பானைவேகல் பிரமாணம்போலு மென்றாயாகில்; அது கூடாதென்று மேலுத்தரங் கூறுகின்றார்.

தீதிலசத் திகட்சூழ்ந்தோ ரிடுமூனாண்
டமரான்றிச் செறிபூ தாதிக்
காதலின்மற் றவையுணலா னகலினுமக்
கொலைமைமுழு தகன்றி டாவான்
மீதலத்து மசுரரிராக் கதரு முண்ப
ரூனதனை விரும்பா ரென்றுஞ்
சோதிமணி முடியமுதா சனர்சுரத்தன்
மையினாற்பூ சுரரைப் போலும்.

தீதிலசத்திகட் சூழ்ந்தோர் இடும் ஊன் ஆண்டு அமரரன் றிச் செறிபூதாதிக்கு ஆதலின் மற்றவை உணலான் அகலினும் அக்கொலைமை முழுது அகன்றிடாவால். எ-து. குற்றமற்ற பத்

திரையாதி சத்திகளிடத்து அட்டகன்மங்களைப் பெறுவோர்கள் அவரது சமுகத்துள்ள தேவகணங்கட்கன்றிப் பூதபைசாசங்கட்கு மாமிசம் நிவேதிப்ப துண்டாயிருத்தலினன்றோ, நீ அவற்றினால் பாவம் நீங்குமென்பது கூறினை. அது கூடாது. அவ்விடத்துண்டாகிய பூதாதிகளுக்கு மாமிசம் நிவேதித்தலால் அக்கொலைமை நீங்கினுஞ் சிறிதல்லது முழுதும்நீங்காது. அதெப்படியென்னில், ஒருவன் தான்செய்த குற்றம் அற்பமாயிருக்கவும் அக்குற்றத்தை இராசாவை வழிபட்டு அவனது கருணையாற் றீர்த்துக்கொண்டானாகில்; இராசாவுக்கு மிகவுந் துவேஷம் வருவதாகிய மிகுந்த குற்றத்தைச் செய்தவன் இராசாவின் வாயில் காப்போன் அனுசரணையாற் றீர்த்துக்கொள்ளுதல் கூடாது. அவர்களாற் றீருமிடத்தும், கிஞ்சித் மிதஞ் செய்வதொழிந்து குற்றமுழுதும் பரிகரித்தல் கூடாது. குற்றமுழுதும் பரிகரிக்க நினைக்குமிடத்து அவர்களுக்குங் கூடவே தண்டனை வரும். அப்படிப்போல நாம் அசரத்தினால் வரும் அற்பபாவத்தை ஈசுரப் பிரீதிபண்ணித் தீர்த்துக்கொண்டோமாயின், ஈசுரப்பிரீதியல்லாத சரக்கொலைத்தோஷத்தைச் சத்திபரிசனபைசாசங்களால் நீக்கிக்கொள்ளுவே னென்பது கூடாது. அந்தப் பிசாசகணங்களும், அந்தப் பிசாசகணங்களுக்கு அதிபதியாகிய சத்தியாதி தேவதைகளுக்குந் தங்களுக்கு ஈசுரன் அமைத்த முறைமையொழிந்து ஏறக்குறைய நடந்தார்களாயின், அவர்களுஞ் சனனமரணப்பட்டு வருந்துவாரென்பது நிச்சயம்.

இதற்குப் பிரமாணம்: சிவஞானசித்தி. யாதொருதெய்வங்கொண்டீரத்தெய்வ மாகியாங்கே—மாதொரு பாகனார்தாம் வருவர்மற் றத்தெய்வங்கள்—வேதனைப்படுமிறக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யு—மாதலானிவையிலாதா னறிந்தருள் செய்வனன்றே.'' என்றும், மற்றும் வருவனவற்றாற் காண்க.

மேல்வினா. துர்க்காதிசத்திகளுக்கு மாமிசம் நிவேதிப்பது யோக்கியமாயினும், வானுலகத்தின்கணிருந்துள முப்பத்துமுக்கோடிதேவர்களுக்கும் அவற்றினை நிவேதிப்பது அயோக்கியம்.

மேல்விடை. மீதலத்தும் அசுரர் இராக்கதரும் ஊன் உண்பர் என்றும் சோதிமணிமுடி அமுதாசனர் அதனை விரும்பார் சுரத்தன்மையினுல் பூசுரரைப்போலும். எ-து. வானுலகத்தும் அசுரராக்கத பூத பிசாசாதிகளே மாமிசபக்ஷண யோக்கியர். பிரகாசம்பொருந்திய மணிமுடிகளைத்தரித்துள தேவர்களாவார் அமுதபக்ஷணயோக்கியர். அத்தேவர்கட்கு மாமிசம் நிவேதிக்கவொண்ணுதென்பதற்குப் பிரமாணம் அநுமானம். அஃதெங்ஙனமெனின், வானுலகத்துத் தேவர்கள் ஊன்றின்பதில்லை. தேவத்தன்மையுடையவர்களாதலின். எங்கே தேவத்தன்மையுண்டோ அங்கே ஊன்றின்பதில்லை. இங்ஙனம் பூசுரர்போலும் ஆதலிற் றேவர்கட்கு மாமிச நிவேதனம் அநர்ப்பிதமென்றறிவாயாக. எ - று.

இ-து. சத்திகள் பரிசனபைசாசங்கட்கு மாமிசநிவேதித்தலாற் சரக்கொலைமை முழுதும் நீங்காதென்றும், எவ்விடத்தும் அசுராதிகளுக்கே மாமிசம் அர்ப்பிதமென்றும், தேவப்பிராமணருக்கு மாமிசம் அநர்ப்பிதமென்றும், கூறியது. (கக)

இப்படிக் கூறிய சைவசித்தாந்தியை நோக்கிப் பின்னும் வாமி கூறுகின்றான்.

நீர் இங்ஙனங்கூறிய அனுமானத்திலே தோஷமுண்டு வியாத்தியின்மையின். அஃதெங்ஙனமெனின், சபக்கமாகிய பிராமணரிடத்துத் தேவத்தன்மை யுண்டாயினும் புலாலுண்ணுமை நியமமில்லை யாகத்தின்கட் புசித்தல் காணப்படுதலின். என்றவளவில் உத்தரங் கூறுகின்றார்.

பூசுரருக் கிழிவிலையா கத்துயிர்கொன்
றருந்தலின்விண் புகுதா நிற்பர்
கோசமெடுத் துரைநவிற்று சிரியர்சிறார்க்
கிதமதுபின் கொடுப்பான் முன்ன
ராசுமிகு துயர்விளைத்து மிதமதுவாப்
பொருள்பெறலி னரிய வேத

வோசைமிகு மமருலகை யவர்வதைத்த
சீவனும்பெற் றுய்தலாலே.

யாகத்து உயிர் கொன்று அருந்தலின் பூசுரருக்கு இழிவு இலை விண்புகுதாநிற்பர். எ-து. பூசுரர் யாகத்தின்கண் சீவகொலைபண்ணிப் புலாலுண்டார்களாயினும், புலாலுண்டோர்கள் அடையும் பாவத்தினையடையாமல் அதனால் மிகுந்த புண்ணியராகித் துறக்கலோகமடையா நிற்பர்கள். ஆதலின், அன்னோர் ஒருகாலும் புலாலுண்டதேயில்லை.

மேல்வினா. பூசுரர் யாகத்தின்கட் சீவகொலை செய்தும் புலாலுண்டும் தாழ்வடையாது சொர்க்கமடைய வேண்டியதென்?

மேல்விடை. கோசம் எடுத்து உரை நவிற்று ஆசிரியர் சிறார்க்கு இதமதுபின் கொடுப்பான் முன்னர் ஆசு மிகு துயர் விளைத்தும் அது இதமா பொருள்பெறலின் அவர் வதைத்த சீவனும் அரிய வேத ஓசை மிகும் அமருலகைப் பெற்று உய்தலாலே. எ-து. புத்தகத்தின்கணுண்டாகிய சத்தங்களைப் பள்ளியின்கட் சிறுவர்கட்கு ஓதுவிக்கும் உபாத்தியாயரானவர் அன்னோர்க்குப் பின்பு சுகத்தை விளைக்கும் பொருட்டு முன்னர் அநேகம் குற்றமாகத் தோன்றும் துக்கங்களை விளைவித்தும் அவரது மாதாபிதாக்கள் அவற்றினை மிகவும் இதமாகக்கொள்ளுதலின் உபாத்தியாயரும் பொருள் பெற்றுச் சுகமடைதல் போலப் பூசுரர் யாகத்தின்கட் கொன்றசீவன் அப்பொழுது துக்கத்தை யடைந்ததாயினும் பின்பு மிகவும் வேதவோசை முழங்குதலையுடைய தெய்வலோகத்தை யெய்திச் சுகமடைதலால் யாகம்புரிந்த பூசுரரும் பரமேசுரனது அருளினாலே வானுலகம் புகுந்து உய்யா நிற்பர்கள். எ-று.

இ-து. யாகத்தின்கட் பூசுரர்விதி புரிதலாற் பாவமில்லையென்று கூறியது. (௧௨)

இப்படிச்சொன்ன சைவசித்தாந்தியைப் பின்னும் வாமி நோக்கி யாக நிமித்தம் இறந்த சீவன் சொர்க்கமடைவது எவ்வி தத்தானென்று வினவ, மேலுத்தரங் கூறுகின்றார்.

உய்ந்திடுமெம் மகத்தவிமுன் பரன்கொளலா
னவ்வூன்றாய் துறலாற் சுத்தி
தந்தமறை மந்திரத்தாற் றழல்விடங்கெட்
டுருவிருக்குந் தன்மைத் தவ்வூ
னிந்தடைவு புரியவுனக் கிருமறைகூ
றுதியற்றற் கியம்பா நிற்கு
மந்தவுரை யிறைமொழியன் றாரணத்துக்
கதுவிருத்த மாகை யாலே.

உய்ந்திடும் அம்மகத்து அவிமுன் பரன்கொளலான். எ-து. யாகத்தின்க ணிறந்துள சீவன் சொர்க்கமடையும் அவ்விடத்து ருத்திராவிப்பாகம் முதற்கொடுத்து மற்றுள்ள தேவர்கட்கு முறை தவிராது பின்பு அவிப்பாகங் கொடுத்தலின்.

உருத்திராவிப்பாகமுதலென்பதற்குப் பிரமாணம்: சுந்தர மூர்த்திநாயனார் தேவாரம். "கட்டக் காட்டினடமாடுவ ரியாவர்க்குங் காட்சியொண்ணார்—சுட்டவெண்ணீறணிந் தாடுவர்பாடுவர் தூயநெய்யால்—வட்டக்குண் டத்தி லெரிவளர்த்தோம்பி மறைபயில்வா—ரட்டக்கொண் டுண்பதறிந்தோ மேனுமிவர்க் காட்படோமே." என்றும், பெரியபுராணம். "வெய்யகனற் பதங்கொள்ள வெந்துளதோ வெனுமன்பா—லையுமனத் தினிமையினி லையமிக மென்றிடலாற்—செய்யுமறை வேள்வியோர் முன்பு தருந்திருந் தவியி—னெய்யும்வரி சிலையவன்று னிட்டனூனெனக்கினிய." என்றும், வருவனவற்றாற்காண்க.

மேல்வினா. நன்றாயிற்று. முன்னந்தேவார்ப்பிதமல்ல புலாலுணவென்று சாதித்தல்வேண்டிப் பிராமணரைத் திட்டாந்தங் கூறினீர். அவர்கள் யாகத்தின்கட் புசிக்கின்றாரென்பதுகொண்டு இங்ஙனந் தேவர்களுக்குந் தேவாதிபராகிய உருத்திரற்கு

மாகுமென்றீர். முதல் ஆகாதென்றதெது? இவ்விடத்து ஆகு மென்ற விசேடம் யாது?

மேல்விடை. அவ்வூன் தூய்து உறலால். எ-து. யாகத்தி ன்கணிருந்த மாமிசமும் யாகமல்லாதவிடத்திருந்த மாமிசம் போல அசுத்தமாகாமல் சுத்தியடைதலால்.

மேல்வினா. யாகத்தின்கணிருந்த மாமிசம் யாதினாற் சுத்தி யடைந்தது?

மேல்விடை. சுத்தி தந்தமறை. எ-து. அது வேதமந்திரத் தாற் சுத்தியடையும்.

மேல்வினா. அப்படி மந்திரத்தாற் சுத்தியடையிற் புலாலுரு மாறி மரக்கறி ரூபமடையவேண்டும். அஃதின்மையாற் சுத்திய டைந்ததற்கு அடையாளம் யாது?

மேல்விடை. மந்திரரால் தழல்விடங்கெட்டு உரு இருக் குந் தன்மைத்து அவ்வூன். எ-து. மந்திரவாதிகளினாலே அக் கினி உருவமிருக்கத் தக்கதாகச் சத்திதம்பனை யடைந்ததுபோ லவும் மந்திரத்தாற் றடைபட்ட எட்டி அலரி முதலிய விடங்க ளெல்லாம் ஒருவரை மிகக் கொல்லுந் தன்மை கெட்டதுபோல வும் வேள்விக்கணிருந்த புலாலும் மாமிசத்தன்மை கெட்டு நிரு மலத்தன்மையடையும். அப்படியாதலின், அது உருத்திராதி தேவார்ப்பிதமாம். அதனாலே அந்தவுடலத்தின்கணிருந்த சீவ னுந் திவ்வியபோகத்தை அடையும். அப்படிப் பரசிவகிதஞ் சாதித்தலின், வேள்விமுடிந்த பூசுரருந் திவ்வியபதவிக்கனுகூல மாகிய சிறப்பினை அடையாநிற்பர்கள்.

ஆகம விதியென்பதற்குப் பிரமாணம்: திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் தேவாரம். ''பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட் டெரி யோம்புஞ்—சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம்பலமேய—பிற ப்பில் பெருமானைப் பின்றாழ் சடையானை—மறப்பி லார்கண் டீர் மையறீர்வாரே.'' என்றும், திருநாவுக்கரசுநாயனார் தேவா ரம். ''சிந்தையைத் திகைப்பியாதே செறிவுடை யடிமை செய்ய—

வெந்தைநீ யருளிச்செய்யா யாதுநான் செய்வ தென்னே— செந்தியார் வேள்வியோவாத் தில்லைச் சிற்றம்பலத்தே—யந்தியும் பகலுமாட வடியிணை யலசுங் கொல்லோ.'' என்றும், சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம். ''ஒருமேக முகிலாகி யொத்துலகந் தானாயூர்வனவு நிற்பனவு மூழிகளுந் தானாய்ப்—பொருமேவு கடலாகிப் பூதங்களைந்தாய்ப் புனைந்தவனைப் புண்ணியனைப் புரிசடையினானைத்—திருமேவு செல்வத்தார் தீமூன்றும் வளர்த்த திருத்தக்க வந்தணர்க ளோதுநக ரெங்கும்—கருமேதி செந்தா மரைமேயுங் கழனிக் கானாட்டு முள்ளூரிற் கண்டுதொழு தேனே.'' என்றும், மற்றும் வருவனவற்றாற்காண்க.

மேல்வாதியுத்தரம். இப்படி நீர்சொன்னது சத்தியம். யாவனொருவனாகிலுஞ் சரக்கொலைபண்ணும்பொழுது அவற்றினை மந்திரோபதேசத்தினாலே சுத்திபண்ணி அவற்றினானைத் தேவார்ப்பிதம் பண்ணுமற் றன்னைக் குறித்துக்கொன்று தின்றானாயின் அவன் நரகத்தழுந்துவனென்பது உபயமதசித்தமே. ஆதலால், நாமும் மந்திரோபதேசத்தினாற் பசுவைச் சுத்திபண்ணி அதனான்புனிதமாதலின் மாதாவுக்கும் அவளது சமுகத்துள்ள ஈசுராதி தேவதைகளுக்கும் நிவேதனம்பண்ணி அவ்விடத்து இறந்த பசுவை முத்தியடைவித்து நாமுந் தேவியுடைய பிரசாதங்கொள்ளுதலால் அவளுடைய பாதத்தை அடைதலுண்மையாதலின், உம்முடைய வேள்விபோலும் நம்முடைய வாமபூசா சரித்திரம்,

மேல்விடை. இந்த அடைவுபுரிய உனக்கு இருமறை கூறுது. எ-து. நம்முடைய வேள்விபோலப் பசுப்படுத்து வாமபூசை பண்ணலாமென்று உனக்கு வேதவிதியின்மையின், அப்படிச் செய்தல் கூடாது.

மேல்வாதியுத்தரம். வேதவிதியில்லாததுகொண்டு நமக்கு ஒரு குறையில்லை. பசுப்படுத்து மாதாவுக்கு அர்ப்பிதம் பண்ணலாமென்று வாமதந்திரவிதிதமுண்டு,

மேல்விடை. இயற்றற்கு இபம்பாிற்கும் அந்த உரை இறைமொழி அன்று. எ-து. அப்படி உனக்குச் சத்திபூசை பண்ணலாமென்று கூறிய வாமதந்திரம் ஈசுரவாக்கியமன்று.

மேல்வினு. வாமதந்திரம் அநீசுரவாக்கிய மென்பது எதினல்?

மேல்விடை. ஆரணத்துக்கு அதுவிருத்தம் ஆகையாலே. எ-து. நம்மால் அங்கீகரிக்கப்பட்ட வேதங்களுக்கு உன்னுடைய வாமதந்திரம் விரோதமாயிருத்தலினெனக்கொள்க. எ-று.

இ-து. வேள்விக்கணிறந்த சீவன் சொர்க்கமடையுமென்றும், அங்ஙனம் வாமதந்திரம் வேதவிதி அன்றென்றும், ஆதலின் அந்நூல் ஈசுவரவாக்கியமன்றென்றும் கூறியது. (கூ)

இப்படிச் சொன்ன சைவசித்தாந்தியை நோக்கி மேல் வாமி கூறுகின்றான்.

உம்முடைய வேதத்துக்கு நம்முடைய வாமதந்திரம் விரோதமாதலின் வாமதந்திரம் அநீசுவர வாக்கியமாவதில்லை. வாமதந்திரத்துக்கு வேதம் விரோதமாதலின் வேதம் அநீசுவர வாக்கியமென்று கூறுதலும்; அவனைநோக்கி உத்தரங் கூறுகின்றார்.

ஆகியவெக் கலைத்துணிவு மவற்றுளவற்
  றுளதெவற்று மடங்கா தாத
லேகனுரை மறையாதி யியம்புமவற்
  றுளதிழுக்கென் றெவர்க்குஞ் சித்தி
வாகுறவுண் டதைமதியே லருளாகு
  கமவேத வழிவந் தோர்க்குண்
டோகைதரும் பிரமசித்தி யொழிந்தவையு
  மவர்க்கெளிதென் றுளத்துட் டேரே.

ஆகிய எக்கலைத் துணிவும் அவற்றுள் அவற்றுளது எவற்றும் அடங்காது ஆதல் மறையாதி ஏகனுரை. எ-து. உலகின்கனுள்ள பலசமய நூல்களும் மிருதி புராண கலைஞானதிகளும்

வேதாகமத்தின் வழிநூல் சார்புநூல்களாதலானும் அவைகளில் முடிந்தபொருள்களை வேதாகமங்கள் ஒரோவிடத்து எடுத்துக் காட்டுதலானும், வேதாகமத்துட் டுணிபொருள்கள் அவைகளின் அளப்பரிதாய அத்தமாகையினாலும், வேதாகமங்களிரண்டுமே ஈசுவரவாக்கியம். அதெப்படியென்னில் இராசாவின் வாயிற் கணக்கிற் கிராமவழிக்கணக்குக்கள் அளவிடப்பட்டு அக்கிராம வழிக் கணக்குக்களின் இராஜாவின் வாயிற்கணக்குக்கள் அளவிடப்படாமை போலுமெனக்கொள்க.

இதற்குப் பிரமாணம்: சிவஞானசித்தி. "அருமறையாகம முதனூ லனைத்து முரக்கையினா னளப்பரிதா மப்பொருளை யரனருளா லணுக்க—டருவர்கள்பின் றனித்தனியே தாமறிந்த வளவிற் றர்க்கமொடுத் தரங்களினாற் சமயஞ் சாதித்து—மிருதி புரா ணங்கலைகண் மற்று மெல்லா மெய்ந்நூலின் வழிபுடையா மங்கம் வேதாங்கஞ்—சுருதி சிவாகம மொழியச் சொல்லுவதொ ன்றில்லை சொல்லுவார் தமக்கறையோ சொல்லொணாதே." என் றும், மற்றும் வருவனவற்றாற் காண்க.

மேல்வினா. எல்லாச்சமயங்களின் முடிபொருளும் வேதாகமத்தடங்குமாயின், எம்முடைய வாமதந்திரத்தை வேதாகமங்கள் சொல்லாவென்றது எப்படி?

மேல்விடை. இயம்பும் அவற்றுளது இழுக்கென்று. எ-து. உன்னுடைய வாமதந்திரத்தை வேதாகமங்கள்சொல்லும். சொல் லுமிடத்துச் செந்நெறியென்று துதியாது கொடுநெறியென்று நிந்திக்கும். அஃதேனெனில், கொலைமைசூழ்தலின். இதற்குப் பிரமாணம்: திருவள்ளுவர். "நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்—கொல்லாமை சூழுநெறி." என்றும், மற்றும் வருவனவற்றாற் காண்க.

மேல்வாதியுத்தரம். அப்படி வாமதந்திரங் கொடுநெறியாகில், அந்நெறி நின்றோர்க்குத் தெய்வீகசித்திகள் உண்டாகாமற்

போகவேண்டும். நாதாந்திகளாயினோர் சத்தியை அர்ச்சித்து அவளது கருணையால் அனந்த சித்திகளையடைந்து உலகின்கண்ணேவந்து விளையாடுதலின், வாமதந்திரம் செந்நெறியே.

மேல்விடை. எவர்க்கும் சித்திவாகு உற உண்டு அதை மதியேல். எ-து. உன்னினு முயர்ந்தோராகி வேதஞ் சொன்ன தருமத்திலே நடக்கும் உட்சமயிகளுக்கும் உன்னோடு சமான பாஷாண்டராகிய வேதத்துக்கு அன்னியராகிய புறச்சமயிகளுக்கும் உன்னினுந் தாழ்ந்தோராய் உலகத்தின்கண்ணே துர்த்தேவதை பூதபைசாசாதிகளை அனுசரிப்போர்க்கும் அவரவர் முற்செய்த கன்மபலத்தினாலே அத்தேவதையை உண்டென்று கருதி வைராக்கியங்களைச் செய்தலினால் அந்தத் தேவதைகள் தங்கள் தங்களுக்குண்டான சக்திக்கிசைய ஒவ்வொரு சித்திகளைக் கொடுக்குமாதலின்; உன் சமயத்துக்கு மாத்திரமுண்டாய் மற்றோரிடத்தும் இல்லாவிடினன்றோ, சித்தி பிரதானமாக நாட்டவேண்டும். சர்வரிடத்திலும் உண்டாயிருத்தலின், அவற்றினைக் காரணமாக மதித்து வாதித்தலை விடுவிடு.

மேல்வினா. சர்வரிடத்திலுஞ் சித்திகளுண்டாகில், எல்லாச் சமயங்களுக்குஞ் சமமேயென்னாது உம்முடைய வேதாகமஞ் சொன்ன தருமத்திலே நடப்பது அதிகமென்று சொல்லுவானேன்? மேல்விடை. அருளால் ஆகமவேதவழி வந்தோர்க்கு ஓகைதரும் பிரமசித்தி உண்டு. எ-து. திருவருள் துணையாக வேதாகமவழியை உள்ளபடி யறிந்து அடைந்தோர்க்கு யாவரானுங் கிட்டுதற்கரிதாய நித்தியானந்தத்தைக் கொடுப்பதாகிய பரமசிவசித்தி கிடைக்கும்.

இதற்குப் பிரமாணம்: சிவஞானசித்தி. "அருளினா லாகமத்தே யறியலா மளவி லானுந்—தெருளலாஞ் சிவனை ஞானச் செய்தியாற் சிந்தை யுள்ளே—மருளெலா நீங்கக்கண்டு வாழலாம் பிறவிமாயா—விருளெலா மிரிக்கலாகு மடியரோ டிருக்கலாமே." என்றும், மற்றும் வருவனவற்றுற் காண்க.

சுத்தமுத்தியடைந்தாலொழிந்து யாவனொருவன் அடையும் பதமுத்திகளுந் துன்பமே யல்லா தின்பமில்லை என்பனகுறித்து ஒகைதரும் பிரமசித்தியென்று கூறினரெனக்கொள்க.

இதற்குப் பிரமாணம்: திருவள்ளுவர். "தனக்குவமையில் லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்—மனக்கவலை மாற்றலரிது." என்றும், திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தேவாரம். "செல்வநெடுமாடஞ் சென்றுசே ணோங்கிச் — செல்வ மதிதோயச்செல்வ முயர்கின்ற—செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பலமேய—செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே." என்றும், திருமந்திரம். "ஒழிந்தேன் பிறவி யுறவென்னும் பாசங்—கழிந்தேன் கடவுளுநானு மொன்றானே—னழிந்தாங் கினிவரு மாக்கமும் வேண்டேன் — செழுஞ்சால் புடைய சிவனைக் கண்டேனே." என்றும், சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம். "விடையின்மேல் வருவானை வேதத்தின் பொருளானை—யடையிலன்புடையானை யாவர்க்கு மறியவொண்ணா—மடையில்வா ளைகள்பாயும் வன்பார்த்தான் பனங்காட்டூர்ச்—சடையிற்கங்கை தரித்தானைச் சாராதார் சார்வென்னே." என்றும், திருவாசகம். "நெறியல்லா நெறி தன்னை நெறியாக நினைவேனைச்—சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும் வண்ணங்—குறியொன்று மில்லாத கூத்தன்றன் கூத்தையெனக் — கறியும் வண்ண மருளியவா றார்பெறுவா ரச்சோவே." என்றும், சிவதருமோத்தரம். "இம்முறையமரரு மிடுக்கணெய்துவர்--தம்மினு முயர்ந்தவர் பதத்தைத் தாமுனி—யெம்முறையானுமெய் யிடுக்க ணேதுவே — செம்மைய செல்வமே சிவானு பூதியே." என்றும், தத்துவாமிர்தம். "மூவரே முதன் மொழிந்திடு மிமையவர் பதமுஞ்—சாவதோடுறு சனனமென் சாகரத் தழுந்தி—மேவுபாதியிற் பட்டுநாண் மிகுதியுற் றழியுந்—தேவர் தம்பதந் தீதென மிகவெறுத்தனனால்." என்றும், சொரூபானந்தசித்தி. "ஆதலானறியுமறிவெலாங் கைவிட் டறிவினுக் கறிவதாய் நின்ற—பேதமில் பிரமமொன்றுமே காண்பான் பேறும்பே ரின்பமாய்ப் பிறத்தல்—சாதலற் றிருக்கு

மகனையோர் வருத்தமின்றியே சாரலாயிருக்க — வாதரித்த றியா ரற்பமே விரும்பி யனந்ததுக் கத்திலே யமைவார்.'' என்றும், மற்றும் வருவனவற்றாற் காண்க. இத்தன்மையுடையன் வேதாகம நெறிகளாதலின், அவைகளே அதிகமென்றதெனக்கொள்க.

மேல்வினா. ஆனால் உமக்குப் பிரமஞ் சித்திக்குமாயின் அச்சித்தி அப்பிரத்தியக்ஷமே. எமக்கு உண்டாகிய பிரத்தியக்ஷ சித்திகள் உமக்குண்டாகா.

மேல்விடை. ஒழிந்தவையும் அவர்க்கு எளிதன்று உளத்துள் தேரே. எ-து. வேதஞ்சொன்ன தருமத்திலே நடந்து பூரணவஸ்து சித்தியடைந்தோர்க்குக் கைவசமாகாத சித்திகள் உலகத்தின் கண்ணே இல்லை. அஃதெங்ஙனமெனின், பூச்சக்கிரவர்த்தியாகிய ஒருவனுக்கு ஒரு கிராமமணியவிசாரணை இன்மையால், அந்தக்கிராமாதிகாரம் அவனுக்கு உண்டென்றும் இல்லையென்றுஞ் சொல்லவேண்டுவதில்லை. அதுபோலுமெனக்கொள்க, எ-று.

இதற்குப் பிரமாணம்: திருவாசகம். ''மண்ணினின் மாயை மதித்து வகுத்த மயக்கறு மாகாதே—வானவ ரும்மறியாமலர்ப் பாதம் வணங்குது மாகாதே—கண்ணிலி கால மனைத்தினும் வந்த கலக்கறு மாகாதே—காதல்செ யும்மடி யார்மன மின்று களித்திடு மாகாதே—பெண்ணலி யாணென நாமென வந்த பிணக்கறு மாகாதே—பேரறியாதவனேக பவங்கள் பிழைத்தன வாகாதே—யெண்ணிலியாகிய சித்திகள் வந்தெனை யெய்துவ தாகாதே-யென்னை யுடைப்பெரு மானரு ளீச னெழுந்தருளப்பெறிலே.'' என்றும், பட்டணத்துப் பிள்ளைபாடல். ''பொருளுங் குலனும் புகழுந் திறனு—மருளு மறிவு மனைத்து-மொருவர்—கருதாவென் பார்க்குங் கறைமிடற்றாய் தொல்லை—மருதாவென் பார்க்கு வரும்.'' என்றும், அனுபவசாரம். ''அறமுநல்கிடும் பொருளுடனின்பமு மருந்தவங் களுநல்குந்—துறவுங்

கல்வியுந் துணிவொடு நிலைமையுந் தூய்மையு மிகநல்கு—நிறமு நீர்மையு நினைந்தவை முழுவது நிகரில்வீடது நல்கு—மறிவ னன்கழ லொழியவங் கவைநினைத் தழியவ ரறிவென்னே.'' என் றும், மற்றும் வருவனவற்றாற் காண்க.

இ-து. வேதாகமம் ஈசுரவாக்கிய மென்றும், அவற்றின வழி நடப்பதே செந்நெறியென்றும், பூரணவஸ்து சித்தியே சித்தியென்றும், கூறியது. (கச)

இப்படிச்சொன்ன சித்தாந்தியை நோக்கி மேலும் வாமி கூறுகின்றான்.

உம்முடைய வேதாகம வழிப்படி நடந்துளோர்க்குப் பூர ணவஸ்து சித்திக்குமென்று நீர்சொல்லுவதே யொழிந்து நம்மு டைய வாமதந்திரானுசாரணைபோல உமக்கு அந்தவஸ்து உட னே பிரசன்னமாவதில்லை. ஒருவன் கூழேனுங் காடியேனும் பசிக்கு உதவினதே தேவாமுதமென்பது போல உம்முடைய வேதாகமவழி நின்று வஸ்து சித்திக்குமோ சித்தியாதோ வெ ன்று பிரயாசப்படுவதிலும் வாமதந்திரத்திற் சொன்னபடி நின்று சத்தியை ஆராதித்து எளிதிற் சித்தியடைவதே விவேக மென்று கூறுதலும், அவனுக்கு உத்தரங் கூறுகின்றார்.

தேர்ந்திலைகொல் கிழிநெடு சேர்வதெளி
  துயர்மனையுஞ் சேரக் கிட்டா
சார்ந்திடின் வேண்டியதருமாற்றனைத் தருமெம்
  மிறையுமிவண் டனிற்சார் வாய்ப்பின்
பேர்ந்திடுமெண் கருமிகள்சார் வுன்னதுலோ
  கிதன்மகிழும் பெரியோய் ஞானங்
கூர்ந்தவர்வான் சிறப்பெனினுங் கொலையின்வரு
  மெனிற்கடையாக் கொள்வ ரன்றே.

தேர்ந்திலைகொல் கிழிநெடு சேர்வது எளிது உயர்மனை யுஞ் சேரக்கிட்டா சார்ந்திடின் வேண்டிய தருமால் எம்மிறை யும் தனைத்தரும் இவண்டனிற் சார்வாய்ப் பின் பேர்ந்திடும்

எண்கருமிகள் சார்வு உன்னது. எ-து. இங்ஙனம் கூறியவர் ருள்ளும் இதனை நீ மிகவும் விசாரியாது கூறினை. அஃதெங்ஙன மெனின் இப்பூமியின்கண் ஒருபுலையனைக்காண்டலும் அவனது நட்புக்கொள்ளுதலும் அரிதல்ல. எளிதினுகும். அவனாற் பெறும் பய்னும் புல் விறகு முதலிய கருமமாம். தேசாதிபதியைச் சினே கித்தல் ஒருவர்க்கும் எளிதிற்கூடாது. அவனது வாயில் மந்திரி யாதியோர்களை ஒருவன் அனுசரித்துச் செய்கிற உபசாரத்தள வில் ஏககாலத்தாயினும் அநேககாலத்தாயினும் இராச சமுகங் கிட்டுதல் செய்வன். அப்படி அந்த ராஜாவை அடைந்து அவ னது சித்தம்வர நடந்தானுகில், அவனைத் தன்போலத் தேசாதி பதியாக்குவன். அப்படி எம்முடைய கர்த்தாவை யாவனெரு வன் கருதிச் சுருதி குருசுவானுபவ சித்தமாக அடைந்தானு கில், அவனைத் தன்மயமாக்குவன். அதுவன்றி, இவ்வுலகின்கண் ஒரு மகத்துவம் போலக்காட்டி அவற்றினல் தமது சரீரத்துக்கு அருந்தல் பொருந்தலையும் கீர்த்தியையும் பிறராலடைந்தும் அச் சரீராந்தத்து அழிவனவாகிய தம்பனுதி அட்டகன்மங்களை ஒரு பொருளாகக்குறித்த புல்லறிவாளர் அனுசரிக்கும் நெறிகாண் உன்னுடைய வாமதந்திராதி கொடுநெறிகள்.

இதற்குப்பிரமாணம்: ''வலிதொருபுலையன்றன்மனைக் குயர் ந்தோர் வரினெதிர் தொழுதுபுன் கருமஞ்—சொலுமுன முடி ப்ப னமைச்சரா திகளாற் றுரைதனைப் பலபக லடைந்தோர்க்—— கலகில்வாழ் வருள்வ னெனத்தமை நினைந்தோர்க் கருள்வர்புன் றேவரெண்கருமங்—குலவு மீசனுந்தன் னடியரூற் றனையே குறுகினர்க் கருளுவன் றனையே.'' என்றும், மற்றும் வருவன வற்றுற் காண்க.

மேல்வினு. ஆனல் வாமதந்திரத்தை அட்டகன்மங்களை இச்சித்தோரன்றி மோக்ஷத்தை வேண்டிய ஞானிகள் அனுசரி யார்களோ?

மேல்விடை. உலோகிதன் மகிழும் பெரியோய் ஞானங்கூர்ந்தவர் வான் சிறப்பெனினும் கொலையின் வருமெனில் கடையாக் கொள்வர் அன்றே. எ-து. கொலையாதிகட்கு அஞ்சாமை செய்தலினானும், சத்திபூசையின்கண் அனேக ஸ்திரீ கணங்கள் சூழ நடுநாயகமாய்த் தோன்றிக் களித்து விளையாடுதலினாலும் உனக்கொருவர் நிகரில்லையென்றும் நீயே என்னுடைய பிராண சினேகனென்றும் இதற்குச் சந்தேகமில்லை வலக்கைதாவென்றும் உலகின்கண் மூடருளெல்லாம் முழுமூடனாகிய உலோகாயதனாலே மகிழப்பட்டுள்ள பெரியோனே! கூறுதும் கேட்பாயாக. ஆருடஞானத்தையுடைய ஞாதாக்கள் மோக்ஷமெளிதிற்கிடைப்பதாயினும் ஒருகொலை முன்னிலையாகக் கிடைக்குமாயின் அதனைக்கடையான மோக்ஷமாகக் கைவிடுவராதலின், இங்ஙனம் கொலை முன்னிலையாக மறுமைக்கண் நரகத்தை விளைக்கும் அட்டகன்மங்களைத் தருவதாகிய உன்னுடைய கொடுநெறியை ஒருநாளும் விரும்பார்கள். எ - று.

உலோகாயதன் மகிழும் பெரியோய் என்பதற்குப் பிரமாணம்: சிவஞானசித்தி. "வாழவே வல்லை வாமி வலக்கைதாவென்னு யிர்க்குத்—தோழனீ யுன்னை யொப்பார் சொல்லிடினில்லை கண்டாய்—கோழைமா னுடர்கீ தென்னுங் கொலைகள் வாதிகொண்டே—சூழும்வார் குழலார் மொய்ப்பச் சுடரெனத் தோன்றினாயே." என்றும், மற்றும் வருவனவற்றாற் காண்க.

கொலையான் வரும்பேற்றைக் கடையாகக் கொள்வரென்பதற்குப் பிரமாணம்: திருவள்ளுவர். "நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக் — கொன்றாகு மாக்கங் கடை." அன்றியும், "அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற—னுயிர் செகுத் துண்ணாமை நன்று." என்றும், மற்றும் வருவனவற்றாற் காண்க.

ஞானிகள் அட்டகன்மநெறியை வேண்டார்களென்பதற்குப் பிரமாணம்: திருமந்திரம். "வேண்டார்கள் கன்மம் விம

லனுக் காட்பட்டோர்—வேண்டார்கள் கன்ம மதிலிச்சை யற்ற பேர்—வேண்டார்கள் கன்ம மிகுசிவயோகிகள்—வேண்டார்கள் கன்மம் விழுமியோ ரார்ந் தன்பே.'' என்றும், புலான்மறுத்தல். ''இம்மைப் பயனு மிருநாலு கன்மங்க—டம்முட் குறித்தான் கொடுபூசித் - தம்மார்க்கஞ்—செய்வ தலது சிவஞான வாரிதி சேர்ந்—துய்யுமவர்க் காகாவுணர்.'' என்றும், மற்றும் வருவன வற்றாற்காண்க.

இ-து. துர்த்தேவதா பிரசன்ன மெளிதென்றும், அதனு வரும்பயன் மிகவுஞ் சிறுமையினையுடைய அட்டகன்மங்க ளென்றும், அதனை அனுசரிப்போர் மிகவும் புல்லறிவுடையோ ரென்றும், சிவப்பிரசன்னம் மிகவும் அருமையுடையதென்றும் அதனு ஞன் வரும்பயன் மோக்ஷமென்றும், அதனை அனுசரிப்போர் மிகவுமுயர்ந்த தத்துவஞானிகளென்றும் கூறியது.

இப்படிக்கூறிய சைவசித்தாந்தியை நோக்கி மேலும் ... கூறுகின்றான்.

நீர் இங்ஙனம் தத்துவஞானிகள் கொலைசெய்தலும் புலா ... ண்டலுஞ் செய்யாரென்பது கூடாது. அதேனெனில், உல... தின்கணுண்டாகிய ஞானநூல்களெல்லாம் ஞானிசரித்தி... அக்கினிக்கொப்பென்று கூறுதலான். அக்கினியின்கண் ... தொரு மலாதிகள் சார்ந்ததாயினுஞ் சுட்டு நீறாக்குதல்போல ஞானியானவனும் யாதொரு புசிப்பு வந்தடைந்த காலையினு... நன்று தீதென்று பாராமற்கொண்டு ஞானாக்கினியாற் றகனம் பண்ணிப்போடுவன். ஆதலின், ஞானமில்லாதவரே புலாலுணவை விடவேண்டும் ஞானிக்கு அஃதில்லையென்றாயாகில்; அவ்வ... பழுதென்று மேலுத்தரங் கூறுகின்றார்.

அன்றழற்கொப் பறிஞரெதி ரருவினையைச்
சுடுதலினு லன்றியாதுந்
தின்றன்மரு ளருளினர்வீட் டமுதுளரீ
ராடியுண்போர் திகழ்நீத் தாஞய்க்

கன்றியெரிக் குதல்விலக்க லிலவூனிற்
　சிலவிலக்கிக் கசிந்து நீயோ
வொன்றருந்த லெனையொருவன் றரவுணினுன்
　கொலைதடுத்தாண் டுரைத்திடாயால்.

அன்று அழற்கு ஒப்பு அறிஞர் எதிர் அறிவினையைச் சுடுத லினால். எ-து. அக்கினிக்குச் சமானம் ஞானியென்பதொக்கும். அதுகொண்டு நீ கூறியது அருத்தமன்று. மற்றெங்ஙனமெ னின், ஞானியானவன் சஞ்சிதகர்மத்தைக் குருகடாக்ஷத்தாற் போக்கிப் பிராரத்தகன்மத்தை எடுத்த உடலின்கண்ணே அனு பவித்துத் தொலைத்து மேலுமொரு சனனத்துக்கு ஏதுவாகவ ரும் ஆகாமியகர்மத்தைத் தத்போதமிறந்தவிடத்து உண்டாகிய ஞானாக்கினியாற் சுடுதலின்; அக்கினிக்கொப்பென்பர்.

இதற்குப் பிரமாணம்: சிவப்பிரகாசம். "எல்லையில் பிறவி தருமிருவினை யெரிசேர் வித்தி—னொல்லையி னகலு மேன்ற வுடற்பழ வினைக ளூட்டுந்—தொல்லையில் வருதல் போலத் தோன்றிரு வினைக ளுண்டே—லல்லொளி புரையு ஞானத் தழ லுற வழிந்து போமே." என்றும், மற்றும் வருவனவற்றுற் கொண்க.

அன்றியாதும் தின்றல் மருள். எ-து. அல்லது யாதொரு பதார்த்தமுந் தள்ளாது புசிப்பான் ஞானியென்னுமிடத்து, ஒரு வர் மலாதிகளையிடினும் தள்ளாது புசித்தல்வேண்டும். அப்படிப் புசித்ததனுற் குற்றம்யாதெனின், அங்ஙனஞ் செய்தல் மிகுதி யுமறியாமையினைத் தருவதாகிய பைத்தியமென்னப்படுமாத லின் அறிவுடையோர்க்கு அறியாமைகூறுதல் மிகவும்பழுது. ஞானியானவன் யாரெனின், அருளினர் உள நீர் ஆடி வீட்டு அமுது உண்போர். எ-து. ஞானிகளெனப்படுவோர் அந்தக்க ரணம் புறக்கரணமடக்குதல் ஒருவழிப்படுதல் பொறை திடம் ஞானமடைதல் சத்தியங்கூறுதல் இன்சொற்கூறுதல் தானஞ் செய்தல் உயிர்கட் கிதஞ்செய்தல் ஆதியான மானத தீர்த்தமாடி முத்தியாகிய அமுதினை உண்டிருப்போரெனக்கொள்க.

இதற்குப் பிரமாணம்: காசிகாண்டம். "சத்தியந் தானஞ் சமதம மின்சொற் சாற்றுத லொருவழிப் படுதல்—புத்தியே முதல கரணமோர் நான்கு மடக்குதல் புலன்கள் போம்வழியி—னுய்த்திடா தமைத்தல் பொறைதிட ஞான முயிர்க்கெலாந் தண்ணளி புரித—லித்திற மனைத்து மானத தீர்த்த மெனவெடுத் தியம்பினர் மேலோர்." அன்றியும், "உரைப்பரு மானத தீர்த்த மோதிடிற்—சுருக்கமின் ஞானநீர் தோய்தன் மற்றது—விருப்பொடு வெறுப்பென விளம்பப் பட்டதோர்—கருப்புகுத் திடுமலங் கழுவு மென்பவே." என்றும், மெய்மொழிச் சரிதை. "சத்திய முரைக்க லுளுஞ் சகலபல் லுயிர்கட் கெல்லா—நித்தலு மிதமே செய்ய நினைப்பது சிவத்தை யென்று—மத்தன்வே தாகமத்தி னருளிய பொருளிம் மூன்று—மெத்திறச் சமயத்தோர்க்கு மெம்மதங் களுக்கு மிட்டம்." என்றும், "உடுப்பது சிலமுணவு வீட்டமுத முவப்பது ஞானமா மடந்தை—கொடுப்பது மருளைக் கொள்வது மறத்தை யிருப்பது மருந்தவக் குகையாம்—விடுப்பது குற்றந் தொடுப்பது சாந்தம் வெல்வதுந் தம்மைமெய்க் குரவ—னடித்தல மலரே முடிப்பது பிறப்பை யறுப்பவர்க் கருந்தொழி லிவையே." என்றும், மற்றும் வருவன வற்றுற் காண்க.

இத்தன்மையுடையோர் ஞானிகளென்றமையான் இதற்கு விரோதமாகிய கொலைபுலாலுணவு முதலாகிய துர்க்கருமங்களை ஆசைமிகுதியாற்கொண்டு அந்நெறியே செந்நெறியென்று நாட்டுவோர் அஞ்ஞானிகளென்பது மாயிற்று. இதற்குப் பிரமாணம்: சிவதருமோத்தரம். "பண்ணுன் பரமசிவஞானி பாவ விதமும் பயிற்றிடினு—முண்ணுன் போக மெனப் பனுவ லுரைக்கு மதனு லொருதலையே—நண்ணேந் துயரமெனப் பெரியோர் நவையு மியற்றி நசையாலே—மண்ணே ரவல மாசுரையை மாற்றி யிடவே வல்லாரார்." என்றும், சிவஞானதீபம். "நிலையுறுதி யாசார மொழுக்கஞ் சீல நிறையறிவு கருணைதவ நெறிநிலாமற்—கொலைகளவு கட்காம முதலாவுள்ள கொடும்பவமே

தவமாகக் கொள்ளுந் தீயோ—ருலகிலருஞ் சிவனருணூ லோத லாகா தோதினுமங் கவருரைகொள் ளொணுது நீலம்—புலை யர்மரு விடுந்தெருவிற் பொல்லாக் கும்பி பொருந்தியிடுங் குழி யதனுட் பூத்ததாமே.'' என்றும், ''ஞானவா ரமுதச் சுவையி னைச் செவிபா னலம்பெறக் கேட்டவப் பொழுதே—யானகா ரியமு மாகுகா ரியமு மாயலாக் கடவகா ரியமுங்—கானலீ ராயே கழிதரு மென்ருற் களிதர வமுதமே யுண்ட—ஞானிதா னழியும் விடயமே விடுமோ நண்ணிடின் ஞானியன் றவனே.'' என்றும், அருட்பிரகாசம். ''வேதத்தி லாகமத் திற்புக றாய விதிதவருர்—கோதுற் றிடினுந் தமதற் றிருப்பர்கள் கொள்கை யன்றித் — தீதைத் தினமுனைப் போலும் புரிந்தது செங்நெ றியா—வாதிப்ப ரோகெ டுவாய் சிவஞா னங்கை வந்தவரே.'' என்றும், ''நிலையாம் புலைமைகொள் வள்ளுவர் மூலர் நிகழ்த்து சைவத்—தலையாய மூவர் திருவாத வூரர் தருதமிழு—ளிலையாக மாதியுங் கூறு வுனக்கிவ் விருநிலமேற்—கொலையாதி ஞானி பணலாமென் றுரெவர் கூறுகவே.'' என்றும், மற்றும் வருவன வற்றுற் காண்க.

இதுவன்றி நீ அக்கினிக்கொப்பென்ற சொற்கு இன்ன மொரு தோஷமுண்டு. கூறுதும். திதழ் தீத்தானுய்க்கன்றி எரி க்குதல் விலக்கல் இல ஊனிற் சிலவிலக்கிக் கசிந்து நீ ஒரொ ன்று அருந்தல் எனே. எ-து. பிரகாசமயமாகிய அக்கினியானது ஒரொரு முன்னிலையாக ஒன்றினைச் சுடுவதன்றித் தனது சுதந்த ரத்தாற் பற்றி ஒன்றினையுஞ் சுடாது. பரேச்சையாற் சுடும்பொ ழுதும் ஒரொருபதார்த்தங்களை இச்சித்துச் சுட்டும் வெறுத்துத் தள்ளியும் விடாது. அந்நெருப்பினை நீ புலாலுண்டலினுல் உனக்கொப்புக் கூறினையாயில், பன்றி மாமிசம்போல நாய் கழுதை முதலியவற்றின் மாமிசத்தையும், உடும்பு மாமிசம்போல ஒணுன்மாமிசத்தையும்,சமமாகக்கண்டு புசித்தல்வேண்டும். அது வன்றி, அன்னபானுதிகளில் ஈ எறும்பு பாச்சை கரப்பான் முத லியவற்றின் ஒன்று வீழ்ந்திருப்பக்காணினும், மிகவும் அரோசக

முடையனுய் உண்ட சோற்றையுங் கான்றிடக்கண்டேம். அத னுனும், ஒரோரு மாமிசத்தை இச்சித்துப் புசித்தலினுனும், அக் கினிக்கொப்பென்றல் கூடாது.

சில பதார்த்தத்தில் அரோசகமடைவனென்பதற்குப் பிர மாணம். "உண்டிடுஞ் சோற்றி னூடே யோர்மயி ரெறும்பி யாதுங்—கண்டுமுன் பருந்தி லாய்முன் பயின்றதுங் கான்றிட் டாயான்—மண்டனிற் பன்றியாதி மலத்தைமுன் பழக்கத்தா லுட்—கொண்டிட விரும்புமாறென் கூறுதி யறிவிலாதோய்." அன்றியும், "ஊறுகா யாதி தன்னி னுதித்ததோர் புழுக்கண் டாயேல்—வேறவே வீசிச் சிந்தை மெய்மிகக் குலைந்துற் ருயா— னூழுமுன் புழுத்த தேனு நனிமிக விரும்பி யுள்ளங்—தேறிநீ யுண்ட வாறென் செப்புதி தெளிவி லாதோய்." அன்றியும், "தகருனதெதிரே சிந்தத் தான்றெறித் திட்டகோழை—புகலு முன் மீதிற்ருக்கப் பொருதுளங் குலைந்துற்ருயாற்—பகர்தரு மவற்றினூனைப் பற்றிய மூளையோடு—மகமகிழ்ந் தயின்ற வாறென் னறைகுதி யறிவி லாதோய்." என்றும், மற்றும் வரு வனவற்ருற்காண்க.

பிழையுறுதல் சிறிது என்பதுதொட்டு நீயோரொன்றரு ந்தலென்னையென்பது காறும் சத்திபூசைக்கு மாமிசம் நிவேதி க்கலாமென்ற வாமியைமறுத்து; சத்தியாதி தேவதைகளுக்கு மாமிச நிவேதனம் யோக்கியமன்றென்றும், வேள்விசெய்தல் வேதவிதியென்றும், வேதாகமம் ஈசுரவாக்கியமென்றும், பரம முத்தியால் இன்பமுண்டென்றும், அட்டகன்மத்தாற் றுன்பமு ண்டென்றும், தன்னுயிர்போல மன்னுயிர்க்கு இரங்கு மருளு டையோரே ஞானிகளென்றும், சாதித்தது.

இப்படி வாமியைமறுத்த வேலையில், அவணிருந்த பௌத் தன் சைவசித்தாந்தியை நோக்கிக் கூறுகின்ருன்.

இங்ஙனம் வாமியை நீர் மறுத்தது உபயமத சித்தாந்தமே. அஃதெங்ஙனமெனின், வாமியானவன் புலாலிச்சையினுல் ஒன்

றைக்கொன்றருந்துதலின், அவனது சரித்திரத்தாற் புண்ணிய மேயில்லை. ஒரு ஞானியானவன் தானாக ஒன்றையுங் கொன்ற ருந்தவொண்ணாது. வேறொருவன் ஒன்றினைக்கொன்று அதினா லையூட்டினானாகில், வாங்கிப்புசிக்கலாம். அஃதெப்படியெனில், ஒருவன் தண்ணீர்ப்பந்தல் வைத்தால் அந்தப்புண்ணியம் தண் ணீர்ப்பந்தல் வைத்தவனை யடைதலுந் தண்ணீர் குடித்தவனுக் குத் தாகம் நீங்குதலுமன்றிப் புண்ணியம் இவனுக்கில்லாதது போல; ஒரு சீவனைக்கொன்றவனுக்குத் தோஷமன்றித் தின்ற வனுக்குத் தோஷமில்லையென்று கூறுதலும், அவனை மறுத்து மேலுத்தரங் கூறுகின்றார்.

மேல்விடை. ஒருவன் ஊன் தர உணின் கொலை தடுத்து ஆண்டு உரைத்திடாயால். எ-து. ஒருவனொரு சீவனைக்கொன்று அந்த மாமிசத்தை உனக்குப் புசிப்பிக்க நீ புசித்தாயாகில், உன்னையும் அந்தப்பாவம் விடாது. அதேனெனின், நீ மாமிச பக்ஷணியாதலின், உன்னுடைய மனசு சீவகொலையே இச்சித் திருக்கும். அதனால் ஒருவன் கொன்றிடுமிடத்து இது தோஷ மென்று விதித்து விலக்கினால் உனக்கு அந்த மாமிசத்தை ஊட் டானென்பது குறித்துத் தோஷமென்று விலக்காயாதலானும், கொலையை யிச்சித்த தோஷம் மாமிசபக்ஷண தோஷம் கொலை தடுத்துப் பகர்கிலாததோஷம் இம்மூன்றுதோஷமும் உனக்கு உண்டாமாதலின் எனக்கொள்க. எ - று.

இதற்குப் பிரமாணம்: சிவதருமோத்தரம். "உண்ணு ஆனை விரும்பி யுயிர்க்கொலை—யெண்ணு வான்கொலை கண்டு ரங் கான்கொலை—பண்ணு வாரைத் தடுத்தும் பகர்கிலா—ண ண்ணுவா னிவரோடெனு நால்வரும்." என்றும், இதிகாசம், "கொன்றான் கொலச்சொனான் கூசவறுத் தானட்டான்—றின் றான் விலக்கிடான் சென்றெறன்று - கொன்றவனக்—குட்டவ் ங்க ளிட்டெரிக்க வெந்துகொடு வெந்நரகிற்—பட்டழுன்று வீழ் வார் பதைத்து." என்றும், மற்றும் வருவனவற்றாற் காண்க.

இ-து. ஆகாமியத்தைச் சுடுதலினால் ஞானி அக்கினிக்கொப்பென்றும், மாமிச பக்ஷணி இராகத்துவேஷமுடையவனாகையால் அக்கினிக்கொப்பல்லனென்றும், ஒருவன் கொன்றிடத்தின்றானென்னினும் பாவமுண்டென்றும், கூறியது. (கசு)

இப்படிக்கூறிய சைவசித்தாந்தியை நோக்கி மேலும் பௌத்தரில் ஏகதேசி கூறுகின்றான்.

இங்ஙனம் அந்தப்பௌத்தன் கூறிய உரைபழுது. அஃதேனெனில், ஒருவன் கொன்றிடத்தின்று கொலை தடுத்துப் பகராமையால், யாவனொருவன் சீவகொலை கண்டவிடத்து இதுதோஷமென்று தடுக்கவும், அவன் அது கேளாமல், வந்ததோஷம் எனக்குவரட்டும் நீருண்ணுமென்று ஊட்டினாற் புசிக்கலாம். நமக்கு அப்பொழுது தோஷமில்லையென்று கூறுதலும்; அதற்கு உத்தரங் கூறுகின்றார்.

உரைத்துமுறு பயங்கொலைசெ யொருவனைச்
சார்ந் தவற்குநர குளமண் ணுள்வோ
னிருத்தறையிற் பொருடிருடே லெனக்கவர்வோ
னொடுந்தமர் வீய்ந் திடலிற் றானாய்
மரித்திடினு மகத்தலதுான் றினலருளன்
மையிற்றுயர்பின் மறலி தூத
ரருத்தன்மெயிக் கலியின்மருந் துயிருயுங்கண்
டிதியிவற்றா னருந்த றீதே.

உரைத்தும் பயம் உறு கொலை செய் ஒருவனைச் சார்ந்தவற்கு நரகு உள; மண்ணுள்வோன் இருத்து அறையில் பொருள் திருடேல் எனக் கவர்வோனொடும் தமர் வீய்ந்திடலில். எ - து. கொலைதீதென்று சொல்லியும் அச்சமடையாது அதனைச் செய்யும் ஒருவனை வேறொருவன் கூடியிருந்து அவனுடைய அன்னபானாதிகளை உட்கொண்டானாகில் உட்கொண்டவனும் அவனடையும் நரகமடைவன். அஃதெங்ஙனமெனின், ஒருவன் இராசாவினது களஞ்சியத்திற் றிருடும்போது அவனது சிநேகராயிருந்

துள்ளவர்கள் அவனைநோக்கி இராசாவினது களஞ்சியத்திற் றிருடுதல் மகாகெடுதி அது செய்யவொண்ணாதென்ற விடத்து, கேடுவந்தால் நான் அனுபவிக்கிறேன் உங்களுக்கென்ன நீங்கள் என் வீட்டிலிருந்து சுகமாக உண்டு கொண்டிருங்களென்றால், அவன் வார்த்தையை நம்பியிருந்தவர்களும் அவனோடு மரணமடைதல்போலுமெனக் கொள்க.

இப்படிச்சொன்ன சைவசித்தாந்தியை நோக்கிப் பௌத்தரிற் பின்னுமொருவன் கூறுகின்றான்.

இங்ஙனம் இவர்கள் கொன்று தின்னலாமென்னுமதுவும் பாவம். ஒருவன் கொன்றிடத் தின்னலாமென்னுமதுவும் பாவம். கொன்றிடுமளவிற் கொலை தடுத்துக்கூறிப் பின்பு தின்னலாமென்னு மதுவும்பாவம். யாவனுயினும் பிறன் கொலையினாலிறந்த சீவனது ஊனைத் தின்பானாகில், "கொன்றார் பாவந் தின்பார்க்குமுண்டு." என்றுகூறிய உலகவழக்கவுண்மையால் இவனுக்குத் தோஷமுண்டென்பது நிச்சயம். இவையன்றி, தன்னியல்பாய் மாய்ந்த சீவன்தான் மண்ணினை மரத்தினை யொக்கும். அவற்றினைப் புசித்தானாகிற் பாவமில்லை.

மேல்விடை. தானாய் மரித்திடினும் மகத்தலது ஊன்தினல் அருளன்மையில் பின்மறலி தூதர் துயர் அருத்தல் மெய். எ-து. தன்னியல்பாய் மாய்ந்த சீவனதாயினும் யாகமல்லாவிடத்து ஊனருந்துதலெல்லாம் உயிர்களிடத்து அருளல்லாத படியினாலே, ஊனினையுண்டுவந்தோன் அவற்றினதிச்சையால் மற்றொரு சீவனுக்கு மரணம் வந்தவிடத்தும் இரங்காது சந்தோஷத்தையடைவனாதலின், அதுவுங் கொலையே. ஆதலின், எவ்விதத்தாயினும் புலாலுண்போர் நரகத்தின்கண் யமதண்டமடைதலே சத்தியம்,

இதற்குப் பிரமாணம்: திருவள்ளுவர். "படைகொண்டார்நெஞ்சம்போ னன்றூக்கா தொன்ற—னுடல்சுவையுண்டார் மனம்." அன்றியும், "பொருளாட்சி போற்றாதார்க்கில்லை யருளாட்சி—

யாங்கில்லை யூன்றின் பவர்க்கு.'' அன்றியும், ''செயிரிற்ற லைப்பிரிந்த காட்சியா ருண்ணா—ருயிரிற்றலைப் பிரிந்தவூன்.'' அன்றியும், ''உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண—வண்ணாத்தல் செய்யா தளறு.'' என்றும், திருமந்திரம். ''பொல்லாப் புலாலை நுகரும் புலையரை—யெல்லாருங் காண வியமன்றன் றூதுவர்—செல்லாகப் பற்றித் தீவாய் நரகிடை—மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே.'' என்றும், இதிகாசம். ''இட்ட விரை யாசையாலெய்தியமீன் றூண்டில் வாய்ப்—பட்டதென நாவிரசம் பார்த்துலகர்-கெட்ட—விருளாருலகத்தி லெய்துவர்க ளென்று—ரருளாருநெஞ்சத்தவர்.'' என்றும், மற்றும் வருவனவற்றுற் காண்க.

எவ்விதத்தும் ஊன்றின்றால் நரகமென்பதனால், பிராண ஆனிவரினும் விஷம் போலக்கண்டு நீங்கவேண்டுமென்ப தாயிற்று. மற்றொருவர் தண்டனையான் வந்துகூடினும், விஷமுண்டவன் மாற்றுவிழ்தந் தேடுதல்போல உடனே பரிகாரஞ் செய்ய வேண்டுமென்பதாயிற்று. இத்தன்மையாதலின், ஊனுண்ணார்க்கு ஊட்டுதலும் மகாபாவமென்பதாயிற்று. இதற்குப் பிரமாணம்: ''கொன்றி லாரைக் கொலச்சொலிக் கூறினர்—தின்றி லாரைத் தினச்சொலித் தெண் டித்தார்—பன்றியாய்ப் படியிற்பிறந் தேழ்நர—கொன்றுவாரருணையிதுண்மையே.'' அன்றியும், ''கொலையஞ்சாதொரு வற்கஞ்சிக் கொன்றுளோர்—சிலர்சொல் லஞ்சிப் புலாலினைத் தின்றுளோர்—நிலைய தாய்நரகத்திடை நிற்பரென்—றலகினூன்மறை யாகமமோதுமே.'' என்றும், மற்றும் வருவனவற்றுற் காண்க.

இப்படிச் சமயிகளுக்கு உத்தரங்கூறி மறுத்த காலையில், கற்றறிமூடனாகிய ஒருலௌகிகன் சித்தாந்தியை நோக்கி நீரிங்ஙனங் கூறியவற்றுள் வேள்விமாத்திரம் விதிதமாய்க்காட்டி மற்றெவ்விடத்தும் புலாலுண்டல் பாவமென்று, கூறினீர். அது கூடாது, அவ்வேள்விபோலத் திதிசெய்யுமிடம் மருந்துண்ணு

மிடம் பிராணனுய்யுமிடம் இவைகளினும் புலாலுண்ண விதியுண்டென்று வேதாகமநூலி னிருத்தலின்.

மேல்விடை. இக்கலியின் மருந்து உயிர் உயுங்கண் திதி இவற்று ஊன் அருந்தல் தீதே. எ-து. வேள்விபோலத் திதியாதிகள் சாத்திர விதிதமாயினும்; இக்கலியுகத்தில் மருந்தில் உயிருய்யுமிடத்தில் திதியில் புலாலுண்ணவொண்ணுதென்று புராதன விதிதமாய் நடந்துவருதலின், அவற்றினைச் செய்தலுங் குற்றமென்றறிவாயாக. எ - று.

இதற்குப் பிரமாணம்: அருட்பிரகாசம். மருந்திற் றிதியினுயிருய்யும் வாயின் மகமதனி—னருந்தற் கியல்ப தெனினுங் கிருதுவி னன்றியுளம்—பொருந்திப் புலாலுண் பரேகலி யூடறம் பூண்டிமையோர் — விருந்திற் சிறந்தமு தூட்டப்பொன் னூட்டுற வேண்டினரே.'' என்றும், காசிகாண்டம். "அருமகத் தன்றி யூன்சுவைத் துடலம் வீக்குவோ னதற்குடன் படுவோன்—கருவியிற் குறைத்தோன் பகர்ந்துளோன் கொணர்ந் தோன் வியந்துளோன் கடிகென வேவுந்—திருவிலி யதனை யட்டவ னிவர்க ளெண்மருந் தீநர கடைவர்—பரிவினான் விடுத்தோர் நாடொறும் புரவி மகம்புரி பலன்பெறு குவரால்.'' அன்றியும், "குழைமுகந் தூங்குஞ் செம்மணிப் பசும்பொற் குண்டல வேதியர் நாளு—மழன்முகத் தாற்று மருமகத் தன்றிச் செந்தசை யருந்துந ரில்லை—விழைவொடும் பயந்தோர்ப் பழிச்சிடா ரில்லை வெங்கவ றுடுந ரில்லை—கழிபெருங் குணத் துக் குரவனைப் பிழைப்போ ரரும்பொருள் கவருந ரில்லை.'' என்றும், மற்றும் வருவனவற்றுற் காண்க.

இ-து. கொலைஞரைச் சினேகித்தலும் பாவமென்றும், எந்த விதத்திலும் மாமிச பக்ஷணம் நரகமே விளைக்கு மென்றும், விதியுண்டாயினும் கலியுகத்தின்கண் யாகத்தன்றி மற்ரேரிடத் தினும் புலாலுண்ணவொண்ணுதென்றும், கூறியது. (கஎ)

இப்படிக் கூறிய சைவசித்தாந்தியை நோக்கிப் பின்னுங் கற்றறிமூடன் கூறுகின்றான்.

; யாகாதி நான் கிடத்தினும் புலாலுண்ணலாமென்று விதியிருக்க, யாகத்துண்ணலாமென்றும் மற்றிடத்தாகாதென்றுங் கலியுகத்தைக்குறித்துப் புராதன விதிதமென்றும் தள்ளுதல் பழுதென்றவளவில்; அவனைநோக்கி மேலுத்தரங் கூறுகின்றார்.

அருந்தனயன் றனைமனைதோள் பிறற்கீந்தும்
பெறுவதழ கக்கா லிக்காற்
பொருந்துமதோ விக்கலியீ டுணர்ந்தன்றோ
தமதாசாற் பூசித் தன்றோன்
றிருந்துமனை பதங்கையாற் றீண்டாதர்ச்
சனைநாளுஞ் செய்தார் மைதீ
ரிருந்தவரு நிமலத்தை மலத்துளமென்
றுணினுானுக் கிடுதி யூனே.

அக்கால் மனை தோள் பிறற்கு ஈந்தும் அருந் தனயன்றனைப் பெறுவது அழகு இக்கால் பொருந்துமதோ. எ-து. கலியுகத்தைக் குறிக்க வொண்ணாது எந்தக்காலத் தாயினும் விதியிருந்தபடி செய்யலாமென்று நீ சொல்லுவையாகில்; யாவனாயினும் பிதிர்கருமஞ் செய்யும்பொருட்டுப் புத்திரரைப் பெறானாயில் நற்கதியில்லையாதலில் புத்திரரில்லாத செல்வஞ் செல்வமே யல்லவென்று நூல்களெல்லாங் கூறுதலில், தனக்குப் புத்திரோற்பத்தி யில்லாத விடத்துத் தன்னுடைய ஸ்திரீயைப் பிறருடன் கூட்டியும் புத்திரரைப் பெறலாமென்றும் பொருள்கொடுத்தலினானும் தத்தங்கவர்தலினானும் ஒருவர் மகவெனப் புகுதலினானும் தனயர்சேயிருத்தலினானும் தன்னால் ஒருவனாவி யுய்தலினானும் கிடைத்த புத்திரரும் தனக்குப் புத்திரரேயென்றுங் கூறிய எழுவகைப் புத்திரரில் தன்னுடைய ஸ்திரீவயிற்றிற் பிறந்த புத்திரரே விசேஷமாதலில் தன்னுடைய ஸ்திரீயைப் பிறரோடு கூட்டியும் புத்திரரைப் பெற்று வாழுதல் கலியுகமல்லாத யுகங்களுக்கெல்லாம் மிகச் சிறப்பாக வழங்கும். அந்தவிதி உனக்கு

இந்தக் கலியுகத்திற் செய்யக்கூடுமோ கூடாது. ஆதலிற் காலத்துக்கேற்ற விதி நடக்கவேண்டுமெனக் கொள்க.

இதற்குப் பிரமாணம்: காசிகாண்டம். "எத்திரு வுடையரேனு மின்கனி மழலைச் செவ்வாய்ப்—புத்திர னிலாதோ ரென்றும் பொறியில ராய வாற்றான்—மெய்த்தவம் புரிந்து மைந்தர்ப் பெறுவதே விழைவர் யாரு—முத்தநன் மகவுமோரேழ் பான்மையா வுரைப்பர் மேலோர்." அன்றியும், "மனைவிதன் கொழுநற் கின்றேன் மற்றவ னருளினுலே—[illegible] ளயலார்க்கின்றே [illegible] கொண்டோ—னினிதுறு தத்தமைந்தன் மக[illegible] மைந்தன்—றனயர்செய் தன்னுலாவி யுய்ந்தவன் [illegible] என்றும், பிரமோத்தர காண்டம். "[illegible] காமுளை யில்லை யென்று—[illegible] பொருந்தார் வீறும்—[illegible] ளுய்ந்து—பாவருந் [illegible] செய்தான்." அன்றியும், "அருந்ததி யனைய கற்பின் [illegible] யணங்க னுடோள்—பொருந்தியின் கலவி துய்த்தோர் புதல்வனைத் தந்துதிரா—விருந்துய ருலகந் தீர வியற்றினன் முனிவ னிப்பாற்—பெருந்தகை தவஞ்செய் வானைப் பேய்மக ளொருத்தி பற்றி." என்றும், மற்றும் வருவனவற்றுற் காண்க.

பின்னுங் கற்றறிமூடனை நோக்கிக் காலகர்மம் நடக்கவேண்டுமென்பதற்கு வலியுறுத்திக் கூறுகின்றார்.

மேல்விடை. இக்கலி ஈடு உணர்ந் தன்றோ தமது ஆசாற் பூசித்து அன்னேன் திருந்து மனை பதம் கையால் தீண்டாது அர்ச்சனை நாளுஞ் செய்தார் மைதீர் இரும் தவரும். எ-து. இக்கலியுகத்தினது வலியினை உணர்ந்தன்றோ தம்முடைய ஆசாரியரை விதிமுறையே முன்பு அர்ச்சித்துப் பின் அவரது தேவியை அர்ச்சிக்குமிடத்து அவளது பாத கமலங்களைக் கையினுற் றீண்டாது அணுகின்று மலர்தூவி நாடோறும் அர்ச்சிக்கவுஞ் செய்

தனர் மயக்கந்தீர்ந்த பெரியோர்களுமெனக்கொள்க. இதற்குப் பிரமாணம்: சைவசமயநெறி. "ஆசான் மனையை யடிதீண்டா தர்ச்சிக்க—வாசார் மலரான் மதித்து." அன்றியும், "அந்தயுகர் தோறுமடி தீண்டியருச் சிக்கைதகு--மிந்தக் கலியுகத்தே ய" என்றும், மற்றும் வருவனவற்றுற் காண்க.

இப்படிக்கூறிய சைவசித்தாந்தியை நோக்கிக் கல்லாதமூடனாகிய லௌகிக னொருவன் எழுந்து நின்று அங்ஙனமிருந்த சபையையெல்லாம் கையமர்த்தி ஒன்று சொல்லுகின்றான். உன்னுடைய வீண் சாத் [illegible] ல்லாவற்றையும் புறத்திலே போட்டுவிடு. நான் ஒ [illegible] கிறேன் கேள். அதேதெென்றால், உடம்பிலே [illegible] யெல்லாம் உதிர்த்துப் போட்டு எலும்புமாத்திர [illegible] லோ மாமிசம் விட்டதற்கு அடையாளம். நீ ஆ [illegible] ன்றாலும் மாமிசதேகத்திலே இருக்கும்வரையும் ம [illegible] டேனென்கிறதேபொய்; மனுஷராய்ப் பிறந்தவர்களெல்லாரு [illegible] பிழு கவருக்கு மண்போடுதல்போல மாமிசதேகத்துக்கு மாமிசமே தின்னவேண்டும் உன்பேச்சை மெய்யென்று கேட்டு மாமிசத்தை விட்டவன் கெட்டுப்போவான். பிழைக்கிறவன் ஒருக்காலுங் கேட்கவே யொண்ணாது என்றவளவில், அவனைநோக்கிக் கைகொட்டிச் சிரித்து மேலுத்தரங் கூறுகின்றார்.

மேல்விடை. நீ மலத்து உளம் என்று மலத்தை உணின் ஊனுக்கு ஊன் இடுதி. எ-து. நீசொன்னது நல்லதுதான். மாமிசதேகத்துக்கு மாமிசமே போடவேண்டுமென்ற நீ இதுமாத்திரஞ் செய்யாமலிருந்தது குற்றம். அஃதேதென்று கேட்பாயாகில், சொல்லுகிறோம். மலத்தை வயிற்றில் வைத்துக்கொண்டிருக்கிறாயல்லாமல் அத்தைவிட்டு நீங்கியிருந்த விடந்தானில்லையே, அப்படியிருக்கப் பசிவந்த நேரத்தில் மலத்துக்கு மலமேயிடவேண்டுமென்று பிறருடைய மலத்தைப் பக்ஷணம் பண்ணாமலிருப்பதேன்? அதுவன்றி, மலம்விட்ட நேரங்களினும் அருவருத்துக் கால்கை சுத்திபண்ணுவதேன்? இப்படிச் செய்

பாமலிருக்கிற நீ மாமிசத்துக்கு மாமிசமிடவேண்டுமென்பது கூடாது. எ - று.

[illegible]ற்குப் பிரமாணம்: திருவள்ளுவர். "தன்னூன் பெருக்கத் தான்பிறி தூனுண்பா—னெங்ஙன மாளு மருள்." என்[illegible]ம, காசிகாண்டம். "புழுவுந் தசையும் வெண்ணிணமும் பொதி[illegible]த குரம்பை வீக்குதற்குக் — கழியூ னைகந்தோர் கொடுநரகிற் கற்ப காலங் கிடந்தழுந்தி—விழைவின் [illegible] நுகர்ந்த விலங்கு மவர்தம் மெய்த்த[illegible]—[illegible]றிவெம் பசியாற் பறித்த[illegible]ருந்து மென்னும் பான்மை [illegible] [illegible]ன்றும். மற்றும் வருவனவற்றுற் கா[illegible]ணக. [illegible]ன்வனைப் புருந்த[illegible] [illegible]ர் றனையராவார்." [illegible]

இங்ஙனம் [illegible] [illegible]த்தியாக சொல்லி மறுக்கவேண்டியது [illegible] றனக்குப் பி[illegible] [illegible]மையைக் குறித்தெ[illegible]ங்க. சித்தாந்தியா[illegible] ளுள்டோ [illegible]ரித்தாரென்[illegible] உரையில் [illegible]ருவித்தது அங்ஙனக் [illegible] [illegible]லௌகிகரது [illegible]மையைக் குறித்து எடுத்துககூறியதென்[illegible] கொள்க, இங்ஙனம் உரைமிக[illegible]ந் தூலவார்த்தைகளாக விரிக்கவேண்டியது அவரதிருதயநுட்[illegible]வ் காட்டற்கென்க.

இ-து. முற்காலவிதி இக்காலத்திற் செல்லாமையால் காலத்திற்பொருந்திய விதிநடக்கவேண்டுமென்றும், மலத்துக்கு மலமிடலாமாகில் மாமிசத்துக்கு மாமிசமிடலாமென்றும், கூறியது.

இப்படிச் சொன்ன சைவசித்தாந்தியை நோக்கிப் பின்னு [illegible]மாரு லௌகிகன் கூறுகின்றான்,

இங்ஙனம் இவன் மனுஷராய்ப் பிறந்தவர்களெல்லாரும் மாமிசத்துக்கு மாமிசமே யிடவேண்டுமென்று அறியாமற் சொன்னான். அப்படிச்சொல்லிற் பாவமல்லவோ? ஒரு நல்லவன் பொல்லாதவன் ஒரு பார்ப்பான் பட்டன் முதலான நாலு சாதிகட்கும் ஒன்றாகச் சொல்லலாமோ? மாமிசந் தின்னுகிற சாதி தின்னவே வேண்டும். தின்னாதசாதி ஒருகாலுந் தின்னவே யொண்ணாது. தின்னுகிறசாதி விட்டாலும் பாவம். தின்னாத

சாதி தின்றாலும்பாவம் என்று சொல்ல; அவனை நோக்கிச் சை
ஸித்தாந்தியார் சிரித்து மேலுத்தரங் கூறுகின்றார்.

ஊனுணுஞ்சா திகண்மிருகா திகளறம்பூண்
டவையுளுமுன் பொழுகிற் றானீ
தானெனவூன் றினல்பழுதோ ரிழிவுபிதாப்
புரியின்மைந்தர் தாமுஞ் செய்யார்
மா நிலத்திற் பாலர்பித்தர் தெளிந்துமிழுக்
கியற்றினுண்டோர் மறுக்கொ ணாதூ
னுன்மவிச்சை கருதிமுறை யல்லாரைத்
தோய்ந்துறினு னருந்தல் செய்யே.

ஊன் உணும் சாதிகள் மிருகாதிகள் அவை உ... முன் அறம் பூண்டு ஒழுகிற்றால் நீதான் என ஊன் தி... பழுது. எ-து. நீ சொன்னது சத்தியம். தின்னுஞ்சாதி தின்... னும்; தின்னாதசாதி ஒருகாலுந் தின்னவே யொண்ணாது. தின்னு... சாதி எது தின்னாச்சாதி எது என்று கேட்பாயாகில், ... பிசாசு நாய் நரி கோட்டான் கழுகு பருந்து காகம் ... முதலியவைகள் யாதொரு பிணங்கிடக்கக் கண்... அதினுடைய அசுத்தத்தையும் துர்க்கந்தத்தையும் பார்... றும் அருவருப்பின்றிச் சூழ்ந்துகொண்டு பிடுங்கித் ... னும், இது நல்லது இது தீயதென்றும் இது புண்... இது பாவமென்றும் பகுத்துங் கேட்டும் அறிதற்கு ஒரு வி... லாதபடியினாலேயும், அவைகளே தின்னுஞ்சாதி. ... களைக் கேட்டுப் பாவமிது புண்ணியமிது வென்றறிந்து ... யத்துக்கு உள்ளும் பாவத்துக்குப் புறம்புமாக நடந்து ... மோக்ஷங்களை அடைய வேண்டினவனாதலால், மனுஷ... னாதசாதி. தின்னுஞ்சாதியாகிய மிருகாதிகளுள்ளும் ... உபதேசத்தால் முன்பு ஒருபுலி கொல்லாவிரதியாய் ...ர்வசன னமும் உணர்ந்து யோகத்தால் நற்கதி யடைந்த... முன்பு ஒருநாரை கொல்லா விரதியாய் ஞானமு... மதுரையை யடைந்து சிவசாரூபம் பெற்றதென்றும், ...று

மொரு கபோதம் தனது பேட்டினைக் கவர்ந்த வேடனது பசி நீக்கி உயிர் புரப்பான் பொருட்டு நெருப்பில் வீழ்ந்திறந்து பரலோகமடைந்த தென்றும், அகஸ்தியராதி ரிஷிகளாசிரமங்கடோறும் இருந்த மிருகபக்ஷிகளெல்லாம் ஞானநெறிபூண்டு அருளொடு விளங்கினவென்றும், வேதாகம புராணாதிகளிற் கூறுதல் கேட்டிருந்தும்; தின்னாதசாதியாகிய நீ தின்னுஞ்சாதியென்று கொண்டு பாவங்களுக்கெல்லாந் தலைமையாகிய கொலையை மேற்கொண்டு ஒழுகிப் புலாலினையருந்தி நரகிடைவீழ்தற்கு எண்ணுதல் மிகவுங் குற்றமென்றறிவாயாக.

மிருகாதிகள் தின்னுஞ் சாதியென்பதற்குப் பிரமாணம்: சிவதருமோத்தரம். "நாயினுக்கும் பேயினுக்கு நரியினுக்குங் கழுகினுக்கு — மீயினுக்கு மினிதுபிண மெனிலதுதா னினியதுவோ—வாயினுக்கு மனத்தினுக்கு மதிப்பரிய மாதேவன்—றேயினுக்கே சிவமதனைத் தினைப்பாரே சிறந்தாரே." என்றும், புலான்மறுத்தல். "நாய்கழுகு கூகை நரி காக மீயெறும்பு—பேயிவைக ளாவி பிரிந்தவு - னேயமொடு—தானருந்த லல்லாது சற்கா ரியமனிதர்—தானருந்த லாவதோ தான்." என்றும், "தவகதியை வேண்டியவ ருயிரில்சடந் தினறவிர்க தவமழித்தாங்—கவகதியை வேண்டுபவர் கழுகுநரி செயுந்தொழிலையயரா நாட—சிவகதியுந் திருமாறன் றிகழ்கதியு மயன்கதியுந் தெய்வலோகத்—துவகதியு மிகந்தெரியுந் துர்க்கதியின் வீழ்வர் பரஞ் சோதி யாணை." என்றும், புலான்மறுத்தல். "பிணங்கிடக்க நானுகரேனென்றுநீ பேசுங்—குணங்கிடக்க வேண்டியதென் கூறாய் - பிணத்தைக்—கலத்திலே யிட்டுக் கலந்துநாவாரப்—புலத்தினூற் றின்றாய் புகல்." என்றும், மற்றும் வருவனவற்றாற்காண்க.

மிருகாதிகளினும் ஒரொன்று கொல்லாவிரதத்தால் நற்கதியையடைந்தது என்பதற்குப் பிரமாணம்: திருவிளையாடல். "பிரிவறக் கொன்று தின்னுங் கடைப்படும் பிறப்பு நாரை—

வரனுறு தேவராகி வான்றெழ விருப்பக் கண்டீர்—கருதுதிரெ ன்றும் பொல்லாக் கடையரா யினுங்கொல்லாம—லரனைவந் திப்ப ரேல்வா ளுள்வதற் கையமின்றே.'' என்றும், காசிகாண் டம். "கொன்றுவிலங்கின் றசைநுகருங் கொடுமை யோரவ் விலங்கினுட—றன்று மயிரெத் துணையாமத் துணைய காலம் வெந்நரகி—ஞென்றிநுகர்வாய் புழுவொழுக வுழப்ப ரென்கை புணர்ந்தேயோ—கன்று சினவெங் கொடுவிலங்கும் புலவூன் றின்னக் கருதாவால்.'' அன்றியும், "ஒருமீன் புலவுவாய் மடுப்பி ஞெழியுந் தசைக ளனைத்தினையும்—பரிவா னுகர்ந்தோர் வீழ்கி ன்ற பாழ்வெந்நரகிற் படிவரெனு — மருமாமறையின் பொரு டேர்ந்தோ வந்தா மரைநாண் மலர்பொதுளும்—விரிநீர் வாவி பயின்மீன்கள் விழுங்கா துலவும் புள்ளினமே.'' இதிகாசம். "புள்ளுக் குளகுணமு மில்லாத புல்லறிவாங்—கள்ளக் கருமன த்தே காலன்கைக் - கொள்ளப்போய்—புக்காழ் நரகத் துழை யாது போனுன்மற் — றெக்காலத் தெந்நா ளினி.'' என்றும், அருட்பிரகாசம். "புலிநாரை யெண்புற வாதிகண் முன்னம் புலாலருந்துங்—குலனு யிருந்து மருளோம்பி முத்தி குறுகிய தென்—றுலகூடுரைப்ப சொற்கேட்டு மருளற்றுழன் றிறக்குஞ்-- சிலர்மா னுடத்தென்ன செய்வான் புவியிற் செனித்ததுவே.'' என்றும், மற்றும் வருவனவற்றுற் காண்க.

இப்படிக்கூறிய சித்தாந்தியை நோக்கிப் பின்னு மொரு லௌகிகன் கூறுகின்றான்.

இங்ஙனம் இவன் தின்னுதசாதியென்றும் தின்னுஞ்சாதி யென்றும் அறியாமற்சொன்னான். யாவனொருவனுக்குஞ் சாதி யைக்கொண்டு காரியமென்ன? இந்தப்புத்தி முன்னிருந்தவர் கள் அறியாமல் நடந்தார்களோ? அவர்களைப் பார்க்கிலும் நாம் என்ன ஆகாசத்திலே பறக்கிறோமோ? பிதாவும் மாதாவும் எந் தப் பிரகாரம் நடந்தார்களோ அந்தப்பிரகாரம் நடக்கிறதே

காரியம் என்றவளவில்; அவனைநோக்கிச் சிறிது உத்தரம் மேற் கூறுகின்றார்.

மேல்விடை. பிதா ஓர் இழிவு புரியில் மைந்தர் தாமும் செய்யார். எ-து. பிதா நடந்தமுறையே நடக்கவேண்டுமென்பது கூடாது. அதேனெனில், தம்முடைய பிதாவாயினும் பிறராயினும் வேதாகமங்களை ஓதியுணர்ந்து தருமத்துக்கு உள்ளும் பாவத்துக்குப் புறம்புமாகத் தானும் நடந்து பிறரையும் நடப்பிப்பான் யாவன் அவனையே அறிவுடையோர் பிதாவென்று அங்கிகரித்து அவன் நடந்தமுறையே நடவாநிற்பர்கள். அதுவன்றி, தன்னுடைய பிதாமாதா பாவியானாலும் அவர் நடந்த முறையே நடப்பது உசிதமன்று. நீ உசிதமேயென்னில் அவனுடைய பிதாவானவன் முன்னே கன்மவசத்தாற் பிறர் கேட்கில் மிகவும் நகைத்து நாணத்தருவதாகிய இழிவினைச் செய்திருப்பானாகில், அதுவே ஒழுங்கென்று அவனுடைய பிள்ளைகளும் அப்படியே செய்யக்காணோம். ஆதலின் வேதாகமங்களை ஆராய்ந்த நாதாக்களது புத்தியின்வழியே நடப்பதே விவேகம்.

இதற்குப்பிரமாணம்: "தந்தைநடந் துளமுறையே நடப்பதொழுங் கெனிஞெருவன் றரணி மீதே—நிந்தைதரு புருடசும்ப னுதிசெய்தா னெனிலதுவே நெறியென் றன்னோன்—மைந்தர்பினும் புரிவதிலை யெவரேனுந் தருமநெறி வழுவிலோரே—யந்தமிகு தாதைகண்மற் றவர்நடந்த நெறிநடப்ப தறிவா மன்றே." என்றும், மற்றும் வருவனவற்றாற் காண்க.

இப்படிச்சொன்ன சைவசித்தாந்தியை நோக்கிப் பின்னுமொரு லௌகிகன் கூறுகின்றான்.

இங்ஙனம் இவன் பிதா நடந்தபடியே நடக்கவேண்டுமென்றறியாமற் சொன்னான். பிதா பிச்சையெடுத்தானென்று மகனும் பிச்சையெடுக்கவேண்டுமோ? அது வேண்டியதில்லை. எவனானாலும் பிறவியன்பாய் மாமிசம் விட்டவனே விட்டவன். சில

காலந் தின்றுகொண்டு திரிந்து நடுவிலே எனக்கு ஞானம் வந்த தென்று விட்டுவிட்டானாகில், ஒருபலனுமில்லை. அப்படி விடு கிறபொழுது முன்னந்தின்ற வாயையும் கையையுங் கூடவிட்டு விடவல்லவோ வேண்டும் அல்லாதபொழுது விட்டதிற் கூட்டே யல்ல. ஆனபடியினாலே, தின்றவன் தின்றேவரவேண்டும். நடு விலே விடவொண்ணாதென்றவளவில், அவனைநோக்கிச் சிரித்து மேலுத்தரங் கூறுகின்றார்.

மாநிலத்தில் பாலர் பித்தர் தெளிந்தும் இழுக்கு இயற்றின் ஊன் உண்டோர் மறுக்கொணாது. எ-து. நீ சொன்னது நல்லது தான், இப்பூமியினிடத்து ஒருவனை நீ குழந்தையா யிருக்கிற காலத்தில் மலத்தைத் தின்றாயென்று அவன் பெரியவனாயிருக் கிறகாலத்தில் முன் கண்டிருந்தவர்கள் சொல்லக் கேட்டானா கில் அறியாதகாலத்திற் செய்ததை இப்பொழுது நீ சொல்லலா வதேதென்று கோபிப்பானன்றி முன்பு தின்ற வாயுங் கையுமி ருக்க இனி விட்டதனாற் பிரயோசனமில்லையென்று பின்புந் தின்னக்கண்டிலேம். அதுவன்றியும், ஒருவனைப் பைத்தியந் தொடுத்திருந்த காலத்தில் மலாதிகளையுந் தின்று தின்னாத வீடு களினும் வாங்கித் தின்றுகொண்டு திரிந்தானேயானாலும், பைத் தியந் தெளிந்தகாலையில் தின்னாத வீட்டினும் வாங்கித் தின்று மலாதிகளையுந் தின்னக்காணேம். அதுவன்றியும், உலகத்தின் கண் உண்டாகிய பெண்ணும் ஆணும் சிறுபிள்ளையாயிருக்கிற காலத்தில் சீரை உடுக்காமல் அபிமானம் பலருங்காணத் திரிந் தார்களாயினும் பெரியவர்களான காலத்தினும் சிறுபோதிற் பல ருங்கண்ட அபிமானத்தை இனி ஏன் மறைக்கிறோமென்று பின் பும் சீரை உடுக்காமலிருக்கக்காணேம். இது பித்தனுக்கு மொக் குமாதலின், மாமிசந்தின்றவன் தின்றேவரவேண்டுமென்கிறது யோக்கியமன்று. விவேகம் வந்தபோது விடுகிறதே யோக்கியம்.

இதற்குப்பிரமாணம்: திருவிளையாடல். "முன்னைவே தனை யை விட்டு முற்றிய வறிஞர் நெஞ்சிற்—பின்னொரு விகார

மின்றி யிருப்பரிப் பிணப்புலாலை—நன்னெறி யறிந்த நாமு நாவழி யொழுகிக் கெட்டேந்—தின்னவே நயந்தோ நம்போற் றிங்குளா ருண்டோ வின்றே.'' என்றும், புலான்மறுத்தல். ''அருந்திச்சின் ஞூ னதன்மேல் விடுக்கின்—வரும்பயனே தென்னின் மழலை - திருந்தறிவிற்—பித்தரறிவு பிறங்கியபோ தும்மலத்தைத்—துய்த்திடுவ துண்டாயிற் சொல்.'' என்றும், ''மைந்தர்கண் மாதர்கள்கோச பகமாதி மழவுருவின் மறைத்தி லேமென்—றிந்தவுடைகொடு மறைப்ப தெத்தினுக்கென் றுளிர் பருவத் தெறிக லார்தஞ்—சிந்தையினுண் மிகுத்தணிவ ராத லினு னுணவைமுனநந் தின்று யேனு—நிந்தைசெய்திப் பொழு தகற்றத் தகுமிலையேற் கெடுவாயுன் னினைவென்னுமே.'' என்றும், மற்றும் வருவனவற்றுற் காண்க.

இப்படிச்சொன்ன சைவசித்தாந்தியை நோக்கிப் பின்னு மொரு லௌகிகன் கூறுகின்றான்.

இங்ஙனம் பிறவியன்பாய் மாமிசம் விட்டவனே விட்டவ னென்றும் நடுவிலே விடுகிறது பாவமென்றும் இவனறியாமற் சொன்னான். மாமிசத்தை எப்போது விட்டாலும் விடலாம். விடுகிறபொழுது ஒருவனுக்கு மாமிசத்தை விட்டுப்பார்க்க, அது ஒத்துக்கொண்டால் மாமிசத்தைத் தின்னமல் விட்டுவிடவேண் டும். ஒத்துக்கொள்ளாதிருந்தால் விட்டுவிடுகிறது தோஷம். அதெப்படியென்றால், ஆன்மாவிற்கு இச்சையில்லாமற்போனல் ஒத்துக்கொள்ளும் இச்சையுண்டானதேயானல் ஒத்துக்கொள் ளாது. ஒத்துக்கொள்ளாதிருக்க விடுகிறபொழுது ஆன்மவிச் சையை யடக்கவேண்டும். ஆதலால் ஆன்மவிச்சையை அடக்கு தலே மிகுந்தபாவம். ஆன்மவிச்சையை அடக்கவேயொண்ணது என்றவளவில், அவனைநோக்கிச் சிரித்து மேலுத்தரங் கூறு கின்றார்.

ஆன்மவிச்சை கருதி முறையல்லாரைத் தோய்ந்து உறின் ஊன் அருந்தல் செய்யே. எ-து. நீ சொன்னது சுபாவந்தானே.

ஆன்மவிச்சையை யடக்கவொண்ணுதென்கிறபொழுது உலகத்தின்கண்ணே ஆணுக்காயினும் பெண்ணுக்காயினும் காமவிகாரத்தினுலே மாதா பிதா தம்பி தமையன் தங்கை தமக்கை முதலானவர்களில் ஒருவருக்கொருவர் மேலிச்சையுண்டானதேயானுல் ஆன்மவிச்சையை அடக்கவொண்ணுது அடக்கிற்றேஷமென்று கூறினுல், விஷயானந்தமில்லாதே போகின்றதோ? உண்டாயிருக்கவும் அப்படி வந்த காலத்தில் மிகவும் நடு நடுங்கி நரகத்தில் விழப்போகிறேமென்று பயப்படுகிற படியினுலேயும், பிறர் கேட்டால் நிந்தை வருமென்று அஞ்சுகிறபடியினுலேயும், ஊனுண்டலும் மிகுந்த பாவமாதலின், யாதொன்றும் செய்யுங்காரியமுந் தவிருங்காரியமும் அறிந்து நடக்கவேண்டுமென்றறிவாயாக. எ - று.

இதற்குப்பிரமாணம்: திருவள்ளுவர். "செய்தக்க வல்லசெயக்கெடுஞ் செய்தக்க—செய்யாமை யானுங் கெடும்." என்றும், ஔவையார். "பொல்லாங்கென்பவை யெல்லாந்தவிர்." என்றும், "ஆசுறு மான்ம விச்சை யடக்குத லாகா தென்று—மாசுறு மூனைத் துய்த்து மாதுயர் நரகத் தாழ்வீர்—பேசிய தந்தை தாய்மேற் பெருகிய வாசை கூறிற்—கூசிடா தவர்க டம்மைக் கூடுதல் குணமோ கூறீர்." என்றும், மற்றும் வருவனவற்றுற் காண்க.

இ-து. மாமிசந் தின்னுஞ்சாதி மனுஷரல்லரென்றும், யாவராயினும் நல்லறிவாளர் நடந்தபிரகாரமே நடக்கவேண்டுமென்றும், விவேகம் வந்தபோதே மாமிசபக்ஷணம் விட்டுவிட வேண்டுமென்றும், பிராண ஆனிவரினும் மாமிசபக்ஷணம் பாவமாதலால் அதனைச்செய்யவொண்ணுதென்றும், கூறியது. (கக)

இப்படிச் சைவசித்தாந்தியார் யாதொன்று மாராய்ந்தறிந்து நடக்கவேண்டுமென்ற மாத்திரத்தில், அந்தச்சபையின்கண்ணே இருந்த சகல சமயவாதிகளும் எழுதின சித்திரங்கள் போலவும் காற்றில்லாதவிடத்திலிருக்கிற விளக்குப்போலவும்

அசைவறவிருந்தார்கள். அப்போது அந்தச்சபை எப்படியிருந்த தென்னில், அலையொழிந்த சமுத்திரம்போல ஓசையடங்கியிருந்தது. அப்படி ஓசையடங்கி யிருந்ததென்று விரித்தது வாதிகள் வினுவொழிந்து மேல்மாணுக்கன் வினு வருதலினெனக் கொள்க. முன்பு சைவாசாரியரைத் தொழுது அஞ்சலியஸ்தனுய் நின்ற பக்குவியானவன் பின்புந் தண்டம்பண்ணி ஒரு விண்ணப்பஞ்செய்யாநின்ருன். தேவரீர் இங்ஙனந் திருவாய்மலர்ந்தருளிய உபதேசப்படியே அடியேன் இன்றுமுதற் கொலைசெய்தலையும் புலாலுண்ணுதலையும் விட்டுவிடுகிறேன். அடியேன் மனசில் இன்னும் ஒரு சங்கையுண்டு. அஃதென்னெனில், அடியேன் அறிந்த கொலைகளைச் செய்யாவிடினும், ஓடும்போதும் நடக்கும்போதும் என்னையறியாமல் ஒருசீவகொலை நேரிட்டால், அந்தத் தோஷத்தை நீக்கிக்கொள்ளுதற்கு உபாயம் யாது என்று கேட்டவளவில், அவனைநோக்கி மேற்கூறுகின்ருர்.

செய்துயிர்கட் கினிமைகொல்லா நோன்பியற்றும்
　வேலைகுரு சேவை தன்னுன்
வையகத்தா டறுமறியாக் கொலைமையதான்
　மக்களொடுன் மனையுண் டானு
முய்வதிலை நீயெவணம் வேறிதற்குன்
　மனைபிறர்த்தோய்ந் துறினக் காலைக்
கையகல விடுவதன்றிக் கொலவுமுளந்
　துணியுமதி காரத் தாலே.

உயிர்கட்கு இனிமைசெய்து கொல்லா நோன்பு இயற்றும் வேலை குரு சேவை தன்னுன் வையகத்தாடு அறியாக் கொலைமையது அறும். எ-து. தறுகட்டன்மை நீங்கிச் சர்வ சீவன்களிடத்துங் களைகண்ணுண்டாகிய கொல்லாவிரதியாய் நடந்து வருங்காலத்து உன்னையறியாமல் வந்த கொலைத்தோஷமானது வேறொருவிதத்தால் நாசத்தையடையும். அஃதெத்தாலென்னில், சற்குருவினது திருப்பாதத்தை நியமமாக வழிபட்டுச் செய்யும் அவனது ஏவலின் வலியாலெனக்கொள்க.

தறுகட்டன்மை நீங்கி யென்பதற்குப் பிரமாணம்: சிவதருமோத்தரம். "வருந்து மேபதம் வைப்பின் மரிக்குமே—பொருந்துமண்ணிற் புழுக்கண மென்றுளம்—வருந்தியேபத மெல்லென வைத்திடா—தருந்த வத்தைப் பிரிந்த வரக்கனும்." என்றும், மற்றும் வருவனவற்றுற்காண்க. கொல்லாவிரதமென்பதற்குப் பிரமாணம்: ஔவையார். "நோன்பென்பதுவே கொன்று தின்னாமை." என்றும், மற்றும் வருவனவற்றுற்காண்க.

சற்சீடன் அறியாமற் செய்ததோஷத்தையும் ஆசாரியன் நீக்குவனென்பதற்குப் பிரமாணம்: சிவதருமோத்தரம். "விண்ணுளார்நரர் மற்றை விலங்குமே—பண்ணும் பாவ பலத்தைக் கொடுப்பவன்—திண்ணமே யமன் றேசிகன் றீர்த்திடும்—பண்ணிற் பாவவிதஞ் சிவ பத்தரும்." என்றும், மற்றும் வருவனவற்றுற்காண்க.

இப்படித் தேவரீர் கற்பித்த திருவாக்கின்படியே என்னுடைய ஸ்திரீயும் புத்திரரும் இதற்கு ஒவ்வாவிடினும், நான்மாத்திரம் சரீரபரியந்தம் தவறுமல் நடந்துவருகிறேனென்று விண்ணப்பஞ்செய்ய, மேலுத்தரங் கூறுகின்றார்.

ஊன் உன் மனைமக்களொடு உண்டாலும் நீ உய்வது இலை. எ-து. மாமிசத்தை உன்னுடையஸ்திரீ புத்திரர் உண்டாலும் அந்தப்பாவத்தால் நீயும் நரகத்தழுந்துதல் சத்தியம்.

மேல்வினு. எனக்கும் என்னுடைய ஸ்திரீ புத்திரருக்கும் ஏகசரீரமாய் ஊணுறக்கம் ஒன்றுயிருக்கின்றனவோ? அவர்கள் வேறு நான்வேறு. அவர்கள் செய்த பாவத்தை நான் அநுபவிக்க வேண்டியதென்?

மேல்விடை. நீ எவணம் இதற்கு வேறு உன்மனை பிறர்த் தோய்ந்து உறின் அக்காலைக் கையகல விடுவதன்றிக் கொலவும் உளம் துணியும் அதிகாரத்தாலே. எ-து. நீ எந்தப் பிரகாரம் இதுகாலத்தளவில் ஸ்திரீ புத்திரர்க்கும் எனக்கும் பேதமென்று

சொல்லினை? அதுபழுது. அதேனென்னில், உலகத்தின்கண்ணே ஒருவன் தன்னுடைய ஸ்திரீ பரபுருஷசங்கமம் பண்ணக் கண்டகாலையில், அவளைவிட்டுத் துறக்கவேண்டுமென்கிற விதியையும் பாராமல், நான் பிராணனுடனிருக்க இப்படி அழிவு செய்யலாவதென்ன? இவளைக் கொன்றுபோடுகிறேனென்று நெஞ்சிற்றுணிதலினானும், இங்ஙனம் ஸ்திரீ புத்திரர் பிறரிடத்திற்செய்த குற்றுகுற்றங்களுக்கும் யானென முன்னிற்கும் அதிகாரத்தன்மையுடையோனாதலினானும், உன்னுடைய ஸ்திரீ புத்திரர் செய்த பாவாதிகளுக்கு உண்டான பலம் நீயும் அனுபவிப்பது சித்தமென்றறிவாய்.

ஸ்திரீ விதி தவறில் அவளைவிட்டுத் துறக்கவேண்டுமென்பதற்குப் பிரமாணம்: சிவதருமோத்தரம். "அறிந்து மனையாளவலத்தை யவளைத் துறவா தணைவானுஞ்—சிறந்த குரவன் மனைவியொடு செறிந்தார்க் கிணையே செப்பியவித்—திறந்தான் மகபா தகமதனிற் சிறுமைத் ததனாற் பாதகமென்—றறைந்தாமிதனுக் கணித்தான வுபபா தகமுமினி யறைவாம்." என்றும், காசிகாண்டம். "பொருவில் கற்பின் வழீஇய புன்மங்கையா—ருரியமூன்று மரபினுள் ளோரையும்—வெருவந் தேங்க விழுங்கியுமிழ்கிலா—வெரியுந் தீநரகிற்குடி யேற்று வார்." அன்றியும், "நெறியிகழ்ந்து தன்மரபினி னீரல செய்யு—மறுவின் மைந்தரைப் பெறுதலின் மகப்பெறு தனுருற்—றுறைத னன்று மற்றொருவனு லுயர்குல முழுதுஞ்—சிறுமை யெய்திலாங் கவற்றுறந் துறுபழி தீர்ப்பார்." அன்றியும், "என்ன நூற்கடல் கடந்துளோ ருரைப்பதை யெண்ணி—முன்னர் நின்றுபொய் மொழிந்திடு முகிழ்முலைத் துவர்வாய்ப்—பன்னி தன்னொடு மகத்துறந் தந்தண்ன் பரிந்தோர்—பொன்ன வார்முலைப் பூவையைக் கடிமணம் புரிந்தான்." என்றும, "தேசிகர்மன் னவர் கொழுநர் சீடரைத்தங் குடிகளைத்தோய் தேவிமாரை—யாசில்விதிப் படிநடக்கிற் காக்கபிழைத் திடில் வெறுத்திட் டகலநீக்க—மாசுடையோ ரெனவறிந்து மவரைவெறுத் திலாதிணங்கி வாழ்விப்

பாரேற்—பேசியதீ தொருசிறிதுந் தமக்கிலவா யினுநரகிற் பிழையா தாழ்வார்.'' என்றும், மற்றும் வருவனவற்றுற் காண்க.

ஸ்திரீகள் பிழைசெய்யிற் றுறப்பதல்லது கொல்லவொண்ணுதென்பதற்குப் பிரமாணம்: அருட்பிரகாசம். "இல்லத் திருக்கு மனைதீ வினைகளி யற்றினறஞ்—சொல்லித் தடுக்க வடங்கா விடிற்பின் றுறந்து தன்னெஞ்—செல்லைக் குரிய நிலைசார்ந் தொழுக விதன்றி யன்னுர்க்—கொல்லத் துணிபுல்ல ரன்றே சென் றாழிற் குளிப்பவரே.'' என்றும், "விண்டுள தன்மலனுபதில் லோர்ந்து விரைந்ததனை—யுண்டிடு வாருள ரோசொலுந்தீமை யுனித்துறந்த—பெண்டிர்மற் றுருடன் கூடியென் பெண்கொலை பின்னரகிற் — கொண்டு சுழற்றுமென் றெண்ணுது கொல்லுங் கொடியவரே.'' என்றும், மற்றும் வருவனவற்றுற் கண்டுகொள்க.

இ-து. அபுத்தி பூருவத்தால் வந்ததோஷங் குருசேவையால் நீங்குமென்றும், யாவனெருவனும் தன்னுடைய ஸ்திரீ புத்திரருக்குத் தான் அதிகாரியாகையால் அவர்களையுந் தருமத்தின் வழியே ஆக்கினைசெய்து நடப்பிக்கவேண்டுமென்றும், கூறியது.

இப்படிக் கூறிய சைவசித்தாந்தியை நோக்கி மேலும் அந்தப் பக்குவியானவன் விண்ணப்பஞ் செய்யாநின்றுன்.

இங்ஙனம் தேவரீர் திருவாய்மலர்ந்தருளியபடியே என்னுடைய பாசக்குழாங்களாகிய பலருள் யாரொருவர் என்னினைவின்படி வராவிடினும் எனதாக்கினைக்கு உட்பட்டிருந்துள்ள ஸ்திரீ புத்திரரைத் தண்டித்து மாமிசபக்ஷணத்தை நிறுத்துவிக்கின்றேன். அவர்கள் நில்லாவிடின் அவர்களைவிட்டுத் துறந்தாயினும் தருமத்தின் வழியே தவருமல் நிற்கின்றேன் என்றவளவில், சித்தாந்தியார் அவனைநோக்கிப் பின்னுமோருத்தரங் கூறுகின்றுர்.

தாலமிசை யுனதுசுற்றத் தவர்கொலைமை
செயினுனக்குஞ் சாரு நீவே

றேனுனது குலநெறியை விடில்லவரோ
டுரைபகரா திகழ்ந்தன் னோர்தம்
பாலுணவா திகடவிர்வ தெனையதுபோன்
மறம்புரிவோர் பற்றை நீத்துண்
மாலதனாற் கொலைமையற வறம்புரிவோர்
தொடர்புறினல் வழிசார் வாயால்.

தாலமிசை உனது சுற்றத்தவர் கொலைமை செயின் உனக்கும் சாரும். எ-து. பூமியின்கண்ணே நீயும் உன்னுடைய ஸ்திரீ புத்திரரும் கொலைமை சாராவிடினும், உன்னுடைய மாதா பிதா தம்பி தமையன் தங்கை தமக்கை மாமன் மைத்துனன் மற்றுமுண்டாகிய சுற்றத்தார் கொலைமைசெய்தார்களாயினும், அந்தப் பாவத்தால் நீயும் நரகத்தை அநுபவிக்கவேண்டும்.

மேல்வினா. ஸ்திரீ புத்திரர்கள் என்னுடைய ஆக்கினைக்கு உட்பட்டவராதலின் அவர்களைத் தண்டித்துத் தருமத்தின் வழி நடப்பியாவிடில் எனக்குத் தோஷமென்பது நிச்சயம். மற்றுமுள்ளவர்கள் என்னுடைய சொற்கு அடங்கினவர்களல்லாமலிருக்க, அவர்கள்செய்த பாவத்தால் எனக்கு நரகம்வரவேண்டியது எப்படி என்ற பக்குவியை நோக்கி மேலருளிச்செய்கின்றார்.

மேல்விடை. நீவேறேல் உனது குலநெறியை விடில் அவரோடு உரைபகராது இகழ்ந்து அன்னோர்தம் பால் உணவாதிகள் தவிர்வது எனை? அதுபோல் மறம்புரிவோர் பற்றை நீத்து உள்மாலதனால் கொலைமை அற அறம்புரிவோர் தொடர்பு உறின் நல்வழி சார்வாயால். எ-து. உன்னுடைய சுற்றத்தார் உன்னுடைய சொற்கு அடங்கார்களென்றும் அவர்கள் வேறு நான் வேறென்றுஞ் சொல்லுவையாகில், உன்னுடைய குலாசாரத்தினின்றும் உன்னுடைய சுற்றத்தாரிற் சிலர் தவறி நடந்த காலத்தில் அவர்களுடைய சினேகத்தையும் பற்றறவிட்டு அவர்களை நீத்து எவ்விடத்தும் பேசுதலொழிந்து அவர்கள் வீட்டில் அன்னபானாதிகளை விஷமெனக்கண்டு உன்னுடைய ஸ்திரீ புத்தி

ரர்களும் அவர்கள் மனைவழி வாயில்வழி சொப்பனத்தாயினும் போகாதபடி நிறுத்தி மற்றுள்ள சுற்றத்தாரிற் சிலர் அவர்களோடு பேசுகினும் எனக்கு வேண்டாதவர்களோடு பேசலாவதென்னென்று அவர்களுடைய சிநேகத்தையும் நீ விடுவதென்? இப்படிப் பிரயோசனமற்ற அற்பகாரியத்தளவில் மனம் வைத்து வெறுத்த நீ மேலைக்கு நரகத்தில் வீழ்த்தி மாறாத துயரத்தைத் தருவதாகிய சீவகொலையாதி பாவங்களைப் பண்ணுமவரிடத்திற் சிநேகிப்பதென்? ஆதலின் யாரொருவராயினுங் கொலையாதிக்கு அஞ்சாத பாவியாயில் தன்னவனென்றும் பிறரென்றும் பாராமல் உடனே விட்டுநீங்கி முத்தியை அடையவேண்டுமென்னு மனேவிச்சையினாலே கொல்லாமையாகிய பேரறம் புரிவோர் யாவராயினும் அவரோடு மிகுத்த சிநேகம் புரிவாயாகில், நல்ல அறத்தின் வழியை எளிதின் அடைவாய். எ - று.

இதற்குப் பிரமாணம்: திருவள்ளுவர். "மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்து—மொருவுக வொப்பிலார் நட்பு." என்றும், ஔவையார். "நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க—நல்லார்சொற் கேட்பதுவு நன்றே - நல்லார்—குணங்க ளுரைப்பதுவு நன்றே யவரோ—டிணங்கி யிருப்பதுவு நன்று." அன்றியும், "தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற—தீயார் சொற் கேட்பதுவுந் தீதே - தீயார்—குணங்க ளுரைப்பதுவுந் தீதே யவரோ—டிணங்கி யிருப்பதுவுந் தீது." என்றும், மற்றும் வருவனவற்றாற் காண்க.

இ-து. கொல்லாவிரதியாயினேன் யாவராயினுங் கொலையாதிகளுக்கு அஞ்சாத பாவிகளைக் கண்டவிடத்தும் அவரது சிநேகத்தை உடனே விடவேண்டுமென்று கூறியது. (உக)

இப்படித் தேவரீர் கற்பித்த திருவாக்கின்படி அடியேனும் என்னுடைய ஸ்திரீ புத்திராதிகளுங் கொல்லாமை புலாலுணவு நீங்கி நல்லோரைச் சிநேகித்துப் பாவிகளது சிநேகத்தைவிட்டு அசரபதார்த்தத்தைக் குருவாதி நால்வர்க்கும் முன்னூட்

டிப் பின்பு உண்டுவருகிறேன் என்றவளவில், அவனை நோக்கி மேற் சித்தாந்தியார் அருளிச்செய்வார்.

சார்வொழிகொம் மடியாதி தாவரத்தூ
 னுறழ்தருநாய்த் தன்மை யோரை
நேரலைநீ கேண்முடிவிவ் வரும்புரம்பொய்
 வீணுளா நீக்கேல் வாணுள்
பார்மிசைநீ புரியலைமெய்த் தவர்குழுவுற்
 றறமவர்சொற் படிசெய் நாளுஞ்
சேருமனே சுத்திபர ஞானமுற்று
 னடைவைமுத்தித் திருநா டன்றே.

தாவரத்தும் கொம்மடியாதி சார்வு ஒழி. எ-து. அப்படிச் செய்யுமுறைமைசெய்து அசரபதார்த்தத்தை உண்பாயாயினும் அவற்றின்கண்ணும் நீக்கவேண்டியன உண்டு. அவையாவையெனில், கொம்மட்டிக்காய் கடைச்சரக்குக்களான உள்ளி வெள்ளுள்ளி முதலியவைகள்.

இதற்குப்பிரமாணம்: சைவசமயநெறி. "உள்ளிவெள்ளுள்ளி யுதும்பரஞ் செம்முருங்கை—வள்ளிபசளைமதுக்கோவை." "வெண்கத்தரிக்காய் தேற்றுங்காய்வில் வக்காயு—முண்பதல கொம்மடிக்காயும்." "எண்ணெய்ப்பிண்ணாக்குப் பெரும்பீர்க் கெனுமிவையு—முண்ணே லுருண்டசுரையும்." என்றும், மற்றும் வருவனவற்றாற்காண்க.

மேல்வினு. அசரபதார்த்தத்தினும் தோஷம் உளதோ? மேல்விடை. ஊன் உறழ்தரும். எ-து. கொம்மட்டியாதி நிஷேதபதார்த்தமாதலின் புலாலினை யொக்குமெனக் கொள்க. நீ முடிவுகேள் நாய்த்தன்மையோரை நேரலை. எ-து. முடிவாகிய பொருளிதுவென்று சொல்வோம் நீகேள் - ஒருவேட்டைக்காரன் நாயைப் பிடித்துவந்து பொற்சங்கிலியினுல் கட்டிவைத்துக்கொண்டு பாற்சோற்றையிட்டு வளர்த்தாலும் அச்சங்கிலி நெகிழ்ந்தமாத்திரத்தின் மலத்தினைப் பழையதோலினை முரட்டெலும்புக

லைக் கௌவிக்கொண்டு அருகாகவருகிற மனுஷரைக்கண்டு உறுமுதல்போல, ஒருவன் பாவமிது புண்ணியமிதுவென்று சொல்லுமளவுங் கேட்டிருந்து அவ்விடம்விட்டு நீங்கினமாத்திரத்தில் பின்னும் பாவத்தைச் செய்துகொண்டு நல்வழி காட்டுவாரைக் காணுந்தோறும் வெறுப்புடையராயிருந்து உள்ளலோகாயதருறுதி மூடர்களைப் போலாகாது கொலை பாவமென்று கூறியமாத்திரத்திற் கொலைசெய்குதற்கு அஞ்சு.

இங்ஙனம் நாய்த்தன்மையோரென்றதற்குப் பிரமாணம் நாலடி. "அவ்விய மில்லா ரறத்தா றுரைக்குங்காற்—செவ்வியரல்லார் செவி கொடுத்துங் கேட்கிலார்—கௌவித்தோ லின்னுங் குணுங்கர்நாய் பாற்சோற்றின்—செவ்வி கொள றேற்றாதாங்கு." என்றும், நீதிசாரம். "கன்மமே பூரித்த காயத்தோர் தஞ்செவியிற்—றன்மநூல் புக்காலுந் தங்காதே-சன்மமெலும்—புண்டுசமிக்குநா யூணுவி னெய்யதனை—யுண்டு சமிக்குமோ வோது." என்றும், மற்றும் வருவனவற்றுற் காண்க.

இவ்வரும்புரம் பொய் வாணுள் வீணுளா நீக்கேல் பாரிசை நீ புரியலை மெய்த் தவர் குழு உற்று அவர் சொற்படி அறம் நாளும் செய் மனோசுத்தி பரஞானம் சேரும் அத்தால் முத்தித் திருநாடு அடைவை. எ-து. சென்மாந்தரங்களிற் செய்துள்ள தபோபலத்தால் அரிதாய் இங்ஙனங் கிடைத்துள்ள இந்தச்சரீரம் நீர்க்குமிழிக்கொப்பாய் அழிவதாதலின் இது உள்ளபொழுதே செய்யவேண்டிய அறங்களைச் செய்துமுடியாது இச்சரீரத்துக்கு அருந்தல் பொருந்தலைக் கூட்டுதல் தொழிலாக இதற்கு அமைத்தநாள்களை வீணிற்கழித்து யமதண்டனைக்கு உட்படாவகை அறஞ்செய்வாய். செய்யுமிடத்து ஒன்றைப் புண்ணியமென்றெண்ணிச் செய்யப் பாவமாயினும் ஆகும். பாவமென்றெண்ணி நீங்கப் புண்ணியமாயிருப்பினும் இருக்கும். ஆதலின் உனது சுதந்தரத்தாற் செய்தலொழிந்து பூமியின்கண்ணே வேதாகமவிதி தவருது கொலையாதிகளை நீங்கிய 'சிவ

ஞானியாரது கூட்டத்தினை அணுகிப் பத்திமையான் வழிபட்டு அவர்களது திருவாக்கின்படியே தீவினைகளை நீங்கி நல்வினைகளைச் செய்யக்கடவாய். இங்ஙனம் நாடோறும் வழுவாதுசெய்குவையாயின் உன்னுடையமனசு நிருமலமாம். அதனாற் பாரம்பரியத்திற் சிவஞானமுமுண்டாம். அந்த ஞானத்தால் மோட்சமாகிய பெண்ணிருந்து வாழும் பூரணதேசமடைகுவை. எ - று.

மானுடசரீரமடைத லரிதென்பதற்குப் பிரமாணம்: திருமந்திரம். "பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்—பெறுதற் கரிய பிரானடி சேராப்—பெறுதற் கரிய பிராணிக ளெல்லாம்—பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே." என்றும், சிவஞானசித்தி. "அண்டசஞ் சுவேதசங்க ளுற்பிச்சஞ் சராயு சத்தோ—டெண்டரு நாலெண்பத்து நான்குநூ றுயிரத்தா—னுண்டுபல் யோனியெல்லா மொழித்து மானுடத்து தித்தல்—கண்டிடிற் கடலைக் கையா னீந்தினன் காரியங்காண்." என்றும், அறிவானந்தசித்தி. "தேரிற் சதுர யுகமிரண் டாயிர நாட்டிங்க ளாண்—டோரினங் நூற்றி லயன்மாண் டுகாந்தமு முற்றுத் தென்பாற்—சேரு நுகத்துளை யின்வடபாற்கழி செல்லெளிது—சாரும் பிறப்பொழித் திம்மானுடத்திற் சனிக்கரிதே." என்றும், மற்றும் வருவனவற்றுற் காண்க.

யாக்கையாவது அநித்தியமாதலில் விரைந்தறஞ்செய்யவேண்டுமென்பதற்குப் பிரமாணம்: திருவள்ளுவர். "நாச்செற்று விக்குண்மேல் வாராமு னல்வினை—மேற்சென்று செய்யப்படும்." என்றும், திருமந்திரம். "இக்காய நீக்கி யினியொரு காயத்திற்—புக்குப் பிறவாமற் போம்வழி நாடுமி—னெக்காலத் திவ்வுடல் வந்தெமக் கானதென்—றக்காலையுன்ன வருள்பெறலாமே." என்றும், திருநாவுக்கரசுநாயனார் தேவாரம். "நடலை வாழ்வுகொண் டென்செய்திர் நாணிலீர்—சுடலைசேர்வது சொற்பிரமாணமே—கடலி னஞ்சமுதுண்டவர் கைவிட்டா—லுடலினார்கிடந் தூர்முனி பண்டமே." என்றும், சுந்தரமூர்த்தி நாயு

ஞர் தேவாரம். "வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்—பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான—ருழாதறஞ் செய்ம்மின்றடங் கண்ணான்மல ரோனுங்—கீழ்மேலுற நின்றான் றிருக்கேதார மெனீரே." என்றும், சிவஞானசித்தி. "கருவினு ளழிவ தாயுங் கழிந்திடா தழிவ தாயும்—பரிணமித் தழிவ தாயும் பாலனா யழிவ தாயுந்—தருணனா யழிவ தாயுந் தானரைத் தழிவ தாயு—முருவமே யழிவே யானா லுள்ளபோதே பாருய்ய." என்றும், சிவதருமோத்தரம். "அழியு மாக்கைகொ டேயழி யாப்பதங்—கெழுமு வார்பெற்ற தேநல்லகேள்வியு—மழியு மாக்கை தனையழி யாதென—விழுவ ரோநரகக்குழி வெய்யரே." என்றும், பட்டணத்துப்பிள்ளை. "இன்றிருந்து நாளையிறக்குந் தொழிலுடைய—புன்றலைய மாக்கள் புகழ்வரோ - வென்றிமழு — வாளுடையான் றெய்வ மருதுடையானுயேனை—யாளுடையான் செம்பொனடி." என்றும், போதாந்திஞகரம். "காய மானது நீரிடைக் குமிழிபோற் கழியுமென்றறிந்தேயு—மாயு மூனினை மெய்யென முழுமல வயிறது வளர்த்தற்கே—யாயதிவினை பற்பல மருவியங் கவைசெய்து கழிந்துவிட் — டேயுமாறெனை யாண்டவ னென்பதற் கென்செய்முடிந்தேனே." என்றும், நாலடி. "புன்னுனிமேனீர் போனிலையாமை யென்றெண்ணி — யின்னினியே செய்கவறவினை - யின்னினியே — நின்றா னிருந்தான் கிடந்தான்றன் கேளலறச — சென்றா னெனப்படுதலால்." என்றும், மற்றும் வருவனவற்றுற் கண்டுகொள்க.

அறமும் பெரியோர் சொன்ன நெறியே செய்யவேண்டுமென்பதற்குப் பிரமாணம்: சிவானந்தமாலை. "ஆர்வமென்று மெறத்தை யாரிடத்துங் கொள்ளாதே—சாரமுள்ள தெய்வவிடத்துந் தான்கொண்டு - தீரவுணர்—நல்லோர்தஞ் சொல்லை நடுவாம நன்னெஞ்சே—நில்லா யிதுவே நிலை." என்றும், ஔவையார். "மூத்தோர் சொன்ன வார்த்தை யமிர்தம்." என்றும், நாலடி. "அறிமி னறநெறி யஞ்சுமின் கூற்றம் — பொருள்

பிறர்கடுஞ் சொற்போற்று மின்வஞ்சம்—வெறுமின் வினைதீயார் கேண்மையெஞ் ஞான்றும்—பெறுமின் பெரியோர் வாய்ச் சொல்.'' என்றும், மற்றும் வருவனவற்றுற் காண்க.

பெரியோரைச் சார்தலின் முத்தி கைகூடுமென்பதற்குப் பிரமாணம்: அருட்பிரகாசம். ''கொலையாதி யோரைந்துங் காமாதியாறுங் குலைந்துநிலை—நிலையா துருவென்கை தோன்றி யுயிருணிறைந்தமலைச்—சிலையா தியுமெளி தொன்றுவனெங்குந் திகழ்ந்திரண்டற்—றலையாதிருக்கும் பெரியோர்தங் கூட்ட மடைந்தவர்க்கே.'' என்றும், போதரத்னுகரம். ''நித்தனாரு ளியநெறி தெரிவது நிமலன்றன் கழலென்னுஞ்—சுத்த வாரமு துறுசுவை தருவதுஞ் சொருபனற் கழற்கன்பாம்—பித்த தாகிய பெருநலம் விளைவதும் பேரெழி லடியாரா—லத்தினுலடியாரவை கூட்டிய வதிசய மளவன்றே.'' என்றும், திருவாசகம். ''உடையாளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி—யடியே னடுவுளிருவீரு மிருப்ப தானு லடியேனுன்—னடியார் நடுவு ளிருக்குமரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்—முடியா முதலே யென்கருத்து முடியும்வண்ண முன்னின்றே.'' என்றும், மற்றும் வருவனவற்றுற்காண்க.

இ-து. அசரபதார்த்தத்தினும் நிஷேதபதார்த்தங்களை விடவேண்டுமென்றும், மேலையாதொருகாரியமும் நாதாக்களது திருவாக்கின்படி நடக்கவேண்டுமென்றும், அப்படி நடக்கிற் பாரம்பரியமாய் முத்திகைகூடுமென்றும், கூறியது.

கொலைமறுத்தல் மூலமும் உரையும்

முற்றுப்பெற்றன.